# உதயன்

விலை ரூபா 15.00

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 05 புதன்கிழமை (18.02.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 083


# அடிப்படை ஜனநாயகப் பண்பியல்புகள் ஜனாதிபதித் தேர்தலில் பெரிதும் பாதிப்பு

## பொதுநலவாய கண்காணிப்புக்குழு அறிக்கை

கொழும்பு, பெப்ரவரி 17

**இலங்கையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் ஜனநாயகத் தேர்தலொன்றிற்கான முக்கிய அடிப்படைப் பண்பியல்புகளை ஒட்டுமொத்தமாகக் கொண்டிருக்கவில்லை எனத் தேர்தலைக் கண்காணித்த பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்புக்குழு தனது இறுதி அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது.**

பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்புக்குழுவின் இறுதி அறிக்கை பற்றிய இத்தகவலை அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்த பொது நலவாய நிபுணர் குழுவின் இறுதி அறிக்கையை நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளியிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனை அவர் வெளிப் படுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு: -

(23ஆம் பக்கம் பார்க்க)

## தேரர்களின் மாநாடு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப்.17

கண்டியில் நாளை (18ஆம் திகதி) நடைபெறவிருந்த பௌத்த தேரர்களின் மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

காலவரையறையின்றி குறித்த சங்க சம்மேளனக் கூட்டத் தொடர் ஒத்திவைக் கப்படுகிறது என கண்டி மல்வத்த, அஸ் கிரிய மற்றும் ராமன்ய பீடாதிபதிகள் கூட் டாக அறிவித்துள்ளனர்.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கண்டி மஹா மலுவவில் இந்தக் மாநாடு நடத்தப் படவிருந்தது. நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ் நிலையையும், பௌத்த பிக்குகளின் பாது காப்பையும் கருத் திற்கொண்டு இந்தத் தீர் மானம் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (அ-சி)

## இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்றம் ஏப்ரலுக்குள்; அரசு முன்னர் தெரிவித்த காலக்கெடுவை நீடித்துள்ளது

### ஐ.நா. மனிதாபிமான அலுவலகம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 17

இலங்கையில் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களைக் கடந்த ஜனவரிக்குள் முழுமையாக மீளக் குடியேற்றுவது என்ற தமது கால எல்லையைத் தவறவிட்டுள்ள அதிகாரிகள், இப்போது ஏப்ரல் மாதத்துக்குள் மக்களை மீளக்குடியேற்றுவோம் என்ற புதிய வாக்குறுதியை வழங்குகின்றனர் என ஐ.நாவின் மனிதாபிமான அலுவலகத்தின் செய்திச் சேவையான 'ஐரின்' தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அச்செய்திச் சேவை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடபகுதியில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் பூர்த்தியடையாததன் காரணமாகவே மீள்குடியேற்றம் தாமதமடைவதாக மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

எமது மீள்குடியேற்ற நடவடிக்கைகளை இது பாதித்துள்ளது. மக்கள் மீளக் குடியேறுவதற்குப் பாதுகாப்பான இடமாக அதனை மாற்றுவதற்கு நிலக்கண்ணி வெடி

(24ஆம் பக்கம் பார்க்க)


கல்விச் சுடர்

உள்ளே

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான உயிரியல் மாதிரி வினாத்தாள்


## நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு நேற்று முதல் முழுமையாக நீக்கம்

### ஆனால் அமைச்சர்களுக்கு விதிவிலக்கு

கொழும்பு, பெப். 17

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு நேற்று முழுமையாக நீக்கப்பட்டுள்ளது.

எனினும் அமைச்சர்களுக்கும் பிரதி அமைச்சர்களுக்கும் தொடர்ந்து பாதுகாப்பு வழங்கப்படும்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட நிலையில் அனைவரும் சாதாரண பொதுமக்கள் என்

(24ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளைச் சாய்த்தாலும் தமிழீழக் கோட்பாடு மறையவில்லை!

### இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரியா கூறுகிறார்

கொழும்பு, பெப். 17

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்ட போதும், தமிழீழ கோட்பாடு இன்னும் அழியவில்லை - என்று இராணுவ தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பகுதியில் உள்ள கல்லடி, தொப்பிகல, வாகரை, புனானை இராணுவ முகாம்களுக்கு கடந்த வாரம் விஜயம் செய்திருந்த அவர், இராணுவத்தினர் மத்தியில் பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தவர்களும், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களும் இன்னமும் தமிழீழம் குறித்து விவாதித்து வருகின்றனர் என எங்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்ற உத்தரவையும் புறக்கணித்து மனோ, ஜெயலத்தின் பாதுகாப்பு வாபஸ்

கொழும்பு, பெப். 17

தமது பாதுகாப்புத் தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய உத்தரவை மீறி தங்களுக்கான பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டமை அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனோகணேசனும் ஜெயலத் ஜெயவர்த்தனாவும் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவுக்கு கடி தங்களை அனுப்பியுள்ளனர்.

ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் எழுதியுள்ள கடிதத்தில்-

எனது பாதுகாப்பு தொடர்பிலான வழக்கு முடியும் வரை எனக்கு எட்டு பாதுகாப்பு அதி

(24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா கைது பின்னணி குறித்து இந்தியாவுக்கு கோத்தபாய விளக்குவார்

### ஐந்து நாள் பயணமாக அவர் அங்கு விஜயம்

கொழும்பு, பெப். 17

இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ ஐந்து நாள் பயணமாக இந்தியா சென்றிருக்கின்றார்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டு இராணுவ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட இருக்கின்றமை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைக

(24ஆம் பக்கம் பார்க்க)

### ஜெனரல் பொன்சேகா சார்பில் உயர்நீதிமன்றத்தில்

## ஜனாதிபதித் தேர்தல் முடிவை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல்

கொழும்பு, பெப். 17

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவை ஆட்சேபித்து, எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் நேற்று தேர்தல் ஆட்சேபனை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மோசடியான முறையில் இடம்பெற்றது என்றும் -

கணனி கையாள்கையில் மோசடிகள் இடம்

(24ஆம் பக்கம் பார்க்க)


சுண்ணம்புக்கல் கலவையற்றதால் நிப்போன் சிமெந்து நன்கு பற்றிக்கொள்ளும் சக்தி வாய்ந்தது




NIPPON CEMENT

வாழ்வோடு இணைந்தது

SLS 107

TOKYO CEMENT GROUP


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மகஜன சம்பத' சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, பெப். 17

தேசிய லொத்தர் சபையின் 'மகஜன'சம்பத' 2207 ஆம் இலக்க நேற்று நடைபெற்ற சீட்டிழுப்பில் 'X' என்ற ஆங்கில எழுத்தும் 0/0/6/2/3/3 என்ற இலக்கங்கள் அதிஷ்டத்துக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 0/0/6/2/3/3 எனும் இலக்கங்களை கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் இருவருக்கு முதலாம் பரிசாக தலா 20 இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

0/6/2/3/3 எனும் இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

6/2/3/3 எனும் இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 145 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா 10 ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

2/3/3 எனும் இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,409 பேருக்கு நான்காம் பரிசாக தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/3 எனும் இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14,274 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

3 எனும் இலக்கத்தைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 143,322 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா 20 ரூபா கிடைக்கவுள்ளது.

வலமிருந்து இடமாக இலக்க அமைப்பின் பிரகாரம் 0/0/6/2/3 எனும் இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14 பேருக்கு ஏழாம் பரிசாக தலா 10 ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

0/0/6/2 எனும் இலக்கங்களை கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 141 பேருக்கு எட்டாம் பரிசாக தலா 1,000 ரூபா கிடைக்கவுள்ளது.

0/0/6 எனும் இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1408 பேருக்கு 9 ஆம் பரிசாகத் தலா 100 ரூபா கிடைக்கவுள்ளது.

0/0 எனும் இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 14,153 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா 50 ரூபா கிடைக்கவுள்ளது.

'X' எனும் ஆங்கில எழுத்தைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 56,665 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா 20 ரூபா கிடைக்கவுள்ளது.

(6)


வெறுவெளி அரங்கக்குழு

மெய்ப்பாடு
Meippadu

அரங்கச் சஞ்சிகை
வெளியீட்டு நிகழ்வு

காலம்: 17.02.2010 புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு
இடம்: நூலக கேட்போர் கூடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
தலைவர்: க.ரமணன்

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் என்.சண்முகலிங்கன் அவர்கள்
(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்:
பேராசிரியர் நா.ஞானகுமாரன் அவர்கள்
(கலைப்பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
கலாநிதி வ.என்.கிருஷ்ணவேணி அவர்கள்
(தலைவர், நுண்கலைத்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

நிகழ்ச்சிகள்
மங்கல விளக்கேற்றல் — மதிப்பீட்டுரை
தலைமையுரை — ஏற்புரை
பிரதம விருந்தினர் உரையும் — நன்றியுரை
சஞ்சிகை வெளியீடும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
வெறு வெளி அரங்கக் குழு, நாடகமும் அரங்கக்கலைகளும், நுண்கலைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஊடக அனுசரணை உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வெற்றித்துளிர்
தரம் 1,2,3,4,5
அலகு பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் வெளிவந்துவிட்டன.
வினாத்தாள் தேவைப்படும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கல்வித்துறைசார் நிறுவனங்கள் மாணவர்கள், பெற்றோர்கள் பெற்றுக்கொள்ளலாம்.
சிவசன்
362, கே.கே.எஸ். வீதி,
(மனோகர தியேட்டர் சந்தி)
நாவலர் பாடசாலையடி.
T.P. 0773717353

வாழ்த்துகின்றோம்
ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட வடபிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்று யாழ்.நகர் தனிலே உன்னதமான சேவையை வழங்கவுள்ள
உயர்திரு.திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்
அவர்களை மனதாரப்பாராட்டி வாழ்த்துகிறோம்





அவர்கள் மேலும் பதவி உயர்வுகள் பெற்று சகல சௌபாக்கியங்களுடன் தன் குடும்பத்தினருடன் நீடூழி வாழ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.
பொ.கிருஷ்ணகுமார் குடும்பம், அத்தியடி, யாழ்ப்பாணம்.

தவறிவிட்டது
பழைய பொலிஸ் நிலைய வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த இராசேந்திரம் தர்சினி என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 828474499 V மற்றும் விசேட அடையாள அட்டை ஆகியவை வீட்டிலிருந்து சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலைக்குச் செல்லும் வழியில் தவறிவிட்டன.
கண்டெடுத்தவர்கள் பொ.கண்ணா (வெல்டர்), பழைய பொலிஸ் நிலைய வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியிலோ 0777177252 இலக்க தொலைபேசியில் தொடர்பு கொண்டோ ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

வீடு வாடகைக்கு தேவை
திருநெல்வேலி பகுதியில் பகுதியாகவோ முழுமையாகவோ வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 021 791 4064

தேவை
O/L, A/L படித்த நற் பழக்கம் உள்ள புடைவை வியாபாரம் பழக ஆர்வம் உள்ள ஆண், பெண் ஊழியர்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது. தொடர்பு:0772850753

வாடகைக்கு இடம் தேவை
யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்டதும், 1500 - 2000 சதுர அடி விஸ்தீரணத்தைக் கொண்டதும், இரண்டு கனரக வாகனங்கள் தரித்து நிற்கக்கூடிய வசதியைக் கொண்ட கட்டடம் வாடகைக்குத் தேவை.
தொடர்பு 0777536816

லாலா
சலவைப்பவுடர்
யாழ்.குடாநாட்டில் முதல் முதலாக மிகவும் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது.
எமது அன்பான மாணவச் செல்வங்களே உள்ளூர் உற்பத்திக்கு முன்னுரிமை கொடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.
லாலா சோப் தொழிற்சாலை, அச்சுவேலி.

தேவை
சிங்களம், ஆங்கிலம் கதைக்க தெரிந்த விடுதி பராமரிப்பாளர் மற்றும் மின்சார உபகரணங்கள் விற்பனையில் அனுபவம் உள்ள விற்பனையாளர், காசாளர் உடன் தேவை. விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.
வி./இ. - 3923


## சுன்னாகத்தில் யூனியன் வங்கி

யாழ்ப்பாணம், பெப். 17

யூனியன் வங்கியின் சுன்னாகம் கிளை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு, ரயில் நிலைய வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (ஒ-6)


பாராட்டி வாழ்த்துகின்றோம்





ஓய்வுநிலை மாவட்ட நீதிமன்ற பதிவாளராகிய
சிதம்பரி சந்திரலிங்கம்
அவர்கள் 11.01.2010 அன்று மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய எமது மாவட்ட நீதிபதி உயர்திரு. கௌரவ க. அரியநாயகம் ஐயா முன்பாக தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையை இட்டு மகிழ்ச்சியடைகிறோம்.
பல பொது விடயங்களில் பங்கு கொண்டு மக்களுக்கு சேவை செய்வதில் மிகவும் சிறந்த மனமுடையவர். இவரின் சேவை மேலும் மேலும் நீடித்துக் கொள்ள வேண்டும் என வாழ்த்துகின்றோம்.
வன்னியசிங்கம் விஜயபாலா
லாலா சோப் உரிமையாளர்.

யாழ்.மாவட்ட போதகர், ஊழியர்களின் ஐக்கியம்
விசேஷித்த கருத்தரங்கு
"தேவனின் இருதயத் துடிப்பு"
போதகர் லக்சி கனகசபை (AG அவுஸ்திரேலியா) அவர்கள் கலந்துகொள்கிறார்.
இடம்: அசெம்பிளி ஒவ்கோட் சேச், இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
காலம்: 18.02.2010, 19.02.2010. நேரம்: காலை 9மணி
பங்குபற்றுவோர்: போதகர், தேவ ஊழியர், தலைவர்கள்.
தகவல்: P.விஜியன் (கௌரவ காரியதரிசி)
(C/564895)

காணவில்லை
53/3, மவுன் காமல் வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
சீமோன் ததேயூ மைக்ஸ்மிலன் (மது)
வயது 12 இவரை (15.02.2010) நேற்று முன்தினம் காலையில் இருந்து காணவில்லை. இவரைப்பற்றிய தகவல் அறிந்தோர் மேலே குறிப்பிட்ட முகவரியுடனோ அல்லது கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொள்ளவும்.
T.P. 0779236965 தகவல்: தந்தை.

ஜேர்மன், Deutsch, Dutch French மொழி வகுப்புகள்
கொழும்பு விவேகானந்த அக்கடமியின் யாழ்.கிளையில் எம்பசி பரீட்சைகளுக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன.
அனுமதிகளுக்கு:
இல. 3, 2nd Lane (அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
பலாலி வீதி, யாழ்.நகரில் T.P. 021 321 6928, 0113133487, 077 4842464

இதய அஞ்சலி
எமது பாடசாலை அதிபர் திருமதி செந்தில்ராணி முத்துலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்
திருமதி சிவபாக்கியம் கந்தையா
அவர்கள் 15.02.2010 திங்கட்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர்கள், யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம்.

மரண அறிவித்தல்





மாணிக்கம் குமாரசாமி
இருபாலை விதானையார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் குமாரசாமி நேற்று (16.02.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - பறுவதம் தம்பதியினரின் மகனும் மனோன்மணி, காலஞ்சென்றவர்களான கனகமணி, சின்னப்பா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் சகுந்தலாதேவி (கனடா), காஞ்சனாதேவி, பிறேமாவதி (சுவிஸ்), ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குகதாஸ் (கனடா), அன்பழகன் (சுவிஸ்), றமேஸ் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் அஜித்தா, சஞ்ஜீவன், தனேஜா, செந்துஜா, செந்துஜன் ஆகியோரின் பேரனும் விசாலின் அன்புப் பூட்டனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2010) புதன்கிழமை மதியம் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செக்கடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
விதானையார் வீதி, இருபாலை. (94939) தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தேர்தல் குளறுபடிகள் தொடரும் போக்கு

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் இங்கு நடத்தப்பட்ட முறைமை குறித்தும், அதன் பெறுபேறுகள் குறித்தும் பல்வேறு சர்ச்சைகள் கிளப்பப்பட்டு வருகின்றன. இந்தப் பின்புலத்தில் இந்தத் தேர்தல் தொடர்பாகக் கண்காணிப்புக் குழுக்கள் - அதுவும் சர்வதேசக் கண்காணிப்புக் குழுக்கள் - வெளியிடும் அவதானிப்பு அறிவிப்புகள் மிக முக்கியமானவையாகின்றன.

இந்த ஜனாதிபதித் தேர்தலின் பார்வையாளர்களாகச் செயற்படக் கண்காணிப்புக் குழுக்களை அனுப்பும்படி ஐக்கிய நாடுகள் சபைக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இலங்கைத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அழைப்பு விடுத்தபோதிலும், அந்தக் கட்டமைப்புகள் அந்த அழைப்பை ஏற்று, உரிய குழுக்களை அனுப்பவில்லை. அதற்குப் பல்வேறு காரணங்கள் - விளக்கங்கள் - கூறப்பட்டன.

இந்தச் சூழலில் பொதுநலவாய அமைப்பு மட்டும் தனது கண்காணிப்புக் குழுவை அனுப்பியது. எனவே, இந்த ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணித்த - பக்கச் சார்பற்ற - சர்வதேச அமைப்பு என்ற முறையில் பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்பாளர்களின் அவதானிப்பு அறிக்கை மிக முக்கியத்துவம் பெறுகின்றது. அந்த அறிக்கையின் விவரம் இப்போது வெளியாகியிருக்கின்றது.

''ஜனாதிபதித் தேர்தலன்று - ஜனவரி 26 ஆம் திகதி - பொதுமக்கள் தமது வாக்குகளைத் தமது இச்சைப்படி அளிக்கக்கூடிய சுதந்திரமான, சுயாதீனமான நிலைமை பொதுவாக நிலவிய போதிலும் - முக்கியமாகத் தேர்தலுக்கு முந்திய காலப் பகுதியில் நீடித்த குறைபாடுகள் பெரும்பாலும் ஒரு ஜனநாயகத் தேர்தலின் அடிப்படைப் பண்பியல்புகள் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையே பிரதிபலித்து நிற்கின்றன.'' - என பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்பாளர்கள் தங்களது அறிக்கையில் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

அதைவிட, அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள - குறிப்பிட்டுக் காட்டியுள்ள - மற்றொரு விடயமும் மிக முக்கியமாக இங்கு அவதானிக்கப்படவேண்டியதாக உள்ளது.

''அதிகமான பிரச்சினைகள் இந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, புதிதாக அடையாளம் காணப்பட்டவையல்ல. முன்னவை தேர்தல்கள் பலவற்றின்போதும் இவை சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. ஆனால், அவை திருத்தப்படவில்லை. தொடர்கின்றன. அது மாத்திரமல்ல. இதனை இலங்கையின் தேர்தல்கள் ஆணையாளர் நாயகமே முன்னிலைப்படுத்தி அம்பலப்படுத்தியிருந்தார்.'' - என்று விசனத்தோடு பொதுநலவாய அமைப்பின் கண்காணிப்பாளர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

இந்த விடயங்கள் அவசரமாகவும், அவசியமாகவும் கவனித்துச் சீர்செய்யப்படவேண்டியவை. அவற்றைச் செய்வதற்கான சகல உதவி, ஒத்தாசைகளையும் வழங்குவதற்குப் பொதுநலவாய அமைப்புத் தயாராக இருக்கின்றது என்றும் கண்காணிப்பாளர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

தேர்தலின்போது ஜனநாயகப் பண்பியல்புகளுக்கு மாறாக இடம்பெற்றவை என இக்கண்காணிப்பாளர்கள் சுட்டிக்காட்டும் விடயங்களுக்கு - அத்தகைய அத்துமீறல்களுக்கு - முழுப்பொறுப்பும் ஏற்கவேண்டியது ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் அரசுத் தரப்புத்தான் என்பது கேள்விக்கு இடமேயில்லாத விவகாரமாகும்.

காலங்காலமாக ஜனநாயகத் தேர்தல்களைச் சீர்குலைக்கும் இத்தகைய போக்கு நீடிக்கும் நிலையில், அடுத்த ஒன்றரை மாதங்களில் பொதுத் தேர்தல் வேறு வருகின்றது.

அப்போதும் கூட இந்த ஜனநாயக முறைமைகள் - தேர்தல் பண்பியல்புகள் - சீராகக் கடைப்பிடிக்கப்படுமா என்பது பெரும்பாலும் கேள்விக்குறியே.

தேர்தல்களில் நேரடியாகப் பங்குபற்றிப் போட்டியிட்டு, முட்டிமோதி, அதன்மூலம் தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்ளவேண்டிய கட்டாயத்திலுள்ள அரசியல் தரப்புக்களே, இத் தேர்தல்கள் நேர்சீராகவும், ஜனநாயக அடிப்படைப் பண்புகளுக்கு அமைவாகவும் நடத்தப்படுகின்றமையை உறுதி செய்யவேண்டிய கடப்பாட்டிலும், பொறுப்பிலும், அதிகாரத்திலும் இருக்கின்றமைதான் இத்தகைய ஜனநாயக விரோதப்போக்குகள் தேர்தல்களை ஒட்டித் தாராளமாக அரங்கேறுகின்றமைக்கு முக்கிய காரணம் என்பது வெளிப்படையானது.

தேர்தலை ஜனநாயக முறைமையின்கீழ் நடத்துகின்றமையை உறுதிப்படுத்துவது தொடர்பான அதிகாரங்கள் அத்தேர்தலில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து ஒரேயடியாகப் பிடுங்கப்பட்டால் மட்டுமே இந்தப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை எட்டமுடியும் என்பதும் கூட துலாம்பரமானதுதான்.

இந்த இலக்கை அடையும் நோக்கில்தான் அரசமைப்புக்கு 17 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்தாமல், உதாசீனம் செய்து, புறக்கணித்து, கிடப்பில் தூக்கி வீசியிருக்கின்றது - இந்த அதிகாரங்களை சுயாதீனத் தரப்புகளிடம் ஒப்படைக்க விரும்பாமல் தனது கைவசம் வைத்திருக்கப் பேராசைப்பட்டு நிற்கும் - நாட்டின் நிறைவேற்று அதிகார ஆட்சிப்பீடம்.

அந்தத் தரப்பிடம் மனமாற்றம் வராத வரையில் - நாட்டின் அரசமைப்பில் இது தொடர்பாக உள்ள ஏற்பாட்டை முழு அளவில் நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற நீதி, நியாயப் போக்கு அத்தரப்புக்கு ஏற்படாதவரை - இந்தத் தேர்தல் குளறுபடிப் பிரச்சினைக்கு இப்போதைக்குத் தீர்வு காணமுடியாது.

# கிளிநொச்சி நீதிமன்றம் மார்ச் முதல் இயங்க ஆரம்பிக்கும் என அறிவிப்பு

## அமைச்சு அதிகாரிகள், பொறியியலாளர்கள் அங்கு செல்கின்றனர்

யாழ்ப்பாணம், பெப்.17

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் செயற்பட ஆரம்பிக்கும் என நீதி மற் றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இத்தகவல் அந்த அமைச்சினால் யாழ். மேல்நீதிமன்றத்துக்கு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நீதிமன்றத்தின் நீதிவானாக எஸ்.சிவகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதி அமைச்சு அதிகாரிகள் மற்றும் பொறியியலாளர்கள் கொண்ட குழு ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்குச் சென்று நீதிமன்றத்தை இயக்குவது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

முல்லைத்தீவுக்கும் இந்தக் குழு சென்று அங்கு நீதிமன்றத்தை இயங்கச் செய்வது தொடர்பாக ஆராயவுள்ளது.

இதேவேளை,

இந்தக்குழு நாளை யாழ்ப்பாணம் வருகின்றது.

மல்லாகம், ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் நீதிமன்றங்களுக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பது தொடர்பாக இக்குழு விரிவாக ஆராயவுள்ளது.

நீதிமன்றக் கட்டடத் தொகுதியுடனேயே நீதிபதிகளுக்கான வாசஸ்தலங்களையும் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நீதிமன்றக் கட்டடங்களை அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-1)

## 'ரிதிரேகா' சான்றிதழ்; மானிப்பாய் வாசிக்கு ரூ.10 லட்சம் பரிசு!

தேசிய சேமிப்பு வங்கியின் மானிப்பாய் கிளையில் கொள்வனவு செய்யப்பட்ட 'ரிதிரேகா' சான்றிதழுக்கு 62 ஆவது சீட்டிழுப்பில் முதலாவது பரிசாக பத்து லட்சம் ரூபா கிடைத்துள்ளது.

கட்டுடை, மானிப்பாயைச் சேர்ந்த ஒருவரே இந்தப் பரிசைப் பெற்ற அதிர்ஷ்டசாலியாவார் என கிளை முகாமையாளரர் தெரிவித்தார். (ஒ-1)

## இடம்பெயர்ந்தோருக்கான பெப்ரவரி மாத உலக உணவுத் திட்ட நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம், பெப்.17

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் 11.08.2006 இன் பின்னர் இடம்பெயர்ந்தவர்களுக்குமான பெப்ரவரி மாதத்துக்கான உலக உணவுத்திட்டத்தின் கீழான உலர்உணவு விநியோகம் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும்.

செயலகத் திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விநியோகத்துக்கான வழங்கற்கட்டளையை இன்று முதல் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை செயலகத்தில் பெற்று உடன் வியோகத்தை ஆரம்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

வழங்கற்கட்டளையைப் பெறுவதற்கு வரும் போது ஜனவரி மாத உணவு விநியோக முன்னேற்ற அறிக்கையையும் எடுத்து வருமாறு ப.நோ.கூ. சங்கங்களை அவர் கேட்டுள்ளார்.

இந்த விநியோகத்தை அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்ய வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஒ-1)

## சிகை ஒப்பனையாளர் கூட்டம் இன்று

வடமராட்சி, பெப்.17

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்க வடமராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு, அல்வாய் மாலுசந்தியில் உள்ள சங்கப்பணி மனையில் கிளைச் சங்கத் தலைவர் கி.வேணுகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (1-236)

## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், பெப்.17

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த 'டிராக்டர்' சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்தமைக்காக 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 2 மாதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் மணலை பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டார்.

இதேவேளை, வாகன சாரதிக்கு சாரதிய அனுமதிப்பத்திரம் இன்மை தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சாரதிக்கு 2,500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒரு மாதம் சாதாரண சிறைச் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

(ஒ-207)

## யாகப்பர் ஆலயத்தில் திருநீற்றுப் புதன் திருப்பலி

குருநகர், பெப்.17

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இன்று திருநீற்றுப் புதன் திருப்பலிகள் காலை 5.45 மணிக்கும் காலை 8 மணிக்கும் நடைபெறும்.

காலை 8 மணிக்கு நடைபெற உள்ள திருப்பலி பாடசாலை மாணவர்களுக்கானது எனவும்-

பாடசாலை மாணவர்கள் மட்டும் இத்திருப்பலியில் கலந்துகொள்ள வேண்டும் என்றும்-

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத்தந்தை வண.பிதா ஆர். நேசராஜா அடிகளார் அறிவித்துள்ளார்.

இதேவேளை, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் சிலுவைப் பாதை நடைபெறும் எனவும் அடிகளார் தெரிவித்துள்ளார். (1-51)

## நாளை

| | |
|---|---|
| மாசி 06 | 18.02.2010 |
| | வியாழக்கிழமை |
| திதி: | சதுர்த்தி |
| | பி.ப. 2.39 வரை |
| நட்சத்திரம்: | ரேவதி |
| | பி.இ. 2.45 வரை |
| சுபநேரம்: | 08.02-09.32 வரை |
| ராகுகாலம்: | [illegible] வரை |

## திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், பெப்.17

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பைச் சித்தரிக்கும் மாபெரும் தயாரிப்பாகிய திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளான இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் புனித மடுத்தினார் குருமடத்தைச் சேர்ந்த அருள்பணி றெஜீஸ் இராசநாயகம் அடிகளார் கலந்துகொண்டு இவ்வாற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்களுக்கான பிரதிகளை வழங்கிச் சிறப்பிப்பதுடன் ஆசியுரையும் வழங்குவார்.

இன்றைய பிரதி வழங்கும் நிகழ்வில், வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்று நடிக்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், இம்முறை புதிதாக இணைந்த நடிப்பதற்கு விருப்பமுடையவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் எதிர்வரும் மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை ஒரு வார காலத்திற்கு தினமும் மாலை 6.45 மணிக்கு மன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. (1)

## வணிகபீட மாணவர்களின் 'விருட்சம்' சஞ்சிகை வெளியீடு

யாழ். பல்கலைக்கழக வணிகபீட மாணவர்களின் வெளியீடான 'விருட்சம்' சஞ்சிகை நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வணிகத்துறை விரிவுரை மண்டபம் 1இல் வெளியிடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜாவும், யாழ். பல்கலைக்கழகவணிகத்துறைத்தலைவர்க.க.அருள்வேலும் கலந்துகொள்வர். (1-16)

## குரும்பசிட்டி மக்களுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவு

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் வைத்து வன்னியிலிருந்து மீளக் குடியமர்ந்த குரும்பசிட்டி மக்களுக்கு அவர்களுக்குரிய இராண்டாம் கட்ட கொடுப்பனவு வழங்கப்படவிருப்பதாக சங்கத்தின் செயலாளர் து.கலியுகவரதன் தெரிவித்துள்ளார்.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் அன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் இக்கூட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் பிரதம விருந்தினராகவும், கிராம அபிவிருத்தி அலுவலர் ஏ.யூட் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ஒ-சி)

## இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், பெப்.17

கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலய மாசிமக இலட்சார்ச்சனை நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

தினமும் பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணிவரை இலட்சார்ச்சனை நிகழ்வுகள் இடம்பெறும்.

மாசிமக தினத்தின்று சங்காபிஷேகம், நவசக்தி அர்ச்சனை, திருவூஞ்சல், அம்பாள் வீதியுலா என்பன நடைபெறும். (ஒ-1)

* * *

சாவகச்சேரி கல்வயல் விளைவேலி துர்க்கை அம்பாள் ஆலய மாசிமக இலட்சார்ச்சனை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நடை பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## மூளாய் ஆஸ்பத்திரியில் வைத்தியக் கண்காட்சி

சுழிபுரம், பெப்.17

மூளாய் கூட்டுறவு ஐக்கிய சங்க வைத்தியசாலையில் இன்று புதன்கிழமை பகல் முழுவதும் வைத்திய கண்காட்சியும் செயல்முறை திட்டங்களை விளக்கும் காட்சியும் நடைபெறவுள்ளன.

வடமாகாண வைத்திய அதிகாரிகள் கலந்துகொண்டு இக் காட்சியை நடத்தவுள்ளனர். வைத்தியசாலை நிர்வாகத்தினர் இக்காட்சியை நடத்தவேண்டிய உதவிகளையும் ஒத்துழைப்பையும் வழங்கி ஊக்குவித்துள்ளனர். (1-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

உயர்திரு.

## திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம்

(சிரேஷ்ட முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்)




யாழ்ப்பாணத் திருநகரில் பதினாறு ஆண்டுகளாக ஹற்றன் நஷனல் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளராக தனது பதவியை அலங்கரித்து வடபிராந்திய முகாமையாளராக பதவி உயர்வு பெறுகின்ற திசைவீரசிங்கம் ஜெயராசசிங்கம் அவர்கள் தனது வாழ்நாளில் கூடிய நேரத்தை வங்கியிலேயே செலவழித்து மக்களுக்காக மகத்தான சேவையாற்றியுள்ளார்.

தம் நலன் கருதாது எம் நலன் காத்த சிறந்தசேவையாளன் ஜெயராசசிங்கம் அவர்கள். 'ஜெய' என்றால் வெற்றி. வெற்றிக்குரியவராக விளங்கும் ஜெயராசசிங்கம் அவர்கள் யாழ்ப்பாண வர்த்தகத் துறையினரையும் பிரபல வர்த்தகர்களாக மேலோங்க வைத்த பெருமைக்கு உரியவர்.

சேவைக்கும் அவரது தகுதிக்கும் கிடைத்த பரிசு பதவிஉயர்வு. இன்னும் பல பதவி உயர்வுகள் பெற்று மேலும் மக்களுக்கு சேவையாற்ற வாழ்த்துகின்றேன். எல்லா நலன்களையும் இறைவன் அவருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் வழங்கப் பிரார்த்திக்கின்றேன்.

**தங்கள் பதவி உயர்வினைப் பாராட்டி வாழ்த்துபவர்:**

ஏ.எஸ்.சுரேந்திரன்
**கிருஷ்ணா நகைமாளிகை,**
இல.09, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். 021 2225046

ஏ.எஸ்.சுரேந்திரன்
**கிருஷ்ணா அடகு கடை**
இல.370, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 021 4900311.

---

## Learn French the French Way
## French Classes

af

சர்வதேச மொழியான French மொழி யாழ்ப்பாணத்தில் French Embassy இன் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாகக் கற்பிக்கப்படுகின்றது.

எங்களுடைய நூலகத்தை மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாணவர்கள், அலுவலர்கள், வெளிநாடுகளில் உயர்கல்வி கற்க விரும்புவோர், மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை நேரில்/ தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(94922)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
61, Kachcheri - Nallur Road, Jaffna.
Phone: 021 2228093, E-mail: alliancejaffna@yahoo.com

---

## சைக்கிள் இலக்கத் தகடு விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 17

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் இந்த வருடத்திற்குரிய சைக்கிள் இலக்கத் தகடுகள் விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

உரிமையாளர்கள் தமது தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு உரிய படிவத்தை எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்து இலக்கத்தகட்டை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

---

## தவறவிடப்பட்டது

இல. 16, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்மகுணசிங்கம் ஜெய்பிரகாஷ் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (912613097V), A.T.M Card, பாடசாலை அடையாள அட்டை என்பன Purse உடன் 12.02.2010 அன்று பெருமாள் கோயிலடிக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். T.P. 021 222 7715

---

# கண்ணீர் அஞ்சலி

## செல்வி சாவித்திரி விநாசித்தம்பி

(இளைப்பாறிய ஆசிரியை,
யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்)




காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகவும், இல.11, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சாவித்திரி விநாசித்தம்பி 14.02.2010 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பழைய மாணவர்கள்**
**(1995 ஆம் ஆண்டு O/L),**
**யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்.**

(சி/564917)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
22.01.1924

உதிர்வு
18.01.2010

டாக்டர்
**சபாபதிப்பிள்ளை கோபாலகிருஷ்ணன்**

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

"பிருந்தாவனம்"
நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(94927)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைதீவுக் கடற்பிரதேசத்தில் மீன்களை அள்ளிச் செல்லும் இந்திய றோலர் படகுகள்

## இதனால் தாம் பாதிக்கப்படுவதாக யாழ்.மீனவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.17

பாலைதீவுக் கடற்பிரதேசத்தில் இந்திய மீனவர்களின் பிரசன்னம் அதிகரித்துக் காணப் படுவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

பெரிய அளவில் றோலர் படகுகளில் வந்து இந்தப் பகுதிக் கடலில் மீன்பிடித் தொழிலில் இந்திய மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்திய மீனவர்கள் இப் பகுதியில் அத்து மீறி நுழைந்து றோலர் வலைகளைப் பயன்படுத்தி மீன்களை அள்ளிச் செல் வதால் இந்தப் பிரதேசத்தில் மீனின் பெருக்கம் குறைந்து காணப்படுவதாக யாழ்.மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

இந்திய மீனவர்களின் ஊடுருவல் கடந்த சில நாள்களாகத் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக அவர்கள் மேலும் கூறினார்கள். (50 - 224)

## நெடுந்தீவு கடற்றொழில் சமாசத்திற்கு குளிர் அறை

நெடுந்தீவு கடற்றொழிலாளர் கூட்டு றவுச் சமாசத்தின் குளிர் அறை நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளதாக சமாசத்தின் தலைவர் ப.ஜேசுதாசன் தெரிவித்தார்.

ஐ.ஓ.எம் நிறுவனம் மேற்படி குளிர் அறையை அமைக்கவும் மீன் பதப்படுத் தும் ஐஸ் உடைக்கும் இயந்திரத்தை வழங் கியுள்ளதாகவும் தெரிவித்த சமாசத் தலை வர், ஐ.ஓ.எம். நிறுவனத்தின் பிரதிநிதிகள் உட்படக் கடற்றொழில் திணைக்கள உத்தி யோகத்தர்கள், கடற்றொழிலாளர் கூட்டுற வுச் சங்கங்களின் பிரதிநிதிகள் திறப்பு விழாவில் கலந்துகொள்வார்கள் எனவும் குறிப்பிட்டார். (50-111)

## ஓய்வூதியர்களின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், பெப்.17

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்களுக்குப் பிரதேச செயலகத்தால் கடந்த ஜனவரி மாத ஓய்வூதிய உறுதிச் சீட்டுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள வாழ்க்கை அத்தாட் சிப் பத்திரத்தை எதிர்வரும் 26 ஆம் திக திக்கு முன்பதாகப் பூரணப்படுத்தித் தமது பிரதேச கிராமசேவகரின் உறுதிப்படுத்த லுடன் அனுப்பிவைக்குமாறு பருத்தித் துறைப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

அத்தாட்சிப்பத்திரம் அனுப்பிவைக்காத விடத்து எதிர்வரும் மார்ச் மாதத்திலிருந்து பத்திரம் சமர்ப்பிக்கப்படும்வரை ஓய்வூதியம் நிறுத்திவைக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (50 - 201)

# மர்மப்பொருள் எதையாவது கண்டால் உடன் இராணுவத்துக்குத் தெரியுங்கள்

## கரையோரப்பகுதியில் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.17

மர்மப் பொருள்கள் எவற்றையேனும் கண்டால் உடனடியாக அருகில் உள்ள இராணுவ முகாம்களுக்கு அறிவிக்கவேண் டும் என இராணுவத்தினரால் யாழ்.கரை யோரப் பிரதேசங்களில் ஒலிபெருக்கி மூலம் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

பொது இடங்கள் மற்றும் வெறும் காணிகள், பற்றைகள் போன்றவற்றில் ஏதேனும் மர்மமான பொருள்களைக் கண்டால் அவற்றை எடுக்கவேண்டாம் எனவும், அது தொடர்பாக உடனடியாக அருகில் உள்ள இராணுவத்தினருக்குத் தெரி யப்படுத்துமாறும் அறிவிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை கொழும்புத் துறை, இலந்தைக்குளம் வீதியில் உள்ள வெறும் காணியில் இருந்த மர்மப் பொருள் ஒன்றை எடுத்து விளையாடிய இரண்டு பாடசாலை மாணவர்கள் அப்பொருள் வெடித்து மரணமானதையடுத்தே இராணுவத்தின ரால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

இராணுவத்தினர் ஒலி பெருக்கி பொருத் தப்பட்ட வாகனங்களில் மக்கள் குடியிருப் புப் பகுதிகளுக்குள் சென்று இந்த அறி விப்பை விடுத்தனர். (50-224)

## நிர்வாக சேவை ஆள் சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை 20, 21 ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம், பெப்.17

இலங்கை நிர்வாகச் சேவைக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2009 (2010) எதிர்வரும் 20,21 ஆம் திகதிகளில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகளும், நேர அட்டவணைகளும் உரிய விண்ணப்பதாரிகளுக்கு அவர்களின் விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளுக்கு தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

அனுமதி அட்டைகள் கிடைக்காத விண்ணப்பதாரிகள் மற்றும் மேலதிக விவரங்கள் தேவைப்படும் விண்ணப்பதாரிகள் இருப்பின் தமது முழுப்பெயர், முகவரிகளுடன் பரீட்சைத்திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கம் 011-2785230, பக்ஸ் 011 -2784232 ஆகும். (50-236)

# இடம்பெயர்ந்தோருக்கான பெப்ரவரி மாத நிவாரண விநியோகம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.17

'இ' முத்திரை வைத்திருப்பவர்களுக் கான இந்த மாதத்துக்கான உலர் உணவு நிவாரண விநியோகம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு நாட்டரிசி, வெள்ளை அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு போன்றவை நிவாரணத்திற்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நிவாரணத்துக்கான பொருள்களின் விநியோக விவரம் வருமாறு: (50-224)

| | | 1 M | 2 M | 3 M | 4 M | 5 M |
|---|---|---|---|---|---|---|
| பொருள் | விலை | அளவு | அளவு | அளவு | அளவு | அளவு |
| சிவப்பு நாட்டரிசி | 66.00 | 1.200 | 2.600 | 4.000 | 4.025 | 5.700 |
| வெள்ளை அரிசி | 52.50 | 1.000 | 2.000 | 2.000 | 3.000 | 4.000 |
| மாவு | 50.41 | 1.500 | 2.000 | 4.000 | 5.000 | 5.500 |
| சீனி | 104.00 | 1.000 | 2.000 | 2.300 | 2.500 | 3.000 |
| பருப்பு | 120.00 | 0.200 | 0.250 | 0.250 | 0.600 | 0.700 |

# கந்தரனுபூதி போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், பெப்.17

மீசாலை கிழக்கு சித்திரவேலாயுதர் இந்து மன்றம் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்திய கந்தரனு பூதி திறந்த போட்டிப் பரீட்சையின் முடி வுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட, மற்றும் வலய மட்டங்களில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான




பரிசில்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 8 மணிக்கு ஆலய திருப்புகழ் மண்டபத்தில் வழங்கப்படவுள்ளது.

மாவட்ட மட்டம்

முதலாம் இடம் - நாகேந்திரன் லக்ஷிகா (சாவகச்சேரி இந்து) 2 ஆம் இடம் ஜெக சீலன் அனுராதன் (சாவகச்சேரி இந்து) 3ஆம் இடம் முரளி வெண்ணிலா (வட இந்து மகளிர்)

வலிகாமம் வலயம்

முதலாம் இடம் - சுரேஸ் குமார் விஜிதா (மகாஜன கல்லூரி) 2 ஆம் இடம் அரசக் கோன் றனுஷியா - (ஸ்கந்தவரோதயக் கல்லூரி) 3 ஆம் இடம் - இலட்சுமணன் சுகந்தினி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

யாழ்ப்பாண வலயம்

முதலாம் இடம் - கணபதிப்பிள்ளை இராகுலன் (யாழ். இந்து) 2 ஆம் இடம் பஞ்சலிங்கம் துவாரகன் (கனகரத்தினம் ம.வி) 3 ஆம் இடம் - நக்கீரன் அமிழ்தினி (வேம்படி மகளிர்).

வடமராட்சி வலயம்

• முதலாம் இடம் - விவேகானந்தன் மிதுலாஜினி (வட இந்து மகளிர்) 2 ஆம் இடம் - இந்திரராஜா திவாகர் (வட இந்து மகளிர்) 3 ஆம் இடம் முருகையா சிவரஞ்சினி (வட இந்த மகளிர்)

தீவக வலயம்

முதலாம் இடம் - சங்கரலிங்கம் கௌரீசன் (நயினாதீவு நாகபூசனி) 2 ஆம் இடம் - தர்மலிங்கம் குணதரன் (காரைநகர் யாழ்ற்றன்) 3 ஆம் இடம் - செல்வராசா ஹேசினி (கலாநிதி ஆ. தியாகராசா ம.வி)

தென்மராட்சி வலயம்

முதலாம் இடம் - ஜெகசீலன் பானுஜா (சாவகச்சேரி இந்து) 2 ஆம் இடம் - ஞானச் சந்திரன் விவேந்தன் (சாவகச்சேரி இந்து) 3ஆம் இடம் லோகநாதன் கபில்ராஜ் (சாவகச்சேரி இந்து) வலய ரீதியில் கூடிய மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது (ஒ-207)

## தேவாரத் திரட்டு முற்றோதல்

யாழ்ப்பாணம், பெப்.17

சங்குவேலி இந்து மன்றத்தின் ஏற்பாட் டில் சங்குவேலி பூந்தோட்டம் ஞானவைரவர் ஆலயத்தில் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. (50-201)



சமூகசேவையாளர் மாணிக்கம் சுப்பிரமணியத்தின் பாராட்டுவிழா கொக்குவில் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் மாணிக்கம் சுப்பிரமணியம் தம்பதியினர் மேடையில் அமர்ந்திருப்பதனையும், ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம், யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைப் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா, கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் அ.அகிலதாஸ் மற்றும் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும்-

விழா நாயகன் சுப்பிரமணியம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட பின்னர் அவருக்கு நினைவுக்கேடயம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்-கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கு எண்ணப்படும் நிலையங்களில் கண்காணிப்பில் ஈடுபட அனுமதிக்குக

## தேர்தல் ஆணையாளரிடம் பவ்ரல் கோரிக்கை

கொழும்பு, பெப். 17

வாக்கு எண்ணும் நிலையங்களை பார்வையிடுவதற்கு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் அனுமதி கோரியுள் ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் பிரகாரம் வாக்கு எண்ணும் நிலையங்களில் தமது பிரதிநிதிகளை நிலைநிறுத்த அனுமதிக்குமாறு பவ்ரல் அமைப்பு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வாக்கு எண்ணும் நிலையங்களில் மோசடி இடம்பெற்றுள்ளது என அண்மையில் அரசியல் கட்சிகள் குற்றம் சுமத்தியிருந்த காரணத்தினால் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே வாக்கு எண்ணும் நிலையங்களிலும் தமது கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டுமென பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.(சி)

# தவக்காலச் சிந்தனை



கிறிஸ்தவர்களின் தவக்காலம் இன்று திருநீற்றுப் புதனுடன் ஆரம்பமாகின்றது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

சரியான நேரத்தில் வழக்கமாக வந்துகொண்டிருந்த பஸ் அன்று வரவில்லை. பஸ் வரவில்லையே, என்ன நடந்தது தெரியவில்லையே! விசாரித்தபோது பஸ் தரப் பரிசோதனைக்குப் போயிருப்பதாகத் தெரிந்தது. வருடம் ஒருமுறை பஸ்ஸுக்குக் கூட தரப்பரிசோதனைச் சான்றிதழ் வேண்டும். நமக்கோ?

ஒரு விதத்தில் பார்த்தால் தவக்காலம் நமக்குக்கூட பரிசோதனை அளிக்கும் காலம் தான். நமது ஆன்மாவின் குறைகளை ரிப்பேர் செய்யும் காலம். தூய்மையின் வழிநடந்து தியாகத்தின் நீரில் நீராடி உபவாசத்தின் மேன்மையை நுகரும் காலம்தான் தவக்காலம். ஆனால் வெறும் பேச்சிலும் செயலிலும் தவ முயற்சிகள் மூழ்கி, மனம் மாறாத காலமாக அது பல கிறிஸ்தவர்களுக்கும் வெளிவேடத்தின் காலமாக அமைவதுதான் பரிதாபம்!

வட்டிக்கு விடும் ஒரு நபரைக்கண்டேன். அவரிடம் வட்டிக்குப் பணம் வாங்கியவர்கள் சீரழிந்துதான் போகின்றனர். அந்த அளவுக்கு அநியாய வட்டி. அவர் இவ்வாறு சொன்னார். ''தவக்காலம் அல்லவா? நான் தினமும் திருப்பலிப்பூசையில் கலந்து கொள்கிறேன். திருச்சபை புலாலை தவிர்க்கவேண்டும் என்று சொல்கிறது. நான் மீன், முட்டை, பால் ஆகியவற்றையும் தவிர்த்துள்ளேன். வெறும் சைவ சாப்பாடு தான். ஏன், மதுவையும் எடுப்பதில்லை'' ஆனால் அநியாய வட்டி வாங்குவதை நிறுத்தவில்லையே! பின் நோன்பால் என்ன பயன்?.

மற்றோருவர் ஒறுத்தல் முயற்சிகளில், தவ முயற்சிகளில் மிகவும் கண்டிப்பானவர். ஆனால் அவருடைய முன்கோபமும் அளவுக்கதிகமாகி விட்டதே! பயங்கரமான பிடிவாதம்! வீட்டில் அமைதியில்லை. எல்லோருக்கும் அச்சம். நிம்மதி இல்லை ஒருவர் முகத்திலும் மகிழ்ச்சி இல்லை. வீடு ஓர் இழவு வீடுபோல் காட்சியளிக்கின்றது. இங்கு தவத்தால் பயன் என்ன?. வேறொருவர் சாப்பாட்டு நேரத்தில் அவருடைய வீட்டுக்குப் போக வேண்டியதாயிற்று. சாப்பிடவருவேன் என்று சொல்லவும் இல்லை. அவர் என்னிடம் ''நாங்கள் தவக்காலம் ஆனதால் புலால் உண்பதில்லை. இருப்பதை வைத்து உண்போம் வாருங்கள்'' என்றார். நெய் மீன் குழம்பு, நெய் மீன் வறுவல், முட்டை என்று பலவகையான குழம்புகள், அருமையான சாப்பாடு! இது தவக்காலத்திற்கே கேலிக்கூத்தாகத் தெரியவில்லையா?

தவக்காலத்தில் பல வீடுகளுக்கும் சென்று பார்த்தேன். நாள்முழுவதும் கேபிள் ரீ.வியில் படம் பார்க்கின்றனர்; பாட்டுக்கேட்கின்றனர். ஆனால் குடும்ப செபம் செய்யத்தான் நேரம் கிடைப்பதில்லை! ஆடம்பரத்திற்குப் பஞ்சமில்லை. ஆனால் கோயிலுக்குப் போக நேரம் கிடைப்பதில்லை! ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற பெரிய வாரம் வரைக்காத்திருக்கின்றனர். பொறாமை, சீற்றம், கோபம், பகை, இறுமாப்பு, சண்டைச்சச்சரவுக்குக் குறைவில்லை இதுவா தவக்காலம் ?

நாம் நமது நோன்பைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஆண்டவருக்குப் பிரியமான விதத்தில் நான் நடந்து கொள்கிறேனா ? இந்த ஒப்பற்ற தவக்காலத்தை நான் வீணாக்குகிறேனா?.

## பஸ் தரிப்பிட திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.17

வரணி மகா வித்தியாலயத்திற்கு அருகாமையில் செல்லையா ஜெயந்தனின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட பஸ் தரிப்பிடம் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு வட இலங்கை போக்குவரத்துச் சபை யின் பருத்தித்துறை சாலை முகாமையாளர் செ.குலபால சிங்கத்தால் திறந்து வைக்கப்படவுள்ளது. (204)





உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 601257974 முதல் 601275428 வரை, சீட்டிழுப்பு இல. 623 திகதி 15-02-2010

வெற்றி எண்கள்

14 20 23 36 I

ஜக்பொட் பரிசு ரூ. 14,828,080/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 14,828,080/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 13 | 2,000/= | 26,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 388 | 1,000/= | 388,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 613 | 1,000/= | 613,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15620 | 60/= | 937,200/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7393 | 40/= | 295,720/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 184173 | 20/= | 3,683,460/= |
| | | மொத்தம் ரூ. | 6,743,380/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்

தங்கக்காசு வெற்றியாளர் - A.M. அஜித் சமரவீர - மாதம்பே.

கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - டில்சானி ரங்கன விஜேரத்ன - திகன.

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,143,380/=

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| பதுளை | 601262091-3-33 |
| பொலன்னறுவை | 601259187-9-37 |
| திருகோணமலை | 601260892-8-40 |
| களுத்துறை | 601270708-9-00 |
| கம்பஹா | 601267194-2-33 |
| அம்பாந்தோட்டை | 601264020-5-04 |
| புத்தளம் | 601272505-7-27 |
| காலி | 601271842-9-35 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 15,326,530/=

தொடர் இல. 701233480 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 பெப்ரவரி 18 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02

தொ.பே. 2333546/7


## புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், பெப்.17

ஐ.டி.எம் இணைக்கப்பட்ட பல்கலைக் கழகக் கல்லூரியின் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யு.எஸ். உதவித்திட்ட நிறுவனத்தின் இலங்கைப் பிரிவின் பணிப்பாளர் றெபேக்கா ஹோகென் அம்மையார் கலந்துகொள்வார். ஐ.டி.எம் இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரித் தலைவர் கலாநிதி பண்டு ரணசிங்க கௌரவ விருந்தினராகப் பங்குபற்றுவார். (1)

## 'இளம்வயது திருமணம்' ஆனைக்கோட்டையில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.17

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'இளம் வயதில் திருமணம்' என்ற தலைப்பில் கருத்தரங்கு அண்மையில் ஆனைக்கோட்டை, கரைப்பிரான் ஆலய மண்டபத்தில் அப்பகுதி கிராம சேவையாளர் அ.நிசாந்தன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கௌரி கலந்துகொண்டு கருத்துரை நிகழ்த்தினார். (204-100)


விற்பனைக்குண்டு

DIGITAL போட்டோ கொப்பி மிசின் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0779103405

விற்பனைக்கு

பேக்கறிக்குரிய புத்தம் புதிய டீசல் அவன், மா குழைக்கும் இயந்திரம், பாண் வெட்டும் கட்டர் மற்றும் அதற்குரிய பொருள்களும் விறகுப் போறணை ஒன்றும் விற்பனைக்கு உண்டு.


## அரச முதியோர் இல்லம் - கைதடி

ஒப்பந்த அடிப்படையிலான பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்.மாவட்டத்திலுள்ள கைதடி அரச முதியோர் இல்லத்தில் ஒப்பந்த அடிப்படையிலான பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் பதவியில் கடமையாற்றுவதற்கு சேவை மனப்பாங்குடைய தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் பெயர், பிறந்த திகதி, நிரந்தர விலாசம், சேவை விவரம் அடங்கலாக விண்ணப்பங்களினை சுயமாகவே தயாரித்து 25.02.2010 ஆம் திகதிக்கு முன்பாக தபாலுறையின் இடது பக்கத்தில் 'ஒப்பந்த அடிப்படையிலான பதிவுசெய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**

செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு வ.மா.
விவசாய கட்டடத் தொகுதி,
கன்னியா வீதி, வரோதய நகர், திருகோணமலை.

**நிபந்தனைகள்:**

1. கைதடி முதியோர் இல்ல சுற்றாடலுக்குள் வசிக்கும் விண்ணப்பதாரிக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. விண்ணப்பதாரி அவசரமானவிடத்து இரவு நேரத்திலும் கடமையாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
3. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

திருமதி ர.விஜயலட்சுமி
செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு,
வடமாகாணம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மேரிராணி பாக்கியரஞ்சிதம் நீக்கிலாப்பிள்ளை (பேபி)



யாழ்ப்பாணம், ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டு சிறிது காலம் பெரிய கடை, மன்னாரில் வாழ்ந்தவரும் தற்பொழுது கனடா, ஸ்காபுரோவில் வசித்து வந்தவருமாகிய திருமதி நீக்கிலாப்பிள்ளை மேரிராணி பாக்கியரஞ்சிதம் (பேபி) 14.02.2010 ஞாயிற்றுக்கிழமை கனடா, ஸ்காபுரோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் முத்து கந்தையா (முன்னாள் புகையிரத பிரதம காவலர்) - மார்கிரட் பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான பிலிப் செபஸ்தி - பாக்கியம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளையின் (ஆசிரியர், புனித சவேரியர் கல்லூரி, மன்னார்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருட்பணி பாக்கியரஞ்சிற் (மன்னார் மறை மாவட்டம்), பாக்கிய ரெயினோல்ட் (ரெஜி - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் மேரி ரோகினியின் அன்பு மாமியும் அமிஷா, நிதிஷா ஆகியோரின் ஆசை அப்பம்மாவும் காலஞ்சென்றவர்களான பாக்கியநேசர், பாக்கியஜீவர், பாக்கியஜெயம் மற்றும் பாக்கியராஜா (பிரான்ஸ்), புஷ்பதேவி, பாக்கியகுமார், பாக்கியதாசன் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பகவதி, அந்தோனிப்பிள்ளை, பஸ்டியாம்பிள்ளை மற்றும் லூர்துமேரி, தணிகாசலம், திரேசம்மா, சந்தியோகுதாசன், சந்தியாப்பிள்ளை, சுவாம்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் 19ஆம், 20ஆம் திகதிகளில் கனடா, ஸ்காபுரோவில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:

இலங்கை தொடர்பு:
வாகீசன்
தொ.பே.: 023 222 2582

பாக்கிய றெஜினோல்ட் (மகன் - கனடா)
தொ.பே.: 001 416 568 7311
மின்னஞ்சல்: reginold@hotmail.com

## திருமதி கந்தையா சிவபாக்கியம்



கோயிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும், இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சிவபாக்கியம் 15.02.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பா சந்திரசேகரம் (நீதிவான்)-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற சேதுப்பிள்ளை (அச்சுவேலி), சிவசுப்பிரமணியம் (சட்டத்தரணி), பொன்னம்பலம் (புகையிரத நிலைய அதிபர்) ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்ற V.S.கந்தையா (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் Dr.K.செந்தில்நாதன் (கனடா), செந்தில்ராணி (அதிபர், கோயிலாக்கண்டி மகாலக்குமி வித்தியாலயம்),செந்தில்சோதி, செந்தில்மணி (ஓய்வு பெற்ற ஆசிரியர், திருநெல்வேலி R.C.T.M.S),செந்திற்குமார் (கணனி இயக்குநர், சுவிஸ்),செந்திற்சேயோன் (கணக்குப் பரிசோதகர், கனடா), செந்திற்குமாரி முன்னாள் நூலக உதவியாளர் - சாவகச்சேரி, (கனடா), செந்தில்ராஜன் (சுவிஸ்), செந்திற்செல்வி (சுவிஸ்)ஆகியோரின் பாசமிகு தாயும் பவளராணி (கணக்காளர்- கனடா), முத்துலிங்கம் (பிரதிக்கல்விப் பணிப்பாளர்- தென்மராட்சி கல்விவலயம்), காலஞ்சென்ற இந்திரதேவன் மற்றும் பாலகுமார் (அதிபர், யா/செங்குந்த இந்துக் கல்லூரி), நிறஞ்சனி, வாசுகி (கணக்காளர்- கனடா), லோஜினி, சோமசுந்தரம் (வங்கி முகாமையாளர்-கனடா), ஆனந்தராஜன் (முகாமையாளர் -சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், கிருத்திகன் (பல்கலைக்கழகம்-கனடா), துபாரி (பல்கலைக்கழகம்-கனடா), குருபரன் (லண்டன்), அபிராமி,அறிவரசி,தாட்சாயினி(HNB யாழ்ப்பாணம்), சங்கீதா (இராமநாதன் நுண்கலைப்பீடம்), மயூரி,மயூரன் (சுவிஸ்) பிரவீனா, பிரதீக்கா (கனடா), வைஷ்ணவி (பல்கலைக்கழகம்- கனடா), பிரணவி, பைரவன், பைரவி (கனடா), அபினா, அஸ்வின், அச்சுதன்,ஆர்ணா, சிந்து, செந்தூரன் (சுவிஸ்), Dr.திவாகர் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பேர்த்தியும், துவாரகனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.02.2010) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

Dr.K. செந்தில்நாதன் (மகன்),
இ. பாலகுமார்(மருமகன்)
(அதிபர், செங்குந்த இந்துக் கல்லூரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரோறியாவுக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் 9 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது யாழ்.இந்து

வலி.வடக்கு,பெப்.17

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினருக்கான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 09 விக்கெட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி 34.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் ஜெயக்குமார் 34 ஓட்டங்களையும் கோவர்த்தனன் 15 ஓட்டங்களையும் சிவபாலன், சுதாகரன் ஆகியோர் தலா 12 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 23 ஓட்டங்களும் பெறப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த அனோஜன் 12 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 24 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும் பார்த்தீபன், நிரோஜன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 66 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் செந்தூரன் ஆட்டமிழக்காது 52 ஓட்டங்களையும் சஜீதரன் 44 ஓட்டங்களையும் ஜஸ்மின்ன் 43 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 17 ஓட்டங்களும் பெறப்பட்டன.

விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த கோவர்த்தனன் 15 ஓவர்கள் பந்து வீசி 60 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும் துவாரகன் 12 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 37 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் நகுலன் 36 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி 36.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

சிவபாலன் 30 ஓட்டங்களையும் கோவர்த்தனன் 15 ஓட்டங்களையும் தனேஸ் 13 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 19 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த அனோஜன் 11.4 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 34 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் பார்த்தீபன் 07 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும்,

கிரிசோபன் 04 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் நிரோஜன் 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

05 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற அடிப்படையில் களமிறங்கிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 2.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 07 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இரண்டாவது இன்னிங்ஸில் விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த துவாரகன் 1.5 ஓவர்கள் பந்து வீசி 06 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

(04-86)

## டி.எஸ்.சேனநாயக்க - பற்றிக்ஸ் மோதல் 19ஆம், 20ஆம் திகதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.17

வடக்கு - தெற்கு பகுதிகளில் உள்ள பாடசாலைகளுக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்குடன் கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரி, யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் 19 வயது பிரிவினருக்கு இடையேயான சிநேக பூர்வக் கிரிக்கெட் ஆட்டம் ஒன்று முதல் முறையாக யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. (50-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.17

'எக்ஸ்போ எயார்' விமான சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகம் நடத்தும் பாடசாலைகளின் ஆண்,பெண் அணிகளுக்கிடையேயான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆண் அணிகளுக்கான மூன்றாமிடத்திற்கான போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 5 மணியளவில் யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளது.

இதில் பங்குகொள்ளவுள்ள அணியில் விவரம் வருமாறு:

*யாழ்.இந்துக் கல்லூரி அணி எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி. (50-23)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.17

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே இடம்பெற்றுவரும் 7பேர் பங்குபற்றும் வில கல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டம் ஒன்று இன்று புதன்கிழமை மாலை 4 மணியளவில் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

மாலை 4 மணி

*நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகம். (50-23)

* * *

வலி.வடக்கு,பெப்.17

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் ஆதரவுடன் மயிலிட்டி பாரதி விளையாட்டுக் கழகம் அமரர் மாணிக்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட தாச்சி கழகங்களுக்கு இடையே நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மருதனார்மடம் மயிலிட்டி கலைமகள் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

*பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி எதிர் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகம். (50-86)

* * *

வலி.வடக்கு,பெப்.17

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

*தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக் கழகம்.

*தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழகம் எதிர் அளவெட்டி வானவில் விளையாட்டுக் கழகம். (50-86)

# இறுதியாட்டத்துக்குத் தெரிவானது மல்லாகம் ஸ்ரீமுருகன் அணி

வலி.வடக்கு,பெப்.17

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான எல்லே போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள் ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகமும் மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் ஒரு ஓட்டத்தைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டம் இழந்தனர்.

இரண்டு ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய உடுவில் மத்தி விளையாட்டுக் கழகம் ஒரு ஓட்டத்தைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தனர்.

ஆட்டம் சம நிலையில் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து இரு அணிகளுக்கும் தலா 15 பந்துகள் வழங்கப்பட்டன.

ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் உரிய பந்துகளைப் பயன்படுத்தி 02 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பந்துகள் நிறைவு பெற்றன.

03 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் விளையாடிய உடுவில் மத்தி விளையாட்டுக்கழகம் ஒரு ஓட்டத்தை மட்டுமே பெற்றது.

ஆட்ட நிறைவில் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் 03:02 ஓட்டங்கள் என்ற அடிப்படையில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது. (50-86)

# பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத்தில் சம்பியனானது உடுவில் மத்தி வி.க

வலி.வடக்கு,பெப்.17

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே முதல் தடவையாக நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மத்தி விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

உடுவில் மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகமும் மருதனார்மடம் இராமநாதன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை உடுவில் மத்தி விளையாட்டுக் கழகமே முன்னிலையில் காணப்பட்டது. முதல் பாதி ஆட்டம் முடிவடையும் போது உடுவில் மத்தி விளையாட்டுக் கழகம் 22:10 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலையில் காணப்பட்டது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இராமநாதன் விளையாட்டுக் கழகம் எதிரணியை தடுத்து விளையாடிய போதிலும் புள்ளிகளைப் பெற முடியவில்லை.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகம் 15:06 புள்ளிகள் என்ற அடிப்படையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகம் 37:16 புள்ளிகள் என்ற அடிப்படையில் இராமநாதன் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று உடுவில் பிரதேச செயலக பிரிவு சம்பியனானது. (50-86)

# அளவெட்டி பாரதிதாசன் வெற்றி

வலி.வடக்கு,பெப்.17

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியின் இறுதிப் போட்டியில் விளையாட அளவெட்டி பாரதிதாசன் விளையாட்டுக் கழகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் மல்லாகம் குளமங்கால் ஆபிரகாம் விளையாட்டுக் கழகமும் அளவெட்டி பாரதிதாசன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய பாரதிதாசன் விளையாட்டுக் கழகம் ஒரு ஓட்டத்தைப் பெற்றுக் கொண்டது.

இரண்டு ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கி விளையாடிய ஆபிரகாம் விளையாட்டுக்கழகம் ஓட்டங்கள் எதனையும் பெறாது அனைவரும் ஆட்டம் இழந்தார்கள்.


ஆட்டமுடிவில் பாரதிதாசன் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற ஓட்டங்களினால் ஆபிரகாம் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது. (50-86)

# நாவாந்துறை றோ.க.நடத்திய வீதி ஓட்டத்தில் வென்றோர்

யாழ்ப்பாணம் பெப்.17

யாழ்ப்பாணம் நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு மாணவர்களுக்கிடையே இடம்பெற்ற வீதி ஓட்டப்போட்டியில் முறையே முதல் 10 இடங்களைப் பெற்ற வீரர்களின் விவரங்கள் வருமாறு:

மயில்வாகனம் நிறோஜன், அன்ரனிதாஸ் அன்ரனி ஜனற், ஜோர்ஜ் நிதர்சன், தேவதாஸ் டென்சன், யோண்மேரி பிலிப் பீற்றர், செல்வராசா கயூரன், மரியதாஸ் நிதர்சன்,வரதராசா நிலோஜன், யேசுதாசன் யேசூரியன், சந்திரகுமார் சுஜீபன். (50-23)








மாதகல் புனித லூர்து கெபிலின் பெருந் திருவிழாவையொட்டி மாதகல் சென்.தோமஸ்யுத் விளையாட்டுக்கழகம் நடத்திய கடல் விளையாட்டுப் போட்டியில் கட்டுமரம் வலித்தல் போட்டியில் வீரர்கள் ஈடுபட்டு இருப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் முன்னால் இருக்கும் இரு தெரிவுகள்

- நந்தன் அரியரத்தினம் -





தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்கள் தெரிவில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னர் விடுதலைப் புலிகளால் பரிந்துரை செய்யப்பட்டவர்களில் அநேகரை இம்முறை தேர்தலில் பங்குகொள்ளச் செய்வதைத் தடுக்கும் வகையிலேயே அவர்களது வேட்பாளர்கள் தெரிவு இடம்பெறுவதாக அறிய முடிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தம்மை விடுதலைப் புலிகள் கால அரசியல் செல்வாக்கிலிருந்து முற்றிலுமாகத் துண்டித்துக் கொள்ள முயல்கிறது என்பதைத் தான் மேற்படி செய்தி மறைபொருளாக உணர்த்துகின்றது.

அதாவது - விடுதலைப் புலிகள் கால அரசியலிலிருந்து விலகிச் செல்லுதல் என்பது பிறிதொரு அர்த்தத்தில் தீவிர தமிழ்த் தேசியத்திலிருந்தும் விலகிச் செல்லுதல் என்னும் பொருள் கொண்டதாகும்.

வேட்பாளர் தெரிவில் புலம்பெயர் தமிழர்களுக்கும் இடம் கொடுப்பது பற்றித் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சிந்திக்க வேண்டும் என்ற சாராம்சத்தில் பொங்குதமிழ் இணையம் கட்டுரை ஒன்றை அண்மையில் வெளியிட்டிருந்தது.

உண்மையில் இது ஆரோக்கியமான கருத்தே. ஆனால் தற்போதைய கூட்டமைப்பின் அணுகுமுறையில் இதற்கான சாத்தியம் மிகவும் குறைவானது என்றே தோன்றுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் - மஹிந்த பேச்சுக்கு அழைத்தால் தாம் பங்குகொள்ளத் தயார் என்னும் சாராம்சத்தில் அறிக்கை ஒன்றை கூட்டமைப்பு வெளியிட்டிருந்தது.

இது தொடர்பில் கிடைத்த தகவல்களின்படி எதிர்காலத்தில் மஹிந்த விற்கு அழுத்தங்களைக் கொடுக்காமல் கூட்டமைப்பினர் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கின்றனர் என்பதாகவும் தெரிகிறது.

மஹிந்தவுடன் பேசும் நிலைப்பாடானது - புலம்பெயர் தமிழர் அரசியலிலிருந்து கூட்டமைப்பு முற்றிலும் விலகிச் செல்கிறது என்பதையே அடிக்கோடிடுகிறது எனலாம்.

எனவே, இந்தப் பின்புலத்தில் பார்த்தால் புலம்பெயர் தமிழர்களைத் தமக்குள் உள்வாங்குவதை கூட்டமைப்பு தவிர்க்கவே முயலும்.

தமிழ்த் தேசிய சக்திகள் இன்றைய நிலைமையைக் கையாள வேண்டுமாயின் முதலில் நிலைமைகளை ஓர் ஆய்வுக் கண்ணோட்டத்தில் அவதானிப்பது அவசியம் என்றே இந்த கட்டுரை சுட்டிக் காட்ட விழைகிறது.

எனது முன்னைய கட்டுரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கொள்கை நிலைப்பட்ட ஓர் அமைப்பாகப் பலப்படுத்த வேண்டிய அவசியம் சுட்டிக் காட்டப்பட்டது.

தேர்தல் முடிவடையும் வரை கூட்டமைப்பினர் தமது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து மௌனம் காப்பது அவசியம் என்றே நாம் தற்போது சுட்டிக் காட்ட வேண்டியிருக்கிறது.

ஏற்கனவே ஈழத்தில் மக்கள் பெருமளவிற்கு எந்தவொரு தமிழ்த் தலைமையின் மீதும் நம்பிக்கை கொள்ளும் நிலையில் இல்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தன்னெழுச்சியாக மக்கள் தமது எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் மஹிந்தவை நிராகரித்திருந்தனர்.

அதேவேளையில் கூட்டமைப்பு தனது சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தல் நிலைப்பாட்டைக் தெரிவித்திருந்தபோதும், கணிசமான மக்கள் வாக்கெடுப்பில் பங்கு கொண்டிருக்கவில்லை என்பதையும் இங்கு கருத்தில் கொள்வது அவசியம்.

இந்த நிலைமை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தொடரலாம். சில தினங்களுக்கு முன்னர் ஒருவரை நிராகரிக்கும் படி கூறிவிட்டு பின்னர் அவருடன் சடுதியாக பேசப்போவதாக பகிரங்கமாக குறிப்பிடுவதானது தமிழ் மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தலாம்.

எனவே கூட்டமைப்பின் தலைவர் மற்றும் அதன் தீர்மானிக்கும் பிரிவினர் இது குறித்து மிகுந்த நிதானத்துடன் விடயங்களை அணுகுவது அவசியமாகும். இதற்கு - முதலில் தற்போது ஆளும் மஹிந்த அணியினர் குறித்து ஒரு தெளிவான படத்தைக் கூட்டமைப்பினர் வரைந்து கொள்வது அவசியம்.

ஒரு சுவையான விடயத்தை இந்த இடத்தில் பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன்.

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க, 2000 ஆம் ஆண்டில் தீர்வுப் பிரேரனை ஒன்றைச் சமர்பித்து அதற்கான ஆதரவை தனது கட்சியினர் மத்தியில் கோரினார்.

இந்த திட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்போர் உங்கள் கைகளை உயர்த்துங்கள் என்று கூறிய போது சபையில் எல்லோருமே தமது கைகளை உயர்த்தி ஆதரவை வெளிப்படுத்தினர்.

ஆனால் - ஒரேயொரு நபர் மட்டும் கைகளை உயர்த்தாமல் மூலையில் அமைதியாக இருந்தார்.

இதனை அவதானித்த சந்திரிக்கா மீண்டும், இதனை எதிர்ப்பவர்கள் உங்கள் கைகளை உயர்த்துங்கள் என்றார், அப்போதும் அந்த நபர் அமைதியாகவே இருந்தார்.

அவர்தான் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

மஹிந்த ராஜபக்ஷ தமிழர்கள் தொடர்பில் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டவர் - என்பதை அறிவுறுத்தவே மேற்படி சம்பவம் நினைவு கொள்ளப்படுகிறது.

ஒரு சிறு அதிகாரத்தைக் கூட தமிழர்களுக்குப் பகிர்ந்தளிப்பதில் ஆர்வமற்ற மஹிந்தவை எதிர்கொள்வதாயின் கூட்டமைப்பு தம்மை முழுமையாக தயார்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

தற்போது அறியக் கிடைக்கும் தகவல்களின்படி - எதிர்காலத்தில், கூட்டமைப்பு இந்தியாவின் ஆலோசனைகளின் பேரிலேயே இயங்க முயற்சிப்பதாக தெரிகிறது.

சமீபத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர், ''நான் இந்தியா சொல்வதை மட்டுமே செய்வேன்'' என்று அழுத்திக் கூறியிருக்கின்றார்.

இது கூட்டமைப்பு இந்தியாவின் அனுசரணையொன்றை எதிர்பார்த்திருப்பதையே சுட்டிக் காட்டுகின்றது.

இந்த விடயத்தில் கூட்டமைப்பின் முடிவு சரியானதுதான். தமிழர்களின் பேரம் பேசும் அரசியல் பலவீனப்பட்டிருக்கும் சூழலில் பிராந்திய சக்தியான இந்தியாவின் அனுசரணையைப் பெற்றுக் கொள்வது தீர்வு நோக்கிய செயற்பாடுகளுக்கு மட்டுமல்ல ஒரு பாதுகாப்பான சூழலில் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உறுதுணையாக அமையும்.

ஆனால் இது தொடர்பிலும் கூட்டமைப்பு மிகுந்த முதிர்ச்சியான அரசியல் அணுகுமுறையை கடைப்பிடிப்பது அவசியம்.

இந்தியா தமிழர்களின் அரசியல் பிரச்சினையில் என்ன வகையான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க முயல்கிறது என்பதை அறிந்து அதற்கு ஏற்ப திட்ட வரைவொன்றை முழுமைப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

தனது பிராந்திய அதிகாரத்துவப் போட்டியொன்றில் முன்னரைக் காட்டிலும் சிக்கிக் கொண்டிருக்கும் இந்தியா, ஈழத் தமிழர்கள் தொடர்பில் தனக்கு கரிசனை இருப்பதாகவே காட்டிக் கொள்ளும்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் அதன் ஈழத் தமிழர் மீதான கரிசனை என்பது இலங்கையில் தனது நலன்சார் இருப்பை உறுதிப்படுத்துவதற்கான ஒரு மூலோபாயத் துரும்புச் சீட்டே!

அது இந்திய நலன்சார் அணுகுமுறையாக இருப்பினும் எமது நலன்சார் அரசியலும் ஏதோவொரு வகையில் அதனுடன் தொடர்புடையதாகவே அமையும்.

இதனைத் தவிர்த்து நம்மால் ஓட முடியாது.

கடந்த தேர்தலில் மஹிந்த பெருவாரியான வடக்கு, கிழக்கு தமிழ் மக்களால் நிராகரிக்கப் பட்டிருக்கும் சூழலில் நிபந்தனைகளுடன் கூடிய எந்தவொரு பேச்சுக்கும் மஹிந்த இணங்கப் போவதில்லை.

எனவே, கூட்டமைப்பினர் இதுவரை பேசி வந்த திம்பு பிரகடனத்தின் கீழான தமிழரின் அடிப்படை அரசியல் நிலைப்பாடுகளைக் கூட கைவிட வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

இதனை எவ்வாறு கூட்டமைப்பினர் எதிர்கொள்ளப் போகின்றனர்?

இந்த இடத்தில் மஹிந்தவை ஓரளவு வழிக்கு கொண்டுவர வேண்டுமாயின் அதற்கு நமக்கு இருக்கும் ஒரேயொரு வாய்ப்பு இந்தியாவின் பிராந்தியப் பாதுகாப்பு நோக்கிய அரசியல், பொருளாதார முன்னெடுப்புகள்தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறித்து கரிசனை கொள்ளும் புலம்பெயர் சக்திகளும் இது குறித்து சிந்தித்துப் பிறிதொரு தளத்தில் இயங்கலாம்.

இரண்டும் ஏதோவொரு புள்ளியில் சந்திப்பதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். அவ்வாறில்லாது விட்டால் அரசியல் அர்த்தத்தில் அது பயனுடைய ஒன்றாக அமையாது.

சுருங்கச் சொல்வதானால் - வரலாற்றில் மீண்டும் ஈழத் தமிழர்களின் தேசியத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் மிதவாத அணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கான தீர்வை வென்றெடுப்பதில் பலமான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரலாம்.

'இதனை நன்குணர்ந்து - நிலைமைகளுக்கு ஏற்ப அரசியலைக் கையாள வேண்டிய பாரிய பணி தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு உண்டு.

இதில் இந்தியாவின் அனுசரணையுடன் தமிழர் அரசியலை அணுகுதல் வெற்றி பெறலாம் அல்லது கொழும்பின் பலத்திற்கு முன்னால் மண்டியிட்டு அடங்கிச் செல்லலாம்.

தற்போதைய சூழலில் மேற்படி இரண்டில் ஒன்றுதான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தெரிவாக அமையும்.

புற நிலைமைகளைக் கருத்தில் கொண்டு எந்த அளவிற்கு நாம் அரசியலை கையாளுகிறோம் என்பதுடன், புலத்தில் வாழ்வோர், புலம்பெயர்ந்து சென்று வாழ்வோர் என்ற அடிப்படையில் எவ்வாறனதொரு ஒருங்கிணைந்த செயற்பாடு நம்மத்தியில் இருக்கும் என்பதைப் பொறுத்தே நமது அரசியல் எதிர்காலம் அமையும்.

நன்றி - 'புதினப்பலகை'இணையம்.

# நல்லூரில் ஞாயிறுதோறும் விடுமுறைச் சந்தையை யாழ். மாநகர சபை ஆரம்பிக்க நடவடிக்கை

## மாநகர மேயர் தகவல்

யாழ்ப்பாணம், பெப்.17

நகரின் பல பகுதிகளிலும் காணப் படுகின்ற நடைபாதை வியாபாரத்தால் ஏற்படுகின்ற போக்குவரத்து நெருக்கடி யைக் குறைக்கும் முகமாக ஞாயிறுதோறும் நல்லூரில் விடுமுறைச் சந்தை ஆரம்பிக்கப் படவுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

கடந்த காலங்களில் அதிகளவு விலை கொடுத்து கொள்வனவு செய்யப்பட்ட பல விதமான வீட்டுப் பாவனைப் பொருள்கள் ஏ9 பாதை திறக்கப்பட்டதன் பின்னர் தென்பகுதியிலிருந்து யாழ் நகருக்குக் கொண்டுவரப்பட்டு மிகவும் மலிவான விலை[illegible]களிலும் வைத்து [illegible] பட்டு வருகின்றன.

அவ்வாறான வியாபாரத்தை மையப் படுத்தி மக்கள் தமக்குத் தேவையான சகல பொருள்களையும் ஓரிடத்தில் பெற்றுக்கொள்ளுவதற்காகவும், யாழ் நகரின் மத்தியில் தற்போது அதிகரித்துவரும் போக்குவரத்து நெருக்கடிக்களைக் குறைப் பதற்காகவும் நல்லூரில் ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரம் கூடும் விடு முறைச் சந்தையை விரைவில் ஆரம்பிப் [illegible] முன்வந்துள்ளது.

[illegible]ன் நல்லூர் இந்து விடுதிக் கட்டடத்தின் பின்புறமுள்ள கடைக ளுக்குப் புறமுள்ளதும், பிராமணக் கட்டுக் குளத்தின் அருகாமையிலுள்ளதுமான பரந்த வெற்றுக் காணியில் ஞாயிறு சந்தை விரைவில் உருவாக்கப்படவுள் ளது. நாளாவட்டத்தில் இவ்விடத்தில் இட நெருக் கடி ஏற்படுமிடத்து இவ்விடு முறைச் சந்தையை நல்லூர் சூழலிலுள்ள வேறு இடங்களுக்கு விஸ்தரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இச் சந்தையில் வியாபாரம் செய்ய விரும்பும் வர்த்தகர்கள் முன்கூட்டியே தமது பெயர் விவரங்களை மாநகர சபையின் நானாவித இறைவ ரிப் பகுதி யில் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்- என்றுள்ளது.

(1-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு-குறிகட்டுவான் படகுச் சேவையை ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகரிக்குமாறு கோரிக்கை

நெடுந்தீவு, பெப்.17

நெடுந்தீவு-குறிகட்டுவான் படகுச் சேவையில் ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டு சேவைகள் இடம்பெறக்கூடியதாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோருகின்றனர்.

ஞாயிற்றுக்கிழமைகளில் அரச படகுச் சேவை இடம்பெறுவதில்லை. அன்றைய தினம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுவுச் சங்கம் மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம் ஆகியவற்றினதும் தனியார்களினதும் படகுகள் குறிப்பிட்ட சேவையில் வாரம் ஒரு படகு என்ற அடிப்படையில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுகின்றன.

தற்போது சேவைகள் விஸ்தரிக்கப்பட்டதைத் தொடர்ந்து தினமும் கூடுதலான மக்கள் பிரயாணம் செய்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளிலும் பெருந்தொகையான மக்கள் பயணிப்பதால் ஞாயிற்றுக்கிழமைகளில் தற்போது உள்ள சேவையுடன் மேலதிகமாக ஒரு சேவை அவசியம் எனவும் எனவே ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டு சேவைகள் இடம்பெற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கூறுகிறார்கள். (50-111)

## நெடுந்தீவுக்குப் பொருள்களை ஏற்றிச் செல்லும் படகு பழுது

### இதனால் வர்த்தகர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், பெப்.17

நெடுந்தீவுக்குப் பொருள்களை ஏற்றிச் செல்லும் படகு பழுதடைந்ததால் அப்பகுதிக்குப் பொருள்களைக் கொண்டு செல்ல முடியாமல் வர்த்தகர்கள் சிரமப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிகட்டுவான் துறைக்கும் நெடுந்தீவுத் துறைக்கும் இடையில் பொருள்களை ஏற்றிச் செல்லும் பணியில் ஈடுபடும் பெரிய படகு திடீரெனப் பழுதடைந்துள்ளது.

படகு பழுதடைந்ததால் பொருள்களைக் கொண்டு செல்லும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்தப் படகு திருத்தும் பணிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

## ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு இரண்டு தாதியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், பெப்.17

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் சேவை புரிவதற்காகப் புதிதாக இரண்டு தாதிய உத்தியோகத்தர்கள் வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள்.

செல்வி வை.பிரியலோஜினி, செல்வி வை.துவாரகா ஆகியவர்களே புதிதாக நியமனம் செய்யப்பட்ட தாதிய உத்தியோகத்தர்களாவர். இவர்கள் இருவரும் மேற்படி வைத்தியசாலையில் கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை தங்கள் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்கள் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (50-300)

## நாச்சியம்மையார் தினம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், பெப்.17

இவ்வாண்டுக்கான புண்ணிய நாச்சியம்மையார் தினம் சைவபரிபாலன சபையினரால் நீராவியடி நாவலர் மண்டபத்தில் அனுஷ்டிக்கப்படவிருப்பதாக அதன் செயலாளர் இ.தவகோபால் அறிவித்துள்ளார்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மேற்படி சபையின் தலைவர் சிவநெறிப் புலவர் த.சண்முகலிங்கம் தலைமையில் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பாடசாலை மாணவர்களின் திருமுறை ஓதல், பண்ணிசை போன்ற நிகழ்வுகளும், யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (ரி)




# யாழ்ப்பாணத்திலிருந்து பிற மாவட்டங்களுக்கான மேலதிக பஸ்சேவை விரைவில் ஆரம்பமாகும்

## போக்குவரத்து ஆணைக்குழு அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.17

யாழ்ப்பாணத்திலிருந்து தென்பகுதியின் பிறமாவட்டங்களுக்கு மேலதிக போக்குவரத்துச் சேவைகள் விரைவில் ஆரம்பிக் கப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இம் மேலதிக போக்குவரத்துச் சேவை கொழும்பு-யாழ்ப்பாணம், திருகோணமலை- யாழ்ப்பாணம், கண்டி- யாழ்ப்பாணம், மட்டக்களப்பு-யாழ்ப்பாணம், மட்டக்களப்பு-வவுனியா ஆகிய போக்குவரத்து மார்க்கங்களிலேயே மேலதிக போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இம் மார்க்கங்களில் முழுச்சொகுசு, அரைச்சொகுசு, குளிரூட்டப்பட்ட பஸ் சேவை, சாதரண பஸ் சேவைகள் இடம் பெறவுள்ளன.

மேலதிக போக்குவரத்துச் சேவையை நடத்துவதற்கென தேசிய போக்குவரத்து ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. இதற்குப் பெருமளவில் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கொழும்பு-யாழ்ப்பாணம் மார்க்கத்தில் முழுச் சொகுசு பஸ்சேவைகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (50-236)

## அச்சுவேலி பிரதான வீதி மோசமாகச் சேதமாகியுள்ளது

யாழ்ப்பாணம், பெப்.17

அச்சுவேலி பிரதான வீதி மோசமாகப் பழுதடைந்துள்ளமையால் இவ் வீதி ஊடாக வாகனங்களை ஓட்டுவோர் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அச்சுவேலி வல்லைச் சந்தியில் தொடங்கி மத்திய பஸ் நிலையம் ஊடாக ஆவரங்கால் சந்திவரை செல்லும் பிரதான வீதியே மோசமாகப் பழுதடைந்துள்ளது.

இவ்வீதி ஊடாக யாழ்ப்பாணத்திற்கும், ஏனைய இடங்களுக்கும் இ.போ.ச., மினி பஸ் சேவைகள் இடம் பெற்றுவருவதால் அவ் வாகனங்களையும் பிற வாகனங்களையும் இவ்வீதியால் ஓட்டிச் செல்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக வாகனச் சாரதிகள் தெரிவிக்கின்றனர். (50-236)

## முற்றவெளியில் கொட்டப்படும் கழிவுகளை உணவாகக் கொள்ளும் கால்நடைகள்

### இதனால் அவற்றுக்கு நோய்த் தாக்கம்

யாழ்ப்பாணம்.பெப்.17

யாழ்.முற்றவெளிப் பிரதேசத்தில் தனியார் பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில் கொட்டப்படும் கழிவுப் பொருள்களைக் கால்நடைகள் உணவாக உட்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நகரில் சேர்க்கப்படும் கழிவுப் பொருள்கள், பொலித்தீன் பைகள் என்பன இப் பகுதியில் கொட்டப்பட்டுப் பின்னர் அகற்றப்பட்டு வருகின்றன.



அவை நோய்த் தாக்கத்திற்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இப்பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவதால் வீதியால் செல்லும் மக்கள் இப்பகுதியில் கூடும் சுற்றுலா பயணிகள் போன்றோர் துர்நாற்றத்தினால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்தக் கழிவுப் பொருள்களைக் கால்நடைகள் மற்றும் பறவைகள் என்பன உணவாக உட்கொள்கின்றன.

கால்நடைகள் பொலித்தீன் பைகளையும் கழிவுப் பொருள்களையும் உண்பதால் அவை நோய்த் தாக்கத்துக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-224)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

வடமராட்சி, பெப்.17

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "தேவி பாகவதம்" என் னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இச்சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். (50-236)

## பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் கணனி அறை அமைக்க நிதியுதவி

நவாலி, பெப்.17

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் கணனி அறை அமைப்பதற்கென மாகாணக் கல்வி அமைச்சு 1 லட்சத்து 72 ஆயிரம் ரூபாவினை வழங்கியுள்ளது.

இதற்கென வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

விரைவில் கணனிகள் வந்து சேரவுள்ளதாக அதிபர் ந.சிவகடாட்சம் தெரிவித்தார். (ரி-100)

## அனலைதீவில் நடமாடும் பற்சிகிச்சை

யாழ்ப்பாணம், பெப்.17

அனலைதீவு பிரதேச வைத்தியசாலையில் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை நடமாடும் பற்சிகிச்சை நடைபெறும் என யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இச்சிகிச்சை அன்று காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் எனவும் இதில் கலந்துகொள்ள உள்ள வைத்திய அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து அங்கு செல்ல உள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. (50-300)

## இன்று திருநீற்றுப் புதன்

குருநகர், பெப்.17

கிறிஸ்தவ மக்கள் தமது இறைதூதர் யேசு கிறிஸ்து நாதரின் திருப்பாடுகளை நினைவுகூரும் ஆயத்த நாளான திருநூற்றுப் புதன் இன்றாகும். கிறிஸ்தவ தேவாலயங்களில் இன்று காலை நடைபெறும் ஆராதனைகளில் கலந்துகொள்ளும் கிறிஸ்தவ மக்களின் நெற்றியில் குருவானவர் இவ்வுலக வாழ்வு நிலையற்றது என்பதை உணர்த்தும் வகையில் சாம்பலைப் பூசுவார். (50-51)



யாழ்.ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயத்தின் பரிசில் தின நிகழ்வு அண்மையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வின்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும், இந்த நிகழ்வின்போது வெளியிடப்பட்ட "பதிவு-2009" என்ற மலரினை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வெளியிட்டு வைக்க, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராஜா பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும் 'மயூரி லங்கா' நிறுவனத்தைச் சேர்ந்த நா.வைகுந்தீபன் மாணவரொருவருக்குப் பரிசில் வழங்குவதையும் அருகில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட மத்திய வங்கிப் பொறியியலாளரும் றோட்டறிக் கழக மாவட்ட பிரதிநிதியுமான அர்ச்சன மற்றும் றோட்டறிக் கழகப் பிரநிதிநிகளான [illegible] சிவானந்தன் ஆகியோர் நிற்பதையும் இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: கஜந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா



**மேடம்** நண்பர் ஒருவரை நம்பி ஒப்படைத்த வேலைகள் நல்ல விதமாக முடியலாம். மாமன், மைத்துனர்கள் நீங்கள் கேட்ட உதவியைச் செய்யலாம். கடும் அலைச்சலைக் கொடுக்கலாம் என, நினைத்த வேலை ஒன்று சுலபமாக முடிவுக்கு வரும். உதிரி வருமானங்களைப் பெறலாம். மாற்று மதத்தினரால் அனுகூலம் உண்டு.



**இடபம்** குடும்பப் பாசம் அதிகரிக்கும். குழப்பமாக இருந்த சில விடயங்களில் இன்று தெளிவான முடிவு எடுப்பீர்கள். ஒருவரிடம் கொடுத்த பணத்தை உங்களின் அவசர செலவுக்காகக் கேட்டு வாங்கலாம். வாகனங்கள் பராமரிப்பில் அக்கறை காட்டுவீர்கள். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பர்.



**மிதுனம்** மறைமுக எதிர்ப்புகள், போட்டிகளைச் சந்திக்கலாம். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில், நீங்களும் கலந்து கொள்ளலாம். மற்றவர்களைப் போல தங்களுக்கு அமையவில்லையே என சில விடயங்களில் ஆதங்கப்படுவீர்கள். உதவுவதாகச் சொன்ன ஒருவர் கடைசி நேரத்தில் காலை வாரி விடலாம்.



**கடகம்** செலவில் சிக்கனம் காட்ட வேண்டிய நாள். சில பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கி விட்டு, வருத்தம் அடைவீர்கள். பஸ் பயணங்களுக்காக நீண்ட நேரம் காத் திருக்கலாம். உங்களிடம் உதவிபெற்ற ஒருவரே உங்களை உதாசீனம் செய்து பேசலாம். உறவினர்கள் கேலிப் பேச்சால் எரிச்சல் அடைவீர்கள்.



**சிங்கம்**
வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். கடனாக வாங்கிய பணத்தை திரும்பக் கொடுக்கலாம். பழைய நண்பர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். முக்கிய வேலையாக சிலர் வெளியூர் பயணம் செல்லலாம். விருந்தினர் வருகையால் செலவுகள் கூடும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும்



**கன்னி**
வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். பெண்கள் கடும் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். வெளியூர்களில் இருக்கும் சிலர் மூலம் நீங்கள் நல்ல தகவல்களைக் கேட்கலாம். ஓய்வாக இருக்க நினைத்தாலும், முடியாத அளவுக்கு வேலைகள் உருவாகும்.



**துலாம்** குடும்ப உறுப்பினர்கள் இடையே ஏற்படும் சச்சரவால் நீங்கள் எரிச்சல் அடையலாம். உடல் ரீதியான சிறு உபாதைகளால் உற்சாகம் குறையலாம். மற்றவர்கள் மத்தியில் உங்களின் பெருமையைக் காட்ட முற்படுவீர்கள். அரசு தொடர்பான காரியங்கள் இழுபறிக்குப் பின்னர் முடிவுக்கு வரும்.



**விருச்சிகம்** உறவினர் ஒருவருக்காக நீங்கள் மற்றவர்களிடம் உதவி கேட்கலாம். திட்டமிட்ட காரியங்கள் நடப்பதில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். சிலருக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். நீங்கள் செல்லும் இடத்தில் உங்களுக்கு பிடிக்காத ஒருவரைப் பார்க்க நேரிடலாம்.



**தனுசு** கணவன், மனைவி இடையே பாசம் அதிகரிக்கும். நெடுநாளைய முயற்சி ஒன்றுக்கு பலன் கிடைக்கும். மாணவர்கள் ஆசிரியர்களின் பாராட்டுக்களைப் பெறுவர். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தைச் செலவிடலாம். தேக ஆரோக்கியத்தைப் பேணுவதில் அக்கறை காட்டுவீர்கள். தந்தைக்குத் தேவையானதைச் செய்வீர்கள்.



**மகரம்** அண்டை, அயலாரின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். உறவினர்கள் வகையில் சிறு மனஸ்தாபம் ஏற்படலாம். சில பொருட்களை வாங்கி விட்டு பணப்பற்றாக்குறையால் கடன் சொல்லலாம். சுயநலமின்றி மற்றவர்களுக்காக சில காரியங்களைச் செய்து கொடுப்பீர்கள். தொழில் ரீதியாக சிலர் உங்களை விமர்சனம் செய்யலாம்.



**கும்பம்** திட்டமிட்ட வேலைகள் தடையின்றி நடக்கும். ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்தலாம். வேலையாள்கள் உங்களின் கோபத்தைத் தூண்டும் வகையில் நடப்பர். மற்றவர்கள் புரிந்து கொள்ளாத வகையில் சில விடயங்களில் தந்திரமாக செயற்படுவீர்கள். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களுடன் தொலைபேசியில் பேசலாம்.



**மீனம்** மற்றவர்களுக்காகச் சில செலவுகளைச் செய்யலாம். சிலர் தங்களின் வேலைகளை உங்கள் தலையில் சுமத்தி விட்டு தப்பித்துக் கொள்ளலாம். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்வீர்கள். சிலரைச் சந்திக்க முற்பட்டு, அவர்கள் கிடைக்காமல் போகலாம். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். கனவுத் தொல்லையுண்டு.

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் மாதாந்த உதவிப் பணம்

நவாலி,பெப்.17

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம், காசநோய், புற்றுநோய் என்பவற்றுக்கான உதவிப் பணம் போன்றவற்றைப் பெற்று வருபவர்களது பெப்ரவரி மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தமக்குரிய தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (ரி-100)

**விற்பனைக்கு**
சிங்கர் தையல் மெசின் (மின்சாரத்தில் இயக்கும்) உடன் விற்பனைக்குண்டு.
இல.10A, கதிரநல் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5687

## வலைப்பந்தாட்டம் நாளை மறுதினம்

வலி.வடக்கு,பெப்.17

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான வலைப் பந்தாட்டப் போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

போட்டியில் கலந்து கொள்ளும் அணிகளை உரிய நேரத்திற்குச் சமுகம் அளிக்கும்படி விளையாட்டு அலுவலர் அறிவித்துள்ளார். (50-86)

**காணி தேவை**
மிருசுவிலில் இருந்து கைதடி வரையிலான பிரதேசத்தில் A-9 வீதிக்கு அருகில் 2 பரப்புக் காணி தேவை.
தொடர்பு: 071 4216981 (94913)

**விற்பனைக்கு**
கேபிள் ரீவி நடத்துவதற்குரிய பிரதான அறை (Control Room) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 077 0280534 (94917)

**KIDS BASIC DRIVES**
தரம் - 1 தொடக்கம் தரம் -6 மாணவர்களுக்கான கணனிப் பயிற்சி வகுப்புக்கள் 24.02.2010ஆம் திகதி தொடக்கம் கீழ்வரும் முகவரியில் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் முன்கூட்டியே பதிவினை மேற்கொள்ளவும். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.
57, வைரக வீதி, திருநெல்வேலி தெற்கு (பாலசிங்கம் விடுதிக்கு அருகில்).
தொ.பே.: 021 320 6695 (94904)

## கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 742
சீட்டிழுப்பு திகதி 15.02.2010

எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 06 38 54 62

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 25,270,817.60 | 01 |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000,000/= | - |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 11 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 340 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 644 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 50/= | 15866 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9191 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 225592 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 35436 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 33,196,317.60

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 10,000,000.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் 90 நாட்களுக்குள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 01ம் திகதியிலிருந்து லொத்தர் சீட்டிழுப்பின் நிகழ்ச்சிகள் தேசிய தொலைக்காட்சியில் இரவு 9.35ற்கு இடம்பெறும்.

**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நாகமுத்து இரத்தினம்

அன்னை மடியில்: 07.10.1925
ஆண்டவன் அடியில்: 27.02.2009

திதி: மாசித் திங்கள் பூர்வபக்க திருதியை (17.02.2010)

பாசமெனும் உதிரத்தைப் பாலாக்கி ஊட்டி வளர்த்தாய்
எம்மை வாழ வைத்து அகிலத்தில் வளமுடன் விட்டுச் சென்றாய்
தாயே! பிரிவென்னும் பெருந்துயரால் பரிதவித்து நிற்கின்றோம்
ஓராண்டென்ன ஓராயிரம் யுகங்கள் கடந்தாலும்
மறையாது மாதா உங்கள் நினைவலைகள்.

வைரவர் கோயிலடி,
சண்டிலிப்பாய்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




01.09.1988

*இந்தியாவையும் விடுதலைப் புலிகளையும் மோதவைத்துள்ள இலங்கை அரசு, வடக்கு, கிழக்கில் ஜனநாயகச் சூழ்நிலை நிலவாத நிலையிலும் தேர்தலொன்றை நடத்த முனைவதாக ஈரோஸ் பிரமுகர் பாலகுமார் தெரிவிப்பு.

*வெலிஓயாத் திட்டத்தில் அடங்கும் பிரதேசங்களில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் தமிழ்மக்களை அங்கிருந்து அகற்றுமாறு சம்பந்தப்பட்ட பகுதியின் அரச உத்தியோகத்தர்களுக்கு அரசு உத்தரவிட்டிருப்பதாக ஈரோஸ் இயக்கம் தெரிவிப்பு.

*வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் பிரகடனமும், வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலுக்கான அறிவிப்பும் விரைவில் வெளியிடப்படுமென ஜனாதிபதி ஜே.ஆர். தெரிவிப்பு.

02.09.1988

*அரசு போரை நிறுத்தி தான் கைது செய்து வைத்துள்ள விடுதலைப் புலிகள் மற்றும் ஜே.வி.பி. ஆகிய தரப்புக்களைச் சேர்ந்த போராளிகளுக்கு மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென தேசிய ஒற்றுமைக்கான அமைப்பு அரசிடம் கோரிக்கை.

*வடக்கு, கிழக்கு பகுதிகளின் தற்போதைய ஸ்திரமற்ற நிலை காரணமாக யாழ். மாவட்டத்தில் 'கெயர்' ஸ்தாபனத்தால் மேற்கொள்ளப்படவிருந்த 65ஆயிரம் சேதமுற்ற வீடுகளைப் புனரமைக்கும் பணி ஸ்தம்பிதம்.

*யாழ். பல்கலைக்கழக துணை வேந்தராக பேராசிரியர் அ.துரைராசா பதவியேற்பு.

03.09.1988

*வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தாம் யுத்த நிறுத்தமொன்றைக் கடைப்பிடிப்பது குறித்து இந்திய அமைதிப்படை வட்டாரங்கள் தீவிர பரிசீலனை.

*இந்திய அமைதிப்படையினரை வெளியேற்றி விட்டு தமது பாதுகாப்புக்கு இலங்கை இராணுவத்தினரை நிறுத்த வேண்டுமெனவும் கோரி திருகோணமலையிலுள்ள சிங்கள மக்கள் சத்தியாக்கிரகம் அனுஷ்டிப்பு.

04.09.1988

*72 மணித்தியால நேரத்துக்கோ, அல்லது அதற்கு மேலாகவோ யுத்த நிறுத்தம் செய்யலாம் என இந்திய அமைதிப்படைக்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிப்பு.

*பூஸா முகாமில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழ் அரசியல் கைதிகளை மேர்ஜ் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் சந்தித்து உரையாடினர்.

05.09.1988

*மாகாணசபைத் தேர்தலுக்காக போர் நிறுத்தம் என்றல்லாது இந்திய அரசு போர் நிறுத்தமொன்றை உத்தியோக பூர்வமாக அறிவித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென ஈரோஸ் பிரமுகர் பாலகுமார் வலியுறுத்து.

*வெளிநாடுகளிலிருந்து வரும் தமிழ்ப் பகுதிகளுக்கான நிவாரணப் பொருள்கள் தடையின்றி உரியவர்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமென யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் உறுதி தெரிவிப்பு.

06.09.1988

*இன்றைய சூழ்நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்த முயற்சிக்க வேண்டாம் என தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஜனாதிபதி ஜே.ஆரிடம் கோரிக்கை.

*ஈழத்தில் உடனடியாகப் போர்நிறுத்தம் செய்து நியாயமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தக்கோரி இந்திய ஜனாதிபதியிடம் தி.மு.க தலைவர் கருணாநிதியின் ஆலோசனைப்படி இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் வை. கோபாலசாமி மகஜர் கையளிப்பு.

07.09.1988

*புதுடில்லியிலுள்ள இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் வீட்டுக்கு மேலாக விமானம் எதுவும் பறக்கத் தடைவிதிப்பு.

*நாடு நம்புவது போல் இந்திய- இலங்கை ஒப்பந்தம் ஏற்பட நானும் உடந்தையல்ல என ஐ.தே. கட்சியிலிருந்து வெளியேறிய முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் தெரிவிப்பு.

08.09.1988

*தமிழர்களைத் திருப்திப்படுத்தத்தக்க உண்மையான அதிகாரப் பரவலாக்கல் கொண்ட சுயாட்சி அமைப்பு முறையொன்றே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமைய முடியுமென முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் தெரிவிப்பு.

*ஜே.வி.பியினர் தயாரித்து வைத்துள்ள தாக்கப்படவேண்டியவர்கள் பட்டியலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அமிர்தலிங்கத்தின் பெயரும் இருப்பதாக இரகசியப் புலனாய்வுப் பொலிஸ் பிரிவு தெரிவிப்பு.

09.09.1988

*வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சியான ஐ.தே.க. போட்டியிடாது என்பது நிச்சயமாகிவிட்ட தாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிப்பு.

*யாழ்.பிரதம தபாலகத்துக்கு வந்த எச்சரிக்கைக் கடிதம் ஒன்றை அடுத்து தபாலகம் மூடப்பட்டது.

10.09.1988

*பழிவாங்கல் நடவடிக்கையாக, இலங்கை அரச படைகளும், இந்திய அமைதிப்படை யும் கொலைகளைச் செய்திருப்பதாகக் கிடைத்திருக்கும் முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்தப்படவேண்டுமென இலங்கை அரசிடம் சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து.

*ஆளும் ஐ.தே.கட்சிக்கும் இ.தொ.காவுக்கும் இடையேயான உறவு முறிந்து விடக்கூடுமென கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.

11.09.1988

*வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்கும் பிரகடனத்தை ஜனாதிபதி ஜே.ஆர். வெளியிட்டுள்ளார் என இந்தியத் தரப்பு அறிவிப்பு. அத்துடன் 500 முதல் 600 வரையான தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவரென ஜனாதிபதி உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிப்பு.

*ஓர் இனத்தின் விடுதலை வேட்கையை ஆயுதபலத்தால் நசுக்கமுடியாதென இலங்கைத் தமிழர் விடயம் தொடர்பாக ராஜ்ய சபையில் பேசிய தி.மு.க.எம்.பி வை. கோபாலசாமி எச்சரிக்கை.

12.09.1988

*விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்து அவர்களையும் மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்ற இந்திய அமைதிப்படை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அமிர்தலிங்கம் தெரிவிப்பு.

*இந்திய-இலங்கை ஒப்பந்தத்திலுள்ள ஏனைய அம்சங்களையும் இந்திய, இலங்கை அரசுகள் இணைந்து விரைவாகச் செயற்படுத்த வேண்டுமென வடக்கு, கிழக்கு மாகாண இணைப்புத் தொடர்பாக விடுத்த அறிக்கையில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கோரிக்கை.

*சுதந்திரக் கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதும் தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுதலை செய்யப்படு வர் என சுந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ, தெரிவிப்பு.

13.09.1988

*தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதிகளில் ஒருவரான கிட்டு உட்பட 15 விடுதலைப்புலி உறுப்பினர்கள் சென்னைப் பொலிஸாரால் கைது.

*வடக்கு, கிழக்கு மாகாண இணைப்புக்கு எதிராக ஜே.வி.பியின் ஹர்த்தால் அழைப்பைத் தொடர்ந்து தென்பகுதியில் வன் செயல் வெடிப்பு

*வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்பு நிரந்தரம் ஆக்கப்படும் வரை ஜனாதிபதி ஜே.ஆரின் இணைப்புப் பிரகடனம் குறித்துத் திருப்தியடைய இயலாதென ஈரோஸ் பிரமுகர் பாலகுமார் தெரிவிப்பு

14.09.1988

*ஈழத்தமிழ் அகதிகள் பலரை கட்டாயமாக நாடுகடத்தும் இந்திய அரசின் உத்தரவுக்கு எதிராக ஈழத்தமிழ் அகதிகள் ஐவர் தாக்கல் செய்த வழக்கு திருச்சி மாவட்ட நீதிமன்றத்தால் விசாரணைக்கு ஏற்பு.

*பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 115 தமிழ் அரசியல் கைதிகள் விடுவிப்பு.

15.09.1988

*தேர்தலில் பங்கேற்கவிருக்கும் சகல தமிழ்க் குழுக்களும் ஆயுதங்களை ஒப்படைத்து இந்திய -இலங்கை ஒப்பந்தத்தை ஆதரிக்க வாய்ப்பளிக்கும் வகையில் இந்திய அமைதிப்படை ஐந்து நாள்கள் யுத்த நிறுத்தம் மேற்கொள்ளும் என இந்திய அரசு. அறிவிப்பு.

*வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி விடுத்த உத்தரவுக்கு அமைய தேர்தல் பற்றிய அறிவிப்பை ஒரு வாரத்துள் வெளியிட விருப்பதாக தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு.

# கொழும்பு, அநுராதபுர மாவட்டங்களில் இம்முறை நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் மாற்றம்.

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, பெப். 17

வாக்காளர் இடாப்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை கொழும்பு மாவட்டத்தில் ஒன்று குறைந்து அனுராதபுரம் மாவட்டத்தில் ஒன்று கூடும் என்று தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

2010ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் திகதி நடத்தப்படும் நாடாளுமன்றத் தேர்தல் 2008 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிரகாரமே நடத்தப்படவிருக்கின்றது. வாக்காளர் இடாப்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமைவாகவே அடுத்த நாடாளுமன்றத்திற்குக் கொழும்பு மாவட்டத்திலிருந்து தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒன்று குறைக்கப்பட்டுள்ளதுடன் அனுராதபுரம் மாவட்டத்திற்கு ஒன்று அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் கொழும்பு மாவட்டத்திலிருந்து இதுவரையில் 20 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டபோதிலும் இம்முறை 19 உறுப்பினர்களே தெரிவு செய்யப்படுவர். அத்துடன் அனுராதபுரம் மாவட்டத்திலிருந்து வழமையாக 8 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டபோதிலும் இம்முறையிலிருந்து 9 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நாடாளுமன்றத்திற்கு முதன் முறையாகத் தெரிவான 36 உறுப்பினர்களில் 16 உறுப்பினர்கள் ஓய்வூதியம் பெற்றுக்கொள்வதற்கான தகுதியை இழக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்திற்குப் புதிதாகத் தெரிவாகும் உறுப்பினர்கள் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு ஐந்து வருடங்கள் உறுப்பினர்களாக இருக்கவேண்டும். 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஆறாவது நாடாளுமன்றத்திற்கு 36 பேர் முதன் முறையாகத் தெரிவாகினர்.

இவர்களில் 16 உறுப்பினர்கள் இராஜினாமாச் செய்தமைக்காகவும் மற்றும் மரணமான உறுப்பினர்களின் வெற்றிடத்திற்காகவுமே தெரிவு செய்யப்பட்டனர் அவ்வாறானவர்களே ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதியை இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

# சரத் பொன்சேகா கைதான கால சூழல் அரசின் தந்திரோபாயத்துக்கு சிறப்பல்ல

## ஐ.நாவின் இலங்கைக்கான முன்னாள் பிரதிநிதி கருத்து

கொழும்பு, பெப். 17

எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சரத் பொன்சேகாவை இலங்கை அரசு கைதுசெய்திருக்கின்ற காலச் சூழல் சிறப்பானதல்ல என்று ஐக்கிய நாடுகளுக்கான முன்னாள் இலங்கைப் பிரதிநிதி தயான் ஜயதிலக்க தெரிவித் துள்ளார்.

அவர் அண்மையில் எழுதியுள்ள கட்டுரை ஒன்றிலேயே இக்கருத்தை முன்வைத்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

சரத் பொன்சேகா விவகாரத்தில் இலங்கை அரசு பின்பற்றிய தந்திரோபாயங்கள் மற்றும் அவரைக் கைது செய்த காலச் சூழல் ஆகியன பொருத்தமானவைதானா என்ற சந்தேகம் எழுந்துள்ளது

சுதந்திரத்திற்குப் பின்னர் ஜே.வி.பி கிளர்ச்சி மற்றும் புலிகள் யுத்தம் என இரண்டு முக்கிய பிரச்சினைகள் இலங்கையில் ஏற்பட்டுள்ளன.

சரத் பொன்சேகா கைது விவகாரம் மூன்றாம் கிளர்ச்சி ஒன்றை நோக்கி நகர்கின்றதா என்ற ஐயம் எழுந்துள்ளது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் அரசின் சில நடவடிக்கைகள் நன்மதிப்பிற்குக் குந்தகம் ஏற்படும் வகையில் அமையப் பெற்றுள்ளது.

மிகவும் இன்றியமையாத ஒரு செயற்பாடு கூட பிழையான நேரத்தில் பிழையான முறையில் மேற்கொள்ளப் படுவதனால் பாதிப்புக்கள் ஏற்படக்கூடும் என்பதனை மறந்துவிடக்கூடாது.

சரத் பொன்சேகா விவகாரம் அரசியல் ரீதியில் பிழையான முறையில் அணுகப்பட்டுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சூழலை உருவாக்கியிருக்கிறது.

கடந்த ஜனாவரி 27ஆம் திகதி 'லேக்சைட் சினமன் கார்டன் ஹோட்டலில்' இராணுவக் கமாண்டோக்களை நிறுத் தியது முதல் பல்வேறு வழிகளில் அரசு தனக்கு அபகீர்த்தியைத் தேடிக்கொள்ளும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

சரத் பொன்சேகா இராணுவச் சூழ்ச்சியில் ஈடுபட்டிருந்தால் 1962ஆம் ஆண்டு பின்பற்றப்பட்ட நடைமுறைகளை பின்பற்றியிருக்க வேண்டு.

சரத் பொன்சேகா வழக்கு சிவில் நீதிமன்றின் ஊடாக விசாரணைக்கு உட்படுத்துவதே மிகவும் பொருத்தமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# பொன்சேகா கைதின் பின்னணி குறித்து அரசு மகாநாயக்கர்களுக்கு விளக்கம் அளிக்குமாம்

கொழும்பு, பெப். 17

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு மகாநாயக்க தேரர்கள் விடுத்திருக்கும் வேண்டுகோள் தொடர்பில் அரசு அவர்களுக்கு விரைவில் விளக்கம் ஒன்றை அளிக்கும் என்று முன்னாள் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக் கூறினார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சரத் பொன்சேகா கைதுசெய்யப்பட்டமை ஓர் அரசியல் பழிவாங்கல் என்று எதிர்க்கட்சிகள் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

பொன்சேகா பதவியில் இருந்தபோது அரசியலில் ஈடுபடத் தொடங்கினார். அரசியல் கட்சிகளுடன் தொடர்புகளைப் பேணி வந்தார். அரசியல் கருத்துகளைத் தெரிவித்து வந்தார். அரசுக்கு எதிராக சதிகளைச் செய்யத் திட்டமிட்டிருந்தார். இதற்கான அனைத்து ஆதாரங்களும் எம்மிடம் உள்ளன.

பொன்சேகா அப்போது வெளியிட்ட கருத்துகள் அனைத்தும் இராணுவச் சட்டங்களை மீறியிருந்தன. அவர் அரசுக்கு எதிராகச் சதி செய்தார் என்பது முற்றிலும் உண்மை. ஆதாரங்களுடன்தான் நாம் இதைக் கூறுகின்றோம்.

இக் கைது தொடர்பாக எதிர்க்கட்சிகள் கூறும் கருத்துகள் ஏற்க முடியாதவை. நாடாளுமன்றத் தேர்தலையொட்டி எதிர்க்கட்சிகள் படும்பாட்டை நாம் அறிகின்றோம். அக்கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிடுவது தொடர்பில் ஓர் இணக்கப்பாட்டுக்கு வர முடியாமல் தடுமாறுகின்றன. ஜனாதிபதி மேல் இருந்த தனிப்பட்ட கோபம் காரணமாகவே இக்கட்சிகள் ஒன்றிணைந்து அவருக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் செயற்பட்டன.

இவ்வாறான கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை ஏற்க முடியாது. பொன்சேகாவை விடுவிக்கக் கோரி மகாநாயக்கர்கள் விடுத்திருக்கும் வேண்டுகோள் தொடர்பில் அரசு அவர்களுக்கு விரைவில் விளக்கம் ஒன்றை அளிக்கும். பொன்சேகாவின் கைது நீதியானது என்பதை அரசு உறுதிப்படுத்தும் - என்றார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கை 2030ஆம் ஆண்டில் 366 மில்லியனைத் தாண்டும்

இக்கட்டுரை யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம் பெறும் 'நீரிழிவை வெற்றி கொள்வோம்' கண்காட்சியை முன்னிறுத்தி பிரசுரிக்கப்படுகின்றது.

நீரிழிவு நோயானது சலரோகம் (Diabetes - டயபிடிஸ்) 'சீனி' வருத்தம் எனப்பலராலும் அழைக்கப்படுகிறது. இந்த நோயானது உலகளாவிய ரீதியில் ஏழை, பணக்காரன், ஆண், பெண், இனமத வேறுபாடின்றி அனைவரையும் வருத்துகின்ற நோயாக மாறிவிட்டது.

அண்ணளவாக 194 மில்லியன் மக்களை பீடித்துள்ள இந்த நோயானது நடுத்தர வயதுடையோரையே அதிகளவு பாதித்துள்ளது. இந்த நோயானது 2030ஆம் ஆண்டில் 366 மில்லியனைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒவ்வொரு 10 செக்கனுக்கும் இந்த நோயானது இருவரைப் பாதிக்கின்றது. ஒருவரைக் காவு கொள்கின்றது. அத்துடன் அனைத்து நோய்களின் இறப்பு வீதத்துடன் ஒப்பிடுகையில் இது நான்காவது இடத்தைப் பிடிக்கின்றது.

இலங்கையிலும் இந்த நோய் பரவலாகக் காணப்படுகின்றது. எனினும் சரியான தகவல்கள் சேகரிப்பதற்கான வசதிகள் எதுவும் நடைமுறையில் இல்லை. இறுதியாக 2005 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 14.5 வீதமான ஆண்களும் 13.5 வீதமான பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். உலக சுகாதார நிறுவனத்தின் மதிப்பீட்டின்படி 2 மில்லியன் மக்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உடலின் குருதியில் உள்ள குளுக்கோஸின் அளவை கட்டுப்படுத்தவென சுரக்கப்படும் இன்சுலின் எனும் ஓமோனின் தொழிற்பாட்டில் அல்லது அதன் சுரப்பில் ஏற்படும் பகுதியளவிலான அல்லது முற்றான செயலிழப்பே நீரிழிவு நோயாகும்.

இந்த நீரிழிவு நோய் பிரதானமாக இரு வகைப்படும் அவையாவன

Type I அல்லது வகை I

Type II அல்லது வகை II

வகை I நீரிழிவினால் பாதிக்கப்படுவோரில் சதையியினால் (Pancreds) சுரக்கப்படும் இன்சுலின் அளவு பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது. இவர்களின் நோயின் அறிகுறிகள் திடீரென ஏற்படும். இது பொதுவாக இளவயதினரிடையே ஆரம்பிக்கும்.

வகை II நீரிழிவினால் பாதிக்கப்படுவோரில் இன்சுலின் சுரப்பதில் குறைபாடு காணப்படாது. ஆனால் இன்சுலின் தொழிற்பாட்டில் பாதிப்புக் காணப்படும். இவர்களில் அறிகுறி இலகுவாக வெளிக்காட்டப்பட மாட்டாது. இது வயது வந்தவர்களிலும், உடற்பருமன் கூடியவர்களிலும் ஏற்படும்.

இந்த நோயின் பொதுவான அறிகுறிகளாக அதிகளவு சிறுநீர் வெளியேறல், அடிக்கடி தாகம் எடுத்தல், அதிக களைப்பு, சோர்வு, திடீர் நிறைக்குறைவு, அதிக பசி, அடிக்கடி தோலில் தொற்றுக்கள் ஏற்படல் என்பனவாகும். எனினும் மேற்குறிப்பிட்ட அறிகுறிக்ள் சலரோக நோய்க்கு மாத்திரம் உரிய அறிகுறிகள் அல்ல. மேலும் நீரிழிவு நோயானது ஏற்படின் அதனை முற்றாகக் குணப்படுத்துவது கடினம். ஆனால்,அதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் அதன் பாதிப்புக்களில் இருந்து எம்மைப் பாதுகாக்க முடியும்.

நீரிழிவு நோயானது ஒருவருக்கு ஏற்படாமல் தடுக்க பின்வரும் முறைகளை பின்பற்றுதல் அனுகூலமானது.

அ)உடல் நிறையை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.

ஆ)உணவுப் பழக்கத்தில் பின்வரும் முறைகளை பின்பற்றுதல்.

1.காபோவைதரேற்று அதிகம் உள்ள உணவை அடிக்கடி உண்பதைத் தவிர்த்தல்.

2.நார்த்தன்மையான உணவுகளை அதிகம் உண்ணுதல்.

3.தானிய உணவுகளை உண்பதை எமது உணவுப் பழக்கமாக மாற்றுதல்.

4.கொழுப்புச்சத்து கூடிய உணவுகளை உண்பதைத் தவிர்த்தல்.

இ)புகைத்தலை முற்றாகக் கைவிடல்.

ஈ)மதுபானப் பாவனையை கைவிடல்

உ)தினமும் உடற்பயிற்சி செய்தல்

ஊ) சிறுவர்களில் ஏற்படும் போசாக்கின்மையை முற்றாகத் தடுத்தல்.

ஏ)மன அழுத்தத்தை குறைத்தல் அல்லது ஆதரவான சமூக வலையமைப்பைப் பேணுதல்.


## காணத்தவறாதீர்கள்!

### ஓர் அரிய வாய்ப்பு...

நீரிழிவு நோய் என்றால் என்ன?...

அதன் குணங்குறிகள்; அதனை எவ்வாறு கண்டறிவது?...

நீரிழிவும் நோய் வராது எவ்வாறு தடுக்க முடியும்?...

அனைத்து வினாக்களுக்கும் விடை காண ...

உங்கள் நிறை, உயரம், அறிந்து கொள்ள

உடற்பருமனை குறைக்கும் சகல விதமான

உடற்பயிற்சி முறைகளையும் அறிந்து கொள்ள

கர்ப்பிணித் தாய்மாரே உங்கள் கர்ப்ப காலத்தில் நீரிழிவு

நோய் ஏற்படாமல் பாதுகாக்க

உங்கள் குழந்தைகளை சிறுபராயத்திலிருந்து

நீரிழிவு நோயிலிருந்து பாதுகாக்க

இன்னும் பல சுவாரஸ்யமான விடயங்களுடன்

**'மாபெரும் கண்காட்சி விழா'**

காலம்: 21.02.2010 - 27.02.2010

இடம்: யாழ்.மருத்துவ பீடம்


# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.17

அச்செழு மெ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டியும் சமையலறைத் திறப்பு விழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு பாடசாலையில் இடம் பெறவுள்ளன.

பாடசாலை அதிபர் க.சின்னராசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையின் பாடசாலை வேலைகள் பகுதியின் சிரேஷ்ட வேலைப் பரிசோதகர் ரி.இரவீந்திரதாஸ், சிறப்பு விருந்தினராகக் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் ஆகியோர் கலந்து கொள்வர்.(201)

* * *

யாழ்ப்பாணம், பெப்.17

யாழ்.மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி தலைமையில் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவன் புரட்சிதாசன் கலந்து கொள்ளவுள்ளார். (23)

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.1.30 மணிக்கு கல்லூரியின் அதிபர் அருட்தந்தை கே.ஜேம்ஸ் சிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார் அடிகள் கலந்து சிறப்பிப்பார். (325)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
ந.கோபாலகிருஷ்ணன் அவர்களின்
அன்புத் தந்தை

**அமரர் முருகர் நடராசா**

அவர்கள் 15.02.2010 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி,
கிளிநொச்சி.

(94923) பாடசாலைச் சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி



பொதுச் சேவை ஆர்வலரும்,
எமது உற்ற நண்பருமாகிய
எட்வேட் அருந்தவசீலன் (சீலன்)
அவர்களுடைய அருமைத் தந்தை

அமரர் **நாகேந்திரர்**

**மனுவேற்பிள்ளை எட்வேட்** (J.P)

அவர்கள் இறைபதமடைந்தமையையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.வீதி,
மானிப்பாய்.

(சி/564935)

சுந்தர்சன் உரிமையாளர்,
ஊழியர்கள்.


**சாரதி தேவை**

பிரபல கொம்பனிப் பொருள்கள் விற்பனை செய்யும் உள்ளூர் நிறுவனம் ஒன்றுக்கு வாகன சாரதி தேவை. வயதானவர்கள் விரும்பத்தக்கது

இல. 321, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/564927)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 077 4016828, 077 2247481 (சி/564936)

**பசு விற்பனைக்குண்டு**

20 போத்தல் பால் கறக்கக்கூடிய ஒரு கிழமைக்குள் கன்று ஈனும் நிலையிலுள்ள பசு விற்பனைக்குண்டு.

தொடர்பு:
சி.றமேஸ்
சண்டிலிப்பாய் வீதி,
பெரியவிளான்,
இளவாலை.
தொ.பே.: 077 2844417 (94919)

**கார் விற்பனைக்கு**



Suzuki Swif 1.3 கார் K.D... பதிவிலானது. எஞ்ஜின் கொள்ளளவு 1322.00 CC பெற்றோல் Auto கியர், மொடல் LAHT 51s வெள்ளை நிற, உற்பத்தி வருடம் 2002 உடைய முதலாவது பதிவு 2006 இல் மேற்கொள்ளப்பட்டது. நன்கு மெருகூட்டப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0776735918, 0773550082

கே.கே.எஸ்.வீதி, மருதனார்மடம்.


## மனமார வாழ்த்துகின்றோம்



மக்கள் சேவையை மிக உன்னதமாக கடமை, கட்டுப்பாட்டுடன் செய்து கடந்த 16 வருடங்களாக யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியில் சிரேஷ்ட முகாமையாளராக கடமையாற்றிவரும்

உயர்திரு **திசைவீரசிங்கம் ஜெயராஜசிங்கம்**

அவர்கள் சிரேஷ்ட வடபிராந்திய முகாமையாளராகப் பதவிஉயர்வு பெற்று தொடர்ந்தும் யாழ்.மக்களுக்குச் சேவையாற்றவுள்ளார் என்ற இனிய செய்தி அறிந்து நாம் எல்லோரும் எமது உளமார வாழ்த்துகின்றோம். காலமறிந்து அதற்கேற்ப தமது வாடிக்கையாளர்களின் உயர்வே தனது முக்கிய பணியாக ஏற்றுக்கொண்டு கடந்த நெருக்கடியான காலங்களில் எமது வளர்ச்சிக்கு உறுதுணையாகச் செயற்பட்டவர். தொடர்ந்தும் அவரது சேவை எமக்குக் கிடைக்க உள்ளதையிட்டு எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறி உயர்திரு தி.ஜெயராஜசிங்கம் அவர்களின் சேவை தொடர எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
'சுந்தர்சன்',
உரிமையாளர், ஊழியர்கள்.

யாழ்.வீதி,
மானிப்பாய்.

(சி-564934)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## உயிரியல் — பகுதி - I

01. பின்வரும் இயல்புகளில் எது புரோக்கரியோட்டாவிலும், இயூக்கரியோட்டாவிலும், உயிரங்கிகளிலும் காணப்படக்கூடியது?
1) குழியவன்கூடு. 2) சவுக்குமுளை. 3) கலச்சுவர்.
4) குழியவுரு. 5) ஒளித்தொகுப்பு நிறப்பொருள்.

02. உயிருள்ள கலங்களில் காணப்படும் புரதங்கள் எல்லாவற்றிலும் காணப்படக் கூடியன,
1) நைதரசன். 2) ஐதரசன், நைதரசன்.
3) நைதரசன், ஒட்சிசன். 4) நைதரசன், ஒட்சிசன், கந்தகம்.
5) ஐதரசன், நைதரசன், ஒட்சிசன்.

03. ஒளித்தொகுப்பின் இருள்தாக்கம் பற்றிய விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. P, Q, R, S ஆக இருக்கக்கூடியவை,
1) PGAL, RUMP, PGA, RUBP
2) RUMP, PGAL, PGA, RUBP
3) RUBP, PGA, PGAL, RUMP
4) PGA, RUBP, PGAL, RUMP
5) RUBP, RUMP, PGAL, PGA




04. NADP
1) சுவாசத்தில் வெளியேறும்.
2) தாவர நொதித்தலை விட விலங்கு இலற்றிக்கமில நொதித்தலில் அதிக பயன்படும்.
3) ஒரு நியூக்கிளிக் அமிலமாகும்.
4) றைபோஸ் வெல்லம் உண்டு.
5) தைமின் உப்புமூலம் காணப்படும்.

05. சூழல் ஒன்றின் அவதானிப்பின்போது, சோடி அவயவங்கள் உண்டு. செதிலுடைய தோல் உடைய விலங்கை ஒரு மாணவன் அவதானித்தான். இவ்விலங்கு அநேகமாக பின்வரும் எவ்வகுப்பைச் சார்ந்ததாக இருக்கலாம்?
1) CLASS Mammalia 2) CLASS Aves
3) CLASS Chondrichthyes 4) CLASS Amphibia
5) CLASS Osteichthyes

06. Plantae இராச்சியத்தின் எல்லா பிரிவுகளிலும் காணப்படும் இயல்பு எது?
1) வித்துப்பழக்கம். 2) கலன் இழைய வியத்தம்.
3) சந்ததிப்பரிவிருத்தி.
4) சனனிகளினுள் புணரிகள் வைத்திருக்கப்படுதல்.
5) ஓரின வித்திகள் உருவாக்கப்படுதல்.

07. Selaginella, Cycus இரண்டிற்கும் பொதுவாக அமையாதது எது?
1) பெண்புணரித் தாவரம் உணவுச் சேமிப்பை வைத்திருத்தல்.
2) ஆண்புணரி அசையும் திறன் உடையதாக இருத்தல்.
3) மாவித்திக்கலன் கவசத்தினால் மூடப்பட்டிருத்தல்.
4) கூம்பி காணப்படுதல். 5) பல்லின வித்திகள் காணப்படுதல்.

08. Lichen's (லைக்கன்) $SO_2$ மாசுக்களுக்குக் காட்டியாகத் தொழிற்படும். இதற்குக் காரணம்,
1) அல்கா, பங்கசு என்பவற்றுக்கு ஈட்டமாக இருத்தல்.
2) ஏனையவற்றைவிட $SO_2$ இல் விரைவாக வளரும்.
3) $SO_2$ உள்ள நிலையில் மலர்ச்சியைக் காட்டும்.
4) $SO_2$ அதிகளவு உணர்திறனுடையது.
5) $SO_2$ உள்ள நிலையில் இறந்துவிடுதல்.

09. Agaricus இனது வாழ்க்கை வட்டத்தில் பின்வரும் படிமுறைகள் காணப்படுகின்றன.
a - துணையான பூஞ்சணவிழை. b - சிற்றடி.
c - முதலான பூஞ்சணவிழை. d - சிற்றடிக்கனி.
e - சிற்றடிவித்தி.

10. ஒளித்தாக்க நிகழ்ச்சியில் நடைபெறுபவற்றில் பொருத்தமல்லாதது,
1) ADP இல் இருந்து ATP உருவாதல்.
2) நீர் மூலக்கூற்றில் இருந்து $O_2$ வெளிவருதல்.
3) சூரியசக்தி இரசாயன சக்தியாக மாற்றப்படும்.
4) ஒளித்தொகுப்பு நிறப்பொருட்கள் தொடர்ச்சியாக இலத்திரனை இழத்தல்.
5) NADPH இன் உருவாக்கம்.

11. பச்சைத் தாவரங்கள் ஒளித்தொகுப்பில் பயன்படுத்தும் ஒளி அலையின் அலைநீள வீச்சு முறையே,
1) 400, 700 nm 2) 300, 400 nm 3) 600, 800 nm
4) 400, 500 nm 5) 600, 900 nm

12. சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
1) வல்லுருக்கலவிழையங்களில் கலத்திடைவெளிகள் காணப்படுவதில்லை.
2) வல்லுருக்கலங்கள் பொதுவாக பலகருக்கொண்டவை.
3) வல்லுருக்கலவிழையக் கலங்கள் பொதுவாக கோளவடிவானவை.
4) வல்லுருக்கலவிழையங்களில் சுபரினேற்றப்பட்ட சுவர்கள் காணப்படும்.
5) வல்லுருக்கலவிழையங்கள் உயிர்ப்புள்ள கலன்களைக் கொண்டவை.


13. தாவரங்களுக்கு மிகக் குறைந்த அளவில் தேவைப்படுவதும், மிகக் குறைந்த அளவில் காணப்படுவதும் நைதரசன் பதித்தலுக்கு முக்கியமாகத் தேவைப்படும் மூலகம்,
1) Cl 2) Mn 3) Mo 4) Zn 5) Cu

14. Nephrolepisஇன் வாழ்க்கை வட்டத்தில் பின்வரும் சிறப்பியல்புகளில் எது இருப்பதில்லை?
1) ஆட்சியுடைய வித்தித்தாவரச் சந்ததி.
2) சுயாதீனமான புணரித்தாவரம்.
3) நுண்வித்தி, மாவித்தி விருத்தியடைதல்.
4) புணரித்தாவரம் வித்தித்தாவரத்தில் தங்கியிருத்தல்.
5) திட்டமான சந்ததிப் பரிவிருத்தி காணப்படும்.

15. வித்துமூடியுளிகள் பற்றி பிழையானது எது?
1) இரட்டைக் கருக்கட்டல் நிகழும். 2) இருவகை வித்தி உருவாகும்.
3) ஆட்சியுடைய வித்தித்தாவரம்.
4) கருக்கட்டலுக்கு அகநீர் தேவை.
5) ஒடுக்கமடைந்த புணரித்தாவரம்.

16. வித்துமூடியுளி, வித்துமூடியிலி ஒத்திருப்பது
1) ஆட்சியுடைய புணரித்தாவரம். 2) அசையும் விந்துப்போலி.
3) ஈரில்ல நிலைமை. 4) வித்து தோன்றுதல்.
5) கருக்கட்டலுக்கு அகநீர்.

17. கீழே தரப்பட்டுள்ள படம் பூக்கும் தாவர இனம் ஒன்றின் மகரந்தமணி, சூல் ஆகியவற்றின் வெட்டுமுகம் ஆகும். கருக்கட்டலின் பின்னர் பின்வரும் சேர்க்கைகளில் எது நுகம், வித்தகவிழையத்தைத் தரக்கூடியது?
1) EC + EB
2) ED + FB
3) FA + FB
4) FC + FB
5) EA + EB




* 18ஆம், 19ஆம் வினாக்கள் பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டவை. முதல் நிரலில் 3 ஓமோன்கள் தரப்பட்டுள்ளன. இரண்டாவது நிரலில் அவை உற்பத்தியாகும் இடம் தரப்பட்டுள்ளது. மூன்றாவது நிரலில் அதன் தொழிற்பாடு கொடுக்கப்பட்டுள்ளது.

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| தாவர ஓமோன் | உற்பத்தி | முக்கிய தொழிற்பாடு |
| A = Gibberallins | L - பூக்கள் | P - உச்சியாட்சி |
| B = Ethylene | M - அங்குரம் | Q - உறங்குநிலை உடைவு |
| C = Auxin | N - இளம் இலை | R - பழவிருத்தி |

18. ஓமோன்கள் A, B, C என்பன உற்பத்தியாகும் பிரதான இடங்களைச் சரியான ஒழுங்கில் காட்டுவது பின்வருவனவற்றுள் எது?
1) N,L,M 2) N,M,L 3) M,N,I 4) M,L,N 5) L,N,M

19. ஓமோன்கள் A, B, C என்பவற்றின் முக்கிய தொழிற்பாட்டைக் காட்டும் ஒழுங்கு பின்வருவனவற்றுள் எது?
1) P,Q,R 2) P,R,Q 3) R,Q,P 4) Q,R,P 5) Q,P,R

20. மனித இதயம் தொடர்பில் பிழையான கூற்று,
1) ECG வரைபு கலத்தொழிற்பாட்டின் மின்மாற்ற வெளிப்படுத்துகை ஆகும்.
2) சோணை, இதயவறைத் தசைக்கலங்களுக்கு இடையே வலையமைப்பு தொடுப்பு இழையத்தால் பிரிக்கப்பட்டுள்ளது.
3) நெஞ்சறைக் குழியில் வாதநாளியின் பிற்புறமாக அமைந்துள்ளது.
4) இதயத்தசைக் கலங்கள் தமக்கிடையே ஒரு வலையமைப்பைக் கொண்டுள்ளன.
5) இதயத்தசைக் கலங்களில் ஒன்று அல்லது இரண்டு கருக்கள் காணப்படும்.

21. முள்ளந்தண்டில்லா விலங்குகளில் அதிகளவு காணப்படும் சுவாசப்பரப்பு எது?
1) வாதநாளி. 2) பூக்கள். 3) சுவாசமரம்.
4) ஏட்டு நுரையீரல். 5) குழாய்ப்பாதம்.

22. மனிதனுடைய தெறிப்புவில்லின் பாதையாக அமையக்கூடியது,
வாங்கி (e), உட்காவு நரம்பு (b), வெளிக்காவு நரம்பு (a), இடைத்தூது நரம்பு (c), விளைவுகாட்டி (d)
1) e, a, b, c, d 2) e, b, e, c, d 3) e, b, c, a, d
4) e, b, a, c, d 5) e, a, c, b, d

23. பின்வரும் கூற்றுக்களில் தவறானது எது?
1) hGG - மஞ்சள் சடலத்தை நிலைபேறு செய்தல்.
2) புரஸ்ரோகிளன்டின்ஸ் - கருப்பை தசைச்சுருக்க மீடிறனை அதிகரிக்கச்செய்தல்.
3) ஒட்சிரோசின் - பால்சுரப்பியில் இருந்து பாலை வெளித்தள்ளல்.
4) ரிலக்சின் - கருப்பைத் தசைச்சுருக்கத் தூண்டல்.
5) FSH கிராபியன் புடைப்பின் விருத்தியைத் தூண்டுதல்.

24. ஆரோக்கியமான மனிதனின் சுவாசஈவு (RQ) 24 மணி நேரத்தில் வேறுபடுவதன் காரணம்,
1) உடல் அனுசேப வீதம் மாறுபடுதல்.
2) உடல் வெப்பநிலை சீராக்க நடவடிக்கைகள் வேறுபடுதல்.
3) மூச்சு விடும் வீதம் மாறுபடுதல்.
4) சுவாச அடிப்படைப் பொருள் மாற்றம் அடைதல்.
5) நுரையீரல்களின் வற்றுப்பெருக்க கனவளவுகள் வேறுபடுதல்.

25. மனிதனின் சிறுநீரகத்தியின் எப்பகுதி கலன்கோள வடிதிரவத்தின் கனவளவின் பெரும்பகுதியின் குறைவிற்கு காரணமாக அமைகின்றது,
1) அண்மையான மடிப்படைந்த சிறுகுழாய்.
2) என்லேயின் இறங்கு புயம்.
3) என்லேயின் வளைவு. 4) என்லேயின் ஏறுபுயம்.

26. பின்வரும் சேர்மானங்களில் சரியானது எது?
A - சிறுநீரகம் X - உடுவுருக்குழியம்
B - என்லேயின் வளைவு Y - கூபரின் கலம்
C - மூளை Z - பாதக்குழியம்
1) A, Y 2) B, X 3) C, Y 4) B, Z 5) C, X

27. மனிதனின் சுவாசப்பையில் தொகுதிவில்லை உருவாகுவது முறையே,
1) முதலாம், 3 ஆம் நாடிவிற்கள். 2) 3 ஆம், 4 ஆம் நாடிவிற்கள்.
3) 3 ஆம், 6 ஆம் நாடிவிற்கள். 4) 4 ஆம், 6 ஆம் நாடிவிற்கள்.
5) 6 ஆம், 4 ஆம் நாடிவிற்கள்.

28. மயலின் கவசம் தொடர்பான தவறான கூற்று எது?
1) இலிப்பிட்டுப் பதார்த்தத்தினால் ஆக்கப்பட்டது.
2) காவலிப் போர்வையாகத் தொழிற்படும்.
3) கணத்தாக்கக் கடத்தல் வேகத்தைக் கூட்டும்.
4) உட்காவு நரம்புமுளையில் இருப்பதில்லை.
5) அச்சுருளையை காயமடைதலில் இருந்து பாதுகாக்கும்.

29. மனிதப் பெண்ணின் குருதியில் பின்வரும் ஓமோன்களில் எது மகப்பேறு நிகழ்வதற்கு முன்னதாக விரைவாக வீழ்ச்சியடைகிறது.
1) HGG 2) Oestrogen
3) Progesterone 4) Prolactin 5) Oxytocin

30. மனிதக் கண்,
1) மையச்சிற்றிறக்கத்தில் கோல் செறிவாக உள்ளது.
2) விழிவெண்படலம் ஒளிபுகவிடும் இயல்பு அற்றது.
3) குருட்டிடம் ஒளிவாங்கி அற்ற பிரதேசம் ஆகும்.
4) விழிவெண்படலத்திற்கும், வில்லைக்கும் இடையே கண்ணாடியுடனீர் காணப்படும்.
5) கதிராளியில் நிறப்பொருள் காணப்படுவதில்லை.

31. புரதத்தொகுப்பில் பிரதியாக்கம் என்பது,
1) DNA இன் பட்டிக்குரிய உப்புமூல ஒழுங்கில் இருந்து புதிய DNA பட்டி தயாரித்தல்.
2) DNA உப்புமூல ஒழுங்கு பொலிபெப்ரைட்டுச் சங்கிலி உருவாகக்கூடியவாறு வாசித்தல்.
3) mRNA பட்டி உருவாக்கத்திற்கு ஏற்ப ஒரு DNA உப்புமூல ஒழுங்கு வாசிக்கப்படுதல்.
4) mRNA கருவில் இருந்து குழியவுருவிற்கு அசைதல்.
5) mRNA இல் இருந்து பொலிபெப்ரைட்டு ஒன்று வாசிக்கப்படுதல்.

32. மனிதக் குடித்தொகை ஒன்றில் 49% PCT இற்கு சுவை உணர்வு இல்லாதவர்கள். இதன் சுவை உணர்விற்கு ஆட்சியான எதிருரு இருப்பது அவசிய மாகும். இக் குடித்

(20 ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர்: R.ஈஸ்வரதாஸன் B.Sc (Biology), PG Dip in Eclu, MEd, MPhil
கொழும்பு இந்துக் கல்லூரி, கொழும்பு.

2010 உயர்தர மாணவர்களுக்காக பல [illegible] விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதற்றத்தைத் தடுக்கப் பல வழிகள்



பதற்றம் பல்வேறு நிலைகளில் பல்வேறு விதங்களில் மனிதர்களைப் பாதிக்கிறது. பதற்றம் என்பது ஒரு மனநோயன்று. ஆனால், அதைத் தொடக்கத்திலேயே நாம் கிள்ளியெறிய மறந்தால் அது மனநோய்க்கு வித்தாகிவிடக்கூடும். எனவே பதற்றம் எதனால் உண்டாகிறது, அதனை எப்படித் தவிர்க்கலாம் என்று அறிய வேண்டும். சிறு குழந்தைகளை நாம் எப்படி நடத்துகிறோமோ, அவர்களுக்கு என்ன கற்றுத் தருகிறோமோ அதுதான் பொதுவாக அவர்களது குணநலன்களுக்கு அடிப்படையாகிறது. எனவே சிறு குழந்தைகளாக இருக்கும்பொழுதே அவர்களைப் பலருடன் பழகவும், பல சூழல்களைக் கையாளவும் கற்றுக் கொடுத்துவிடுவதும், குழந்தைகளை மட்டம் தட்டிக் கேலி செய்யாமல் தட்டிக் கொடுத்து வளர்ப்பதும் மிகவும் அவசியம். சிறுகுழந்தைகளாக இருக்கையில் பிறருடன் பேச, பழக வெட்கப்படும் குழந்தைகளை அப்படியே விட்டுவிடாமல், மெல்ல மெல்லப் பலருடன் பழக வாய்ப்பினை உண்டாக்கி, பயிற்சி அளிக்க வேண்டும். இல்லாவிட்டால், வளர்ந்தபின் கல்லூரியில் படிக்கையில் நான்கு பேருடன் பேசவோ, வெளியில் செல்லும் சந்தர்ப்பம் ஏற்படுகையில் பதற்றத்தால் அவர்கள் ஆக்கிரமிக்கப்பட்டுவிடவோ கூடும். இத்தகையவர்கள் தமது ஆசிரியர்களிடம் தமது சந்தேகங்களைக் கேட்கவோ, தம்முடன் படிப்பவர்களுடன் பேசவோ நேரும்பொழுது அதிகக் கூச்சத்தாலும் பயத்தாலும் ஆக்கிரமிக்கப் பட்டுவிடுவர். பொது இடங்களுக்குச் செல்வது, சிறிய குழுவுடன் பேச நேர்வது இவை அவர்களுக்கு அதிக பதற்றத்தை உண்டாக்கும்.

அதேபோல் சிறுகுழந்தைகளாக இருக்கையில் கேலிக்கு ஆளாகி வளர்ந்தவர்கள், பெற்றோராலும் மற்றவர்களாலும் திட்டி, மட்டம் தட்டி வளர்க்கப்பட்டவர்கள், பெரியவர்களாகியபின் கூட எந்தச் செயலைச் செய்வதானாலும் குழப்பமும் பதற்றமும் அடைவார்கள். பிறருடன் பேசுகையில் கை கால்கள் நடுங்குதல், உடல் வியர்த்தல், புதிய இடங்களுக்குச் செல்லத் தயங்குதல் இவையெல்லாம் பதற்றமான மனநிலைக்கு அறிகுறி. புதிய சூழலுக்கு ஆட்படுகையில் சிலர் பதற்றத்தால் மயக்கமடைவதும் மாரடைப்பு ஏற்படுவதும்கூட நடப்பதுண்டு. இத்தகைய பதற்றமான மனநிலை உடையவர்கள் தாழ்வு மனப்பான்மைக்குள் விழுந்து விடுவதும் மனச்சோர்வுக்கு ஆளாவதும் அதிகம். பதற்றம் என்ற ஒரு குணம் இவர்களது நேரத்தையும் ஆற்றலையும் விழுங்கி இவர்களது திறமைகளைப் பிரகாசிக்க விடாமல் வீணடிக்கச் செய்கிறது. எனவே இவர்கள் தம்மையே சுயபரிசோதனை செய்துகொண்டு தாம் இந்தப் பதற்றம் என்னும் சிறையில் இருந்து விடுபட நினைத்தால் அதற்கு என்ன வழி? பதற்றம் வெல்ல நினைப்பவர்களுக்கு முதலில் வாழ்த்துக்கள். நீங்கள் பதற்றத்தை வெல்ல வேண்டும் என நினைப்பதே ஒரு நல்ல அறிகுறி. நீங்கள் செய்யவேண்டியது என்ன தெரியுமா? நமது எண்ணங்களே நம் வாழ்வின் அடிப்படை. நமது நேர்நிலை எண்ணங்கள் நமக்கு நற்பலனையும் எதிர்மறை எண்ணங்கள் தோல்வியையும் உண்டாக்குகின்றன. தவறு செய்துவிடுவோமோ என்ற அச்சத்துடன் செய்யும் வேலைகள் தவறாகவேதான் முடியும். எனவே எதிர்மறையான சிந்தனைகள் (Negetive Thinking) தோன்றும் பொழுது கவனமாக உங்கள் மனத்தை வேறு நேர்நிலையான எண்ணங்களுக்குத் (Positive Thinking) திருப்புங்கள். ஆரம்பத்தில் கொஞ்சம் கடினமாக இருக்கும். என்றாலும் கொஞ்சநாளில் உங்கள் மனமானது தானாகவே நேர்நிலைக்கு மாறி விடுவதைக் காண்பீர்கள்.

ஒரு தாளைக் கையில் எடுத்துக் கொள்ளுங்கள். உங்களிடம் உள்ள குறைபாடுகள் என்னென்ன? எந்தெந்த விடயங்கள் உங்களுக்குப் பதற்றத்தைத் தூண்டுகின்றன எனப் பட்டியலிடுங்கள். பின் நிதானமாக அக்காகிதத்தைக் கிழித்து குப்பைத் தொட்டியில் எறியுங்கள். இக்குறைபாடுகள் என்னைவிட்டு வெகுவிரைவில் நீங்கிவிடும் என்றும், இனி இச்சூழல் என்னை அச்சுறுத்தாது, இத்தகைய சூழலை எதிர்கொள்ளும் தெம்பு எனக்கிருக்கிறது என்றும் திடமான குரலில் உங்களுக்கு நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள். சுய அறிவுரை (Auto suggestion) என்ற இந்த முறை ஆழ் மனத்தில் உங்களைப் பற்றி நீங்களே பதித்து வைத்திருக்கும் தவறான பிம்பத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவிடும். உங்களிடம் உள்ள திறமைகள் மற்றும் உங்கள் நிறைகள் என்னென்ன என்பதைப் பட்டியலிடுங்கள்.

எனக்கு எந்தத் திறமையுமே இல்லை என்று பதில் சொல்லாதீர்கள். 'எறும்பும் தன்கையால் எட்டுச் சாண்' என்பார் ஔவைப்பிராட்டி. இனிமையான குரலா? உயரமா? நினைவில் வைத்துக்கொள்ளும் திறமையா? கணக்கில் புலியா? வேகமாக ஓ[illegible] வல்லவரா? சமையலில் திறமைசாலியா? பிறருக்கு உதவும் குணமும், மனமும் உள்ளவரா? என்னென்னவெல்லாம் உங்களுடைய நல்ல குணங்கள் அல்லது திறமைகள் என்று கருதுகிறீர்களோ அவை எல்லாவற்றையும் பட்டியலிட்டுப் பாருங்கள். உங்கள் மனம் தளர்ந்து போகும் போது அப்பட்டியலை எடுத்துப் படித்துப் பாருங்கள். (தொடரும்)



## பதவி வெற்றிடங்கள்

மருந்து விற்பனைப் பிரதிநிதி

தேவையான தகைமைகள் :

1. குறைந்தபட்சம் க.பொ.த உயர்தரப் பரீட்சைச் சான்றிதழ்.
2. மருந்து விநியோக நிறுவனம் ஒன்றில் குறைந்தபட்சம் 6 மாதங்கள் மருந்து விற்பனைப் பிரதிநிதியாக சேவையாற்றிய அனுபவம்.

மிகச் சிறந்த சம்பளப் பொதி வழங்கப்படும்.

உங்களுக்கு ஆர்வமிருந்தால், இவ் விளம்பரம் பிரசுரமான ஒரு வார காலத்திற்குள் உறவினரல்லாத 2 நடுவர்களின் தொடர்பு விபரங்களுடன் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட விண்ணப்பத்தை அனுப்பவும்.

to Consultant Human Resources,
Indoscan (Pvt) Limited.
No. 441/2A Cotta Road, Rajagiriya.

Indoscan (Pvt) Limited

Tele No: 011 2886034 Fax No: 011 2886035 E-Mail: md_indoscan@eol.lk

## LOLC மாபெரும் வாகனச் சந்தை

நீங்கள் விரும்பும் வாகனத்தை உடனடியாக பெற்றிடுங்கள்

LOLC
அபிவிருத்திப் பாதையின் முன்னோடி

அனைத்து வாகன லீசிங்களுக்கும் காப்புறுதி இலவசம்




- குறைந்த ஆவணங்கள்
- குறைந்த வட்டி வீதம்
- லீசிங் பெறும் அனைவருக்கும் விஷேட பரிசுப்பொதிகள்
- இலவசப் பதிவு
- கவர்ச்சிகரமான சலுகைகள்
- பிறவுன்ஸ் இடமிருந்து இரண்டு மற்றும் நான்கு சக்கர ட்ரக்டர் வண்டிகள்

பெப்ரவரி 14ம் திகதி முதல் 26ம் திகதி வரை 121, பவர் ஹவுஸ் வீதி, யாழ்ப்பாணம்

அழையுங்கள் - 0773 596476 / 0777 394838

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. மேயர் சிவகீதா [illegible] பதவியிலிருந்து நீக்க முஸ்தீபு



மட்டக்களப்பு, பெப். 17

மட்டக்களப்பு மாநகரசபை மேயர் சிவகீதா பிரபாகரனை மேயர் பதவியிலிருந்து உடனடியாக நீக்க வேண்டும் எனத் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் அஸாத் மௌலானா தெரிவித்துள்ளவை வருமாறு:-

இறுதியாக நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது அமைப்பு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வின் அடிப்படையிலேயே குறிப்பிட்ட தேர்தலில் எமது வேட்பாளர்களையும் நிறுத்தியது.

எமது கட்சியின் மூலம் நிறுத்தப்பட்ட வேட்பாளரான சிவகீதா பிரபாகரன் வெற்றி பெற்றதையடுத்தே அவரை மட்டக்களப்பு மாவட்ட மேயராக நியமிக்க வேண்டும் என நாம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உயர் பீடத்தைக் கேட்டிருந்தோம். அதற்கமைவாகவே அவருக்கு மேயர் பதவியும் வழங்கப்பட்டது.

ஆனால், அவர் அண்மையில் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்தார். இதற்கு முன்னர் கூட எமது கட்சியின் ஆலோசனைகளைப் பெறாத நிலையிலேயே சில முடிவுகளையும் மேற்கொண்டிருந்தார்.

இந்த நிலையில், இவரை எமது கட்சியில் தொடர்ந்தும் வைத்திருப்பதில் அர்த்தம் இல்லை.

இது தொடர்பாக நாம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் சுசில் பிரேமஜயந்தவிடம் எமது நியாயங்களை எடுத்துக் கூறியுள்ளதுடன், அவரை உடனடியாக மேயர் பதவியிலிருந்தும் நீக்குமாறும் கேட்டுள்ளோம். -என்றார்.

மட்டக்களப்பு மாநகரசபை மேயர் சிவகீதா பிரபாகரன் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அங்கத்தவராக நான் இருக்கிறேன். அந்தக் கட்சியினால்தான் எனது விவகாரங்களைக் கையாளமுடியும்.

என்னை மேயர் பதவியிலிருந்து நீங்குமாறோ அல்லது நீக்கப்பட்டுள்ளதாகவோ கூட்டமைப்பின் செயலாளரான சுசில் பிரேம்ஜயந்தவிடமிருந்து எவ்வித அறிவித்தலும் எனக்குக் கிடைக்க வில்லை.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிடுவதா, இல்லையா என்பதை நானே தீர்மானிக்காத நிலையில் என்னைத் தேர்தல் [illegible] லிருந்து தவிர்த்துக்கொள்வது [illegible] மற்றவர்கள் [illegible] பயனுமில்லை. (ளி)




# தபால் மூல வாக்களிப்புக்கான பணிகள் மட்டு. மாவட்டத்தில் ஆரம்பம்

மட்டக்களப்பு, பெப். 17

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் [illegible] ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இதன் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால் வாக்குப் பதிவுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ரி.கிருஷ்ணானந்தலிங்கம் அறிவித்துள்ளார்.

தபால் வாக்காளர்களுக்குரிய விண்ணப்பப் படிவங்கள் உரிய அலுவலகங்களுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக விண்ணப்பங்கள் தேவைப்படுமிடத்து மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் இருந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தபால் வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தமது விவரங்களை அறிந்து கொள்வதற்கு வசதியாக 2008 ஆம் ஆண்டிற்கான அத்தாட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் அரச அலுவலகங்களில் தற்போது பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இவற்றைப் பயன்படுத்தி தபால் வாக்காளர்கள் தமது விண்ணப்பங்களை பிழையின்றி பூர்த்தி செய்யமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முப்படையினர், பொலிஸார் மற்றும் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அரச சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர். (ளி)

# கிழக்கு கல்விப் பணிப்பாளர்களின் இடமாற்றங்களை ரத்துச்செய்க

## கிழக்கு ஆளுநரிடம் கோரிக்கை

மட்டக்களப்பு, பெப். 17

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி மற்றும் திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் அ.விஜயானந்த மூர்த்தி ஆகியோரின் திடீர் இடமாற்றங்களை இரத்துச் செய்யுமாறு கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் கிழக்கு மாகாண ஆளுநரைக் கோரியுள்ளது.

உயர் பதவியிலுள்ள பணிப்பாளர்கள் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதனால் சிறந்த முறையில் கல்வி அபிவிருத்திக்கு பாடுபட்டு வந்த இவர்களின் கல்வி அபிவிருத்திச் செயற்பாட்டில் பெரும் பாதிப்பு ஏற்படும் எனச் சுட்டிக் காட்டியுள்ள இச்சங்கம், மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.த்ண்டாயுதபாணி ஒரு சிறந்த அதிபராகவும், தொழிற்சங்கவாதியாகவும் இருந்தமையினால் அதன் அனுபலங்களினூடாகக் கல்வி அபிவிருத்திக்கு முயற்சித்தவர் எனவும்- இவ்வாறே வலயக் கல்விப் பணிப்பாளர் அ.விஜயானந்தமூர்த்தி கல்விச் செயற்பாட்டில் பல மாற்றங்களை ஏற்படுத்தியதுடன் அவர் பதவி ஏற்று ஒரு வருடம் கூட ஆகவில்லை எனவும் சங்கம் தனது வேண்டுகோள் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளது. (ளி)

# பெரும்போக நெல் செய்கை மட்டு.மாவட்டத்தில் ஆரம்பம்

மட்டக்களப்பு, பெப். 17

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக நெல் அறுவடை நடவடிக்கைகள் தற்போது ஆரம்பமாகியுள்ளன.

செங்கலடி - பதுளை வீதியை அண்டியுள்ள பகுதிகளில் சுமார் 45 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இம்முறை நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்முறை பெரும்போகத்தின் போது நிலவிய சாதகமான காலநிலை காரணமாக அமோக விளைச்சல் பெறப்பட்டுள்ளது என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். ஏக்கர் ஒன்றுக்கு 25 தொடக்கம் 40 வரையான மூடை நெல் அறுவடையாகப் பெறப்பட்டுள்ளது என விவசாயிகள் கூறுகின்றனர்.

சுமார் 30 வருட அசாதாரண சூழ்நிலை நீங்கி தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலைகள் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் அதிகளவில் நெற்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நெல் உற்பத்திக்குப் பெயர்போன மாவட்டங்களில் ஒன்றான மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது புதிய உத்வேகத்துடன் விவசாயிகள் தமது நெற்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதால் நெல்லுற்பத்தி பெரிதும் அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாவட்டத்தில் நிலவும் அமைதியான சூழ்நிலைகள் காரணமாக தமிழ் - முஸ்லிம் விவசாயிகள் மிகுந்த ஒற்றுமையுடன் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். (ளி)

## இன்று சம்மாந்துறையில் சிரமதானம்

சம்மாந்துறையில் இன்று புதன்கிழமை டெங்கு ஒழிப்புச் சிரமதானம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்மாந்துறை முஸ்லிம் தேசிய கல்லூரியில் மாணவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து டெங்குநோய்த் தடுப்பு சிரமதானத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

2,500 மாணவர்கள் கற்கும் இக்கல்லூரியின் வளாகம் இன்று பாடசாலை நேரத்தில் பூரணமாகச் சுத்தம் செய்யப்படவிருக்கிறது. அண்மைக் காலமாக சம்மாந்துறைப் பகுதியில் டெங்குநோய்த் தாக்கம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (ளி)

# அம்பாறை மாவட்ட தமிழர் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் உறுதி

## முதலமைச்சர் தமிழர் மகாசங்கத்தினர் சந்திப்பில் தீர்மானம்

காரைதீவு, பெப். 17

அம்பாறை மாவட்டத் தமிழர் பிரதிநிதித்துவம் எந்தவகையிலும் பறிபோகாது பாதுகாக்கப்படவேண்டும். அதற்கான சகல ஏற்பாடுகளையும் மிகவும் துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறான கருத்தொருமைப்பாடொன்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கத்துடனான சந்திப்பில் எட்டப்பட்டுள்ளது.

பிரஸ்தாபச் சந்திப்பு கடந்த ஞாயிறன்று மாலை மட்டக்களப்பிலுள்ள முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

முதலமைச்சர் தரப்பில் அவருடன், கிழக்கு மாகாணசபை உறுப்பினரும், முன்னாள் நாவிதன்வெளி பிரதேசசபை தவிசாளருமான சோ.புஷ்பராசா, முதலமைச்சரின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் சீலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் சார்பில் பொதுச் செயலாளர் சிவஸ்ரீ. சிவஞானச் செல்வக்குருக்கள் தலைமையிலான பன்னிருவர் கொண்ட குழு பங்குகொண்டது.

அம்பாறை மாவட்டத் தமிழர்களுக்கான ஒரேயொரு நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைத் தக்கவைக்க தன்னாலான முழு ஒத்துழைப்பையும் மகாசங்கத்திற்கு வழங்குவார் என முதலமைச்சர் தெரிவித்தார்.

தமிழர் பிரதிநிதித்துவம் எந்தவிலை கொடுத்தாவது பாதுகாக்கப்படவேண்டும் என்பதில் மகாசங்கமும், முதலமைச்சரும் தீர்க்கமான முடிவெடுத்தனர்.

முதலமைச்சர் சார்ந்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கட்டாயம் தனித்துப் போட்டியிடும். இதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

தமிழர் சார்ந்த கட்சியினர் ஓரணியில் போட்டியிட வேண்டும். அதனூடாகப் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மகாசங்கத்தினர் இதன் போது முன்வைத்தனர்.

தமிழர் கூட்டமைப்பின் இரா.சம்பந்தன் ஐயாவைத் தாம் தேடிச்சென்று அவரது இடத்தில் சந்தித்தார் எனவும் அவர்கள் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதில் உறுதியாக உள்ளனர் எனவும் ஏனையோரையிட்டு கவலைப்படுவதில்லை எனவும் முதலமைச்சர் அங்கு மேலும் கூறினார். (ளி)

# கிழக்குப் பாடசாலைகளில் தொடர்ந்தும் அனர்த்த முன் ஆயத்த கல்வித் திட்டம்

மட்டக்களப்பு, பெப். 17

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் அனர்த்த முன்ஆயத்த பாதுகாப்புக்கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்தும் - இந்த ஆண்டிலும் முன்னெடுப்பதற்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அனர்த்தங்கள் நிகழும்போது செயற்பட வேண்டியவிதம் தொடர்பாகப் பாடசாலைச் சமூகத்தினருக்கு அறிவூட்டுவதன் மூலமாக அனர்த்தங்களின்போது ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன் அனர்த்த பாதுகாப்புக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

கல்வி வலய மட்டத்தில் அனர்த்த இடர் முகாமைத்துவ இணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், இவர்கள் மூலமாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் அனர்த்த முன்ஆயத்தம் தொடர்பான பயிற்சிகளும், தேவை[illegible] வழங்கப்படவுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர்களுக்கு செயன்முறைப் பயிற்சியளிக்கும் மூன்று நாள் செயலமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை திருகோணமலை மனிதவள அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஜேர்மன் தொழிநுட்ப நிறுவனத்தின் உதவியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அடிப்படைக்கல்வி அலகினால் இந்த [illegible] நடத்தப்படவுள்ளது என கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களது

# சமயலறைக் கழிவுப் பொருள்களை தோட்டத்திற்குரிய உரமாக்குவது எவ்வாறு?

**2:5 நுண் அங்கிகள் கழிவுகளை எவ்வாறு உரமாக மாற்றுகின்றன?**

கழிவுகள் நுண்அங்கிகளால் உரமாக்கப்படுவது ஒரு இயற்கையான செயன்முறையாக இருந்தபோதிலும் இது ஒரு சிக்கலான நடைமுறையுமாகும். இந்த விடயத்தை ஒரு இலகுவான முறையில் விளக்க முயற்சிக்கின்றேன்.

மாப்பொருள், புரதம், கொழுப்பு போன்ற உறுப்புக்களைக் கொண்டனவே நுண் அங்கிகள். முக்கியமாக பற்றீரியாக்களும் பங்கசுக்களும் தமது உணவுக்காகப் பொருள்களை உடைப்பதன் மூலம் உரவாக்கத்தை ஆரம்பித்து வைக்கின்றன. இந்த செயன்முறையின்போது பொருள்களில் உள்ள கரிப்பொருள் (Carbon) Carbondioxide ஆக மாற்றப்படுகின்றது. இவ்வாறு மாறும்போது பெருமளவு வெப்பம் வெளிவிடப்படும். உரமாக்கும் நடைமுறையானது ஒரு இயற்கை வெப்ப நடைமுறையாகும். அதாவது வெளிவிடப்படும் வெப்பமானது உர அமைப்புக்குள் அகப்படுத்தப்படுகின்றது. இதனால் உரக் குவியலின் வெப்பம் அதிகரிக்கின்றது. $40^{\circ}$c முதல் $50^{\circ}$c வரை வெப்பம் அதிகரித்ததெனவைப்போம். இப்போது மிதமான வெப்பத்தில் வாழும் தன்மையுடைய உரத்தில் இருக்கும் நுண் அங்கிகள் உரக்குவியலில் தொடர்ந்து வாழமுடியாது போய்விடுகின்றது. அப்போது ஒன்றில் உரக்குவியலின் வெப்பமான பகுதியில் இருந்து குளிரான பகுதிக்குப் போய்விடும். அன்றேல் எண்ணற்ற தொகையில் அழிந்து தாமும் உரமாகி விடும்.

குப்பைக் கூட்டில் நடக்கும் உரச்செயன்முறை இந்த இடத்தில் நின்று விடுவதில்லை. இயற்கையாலேயே உரச் செயன்முறைக்கு அனுப்பப்படும் வெப்பத்தை விரும்பும் நுண்அங்கிகள் அங்கே தொடர்ந்து இருக்கும்.

இருந்துகொண்டு நடவடிக்கையைத் தொடர்கின்றது. இவர்களது செயலும் க்ரியை காபனீரொட்சைட் ஆக மாற்று நடைமுறைக்கு உதவுகின்றது. இதனால் இங்கே கூடுதலான வெப்பம் உருவாக்கப்படுகின்றது. இதன்போது உரமாக்கும் பகுதி முன்னரைவிட வெப்பமாகின்றது.

பகுதி -3

இப்போது வெப்பம் $70^{\circ}$c வரை உயர்ந்துவிட்டால் வெப்பம் விரும்பும் நுண் அங்கிகள் மெதுவாக வேலை செய்யும் அல்லது உரக்கிடங்கை விட்டு நீங்கிவிடும். எங்கள் தோட்டத்து உரக்கிடங்கின் வெப்பம் $70^{\circ}$cக்கு மேல் உயர்வது அரிதாகும். இங்கே என்ன நடக்கின்றதெனின் $50^{\circ}$c முதல் $70^{\circ}$c வரை வெப்பநிலை உள்ளபோதே இந்த வெப்பத்தை விரும்பும் நுண் அங்கிகள் விரைவாக குப்பைக் கிடங்கிற்குள் உள்ளவற்றை உடைத்து உணவாக்கியபின் அக்கிடங்கில் அவை உயிர் வாழ்வதற்கு அவற்றிற்கு வேண்டிய உணவு முடிந்துவிடும். இதன்போது இவை அந்த கிடங்கைவிட்டு நீங்குகின்றன.

கிடங்கில் இப்போது உரவாக்கத்திற்கு அதாவது உணவுத் தேவைக்குரிய அதிக கழிவு இல்லாதபோது வெப்பம் அங்கே குறைந்துவிடுகின்றது. இப்போது குப்பைக் கிடங்கின் மற்றப் பகுதியில் வசிக்கும் குளிர்ச்சியை விரும்பும் நுண் அங்கிகள் கிடங்கின் எல்லாப் பகுதிகளிலும் மிகுதி கழிவுகளையும் உரமாக்குவதற்கு பரந்துவிடும். குப்பைக் கிடங்கின் இந்தத் தோற்றம் உரத்தின் மாறுபடும் இடம் என அறியப்படும்.

உரத்தின் தன்மை மாறுபாடடையும் நேரத்தில் Fungiகளும் Achinomycete எனப்படும் நுண் அங்கிகள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கும். இவையே உரத்திற்கு இறுதித் தோற்றத்தைக் கொடுப்பன. இதன் இறுதிநிலையில் வருவதுதான் முதிர்ந்த உரமாகும். இப்போது நீங்கள் நுண் அங்கிகளால் உரமாக்கப்பட்ட உரங்கள் கழிவுகளை இலவச உரமாக உங்கள் தோட்டத்திற்குப் பயன்படுத்தலாம்.

**2:6 உரம் முதிர்ந்த நிலை அடைந்தமையை நாம் எவ்வாறு அறியலாம்?**



உரம் முதிர்ந்துவிட்டது என்பதை அங்கு வரும் மண்புழுக்கள் மூலமும் வேறுபட்ட உயிர் வடிவங்கள் மூலமும் நாம் அறிந்துகொள்ளலாம். குப்பைக் கிடங்கில் மண்புழுக்கள் வந்த வுடன் குப்பைக் கிடங்கின் வெப்பநிலை, காற்றோட்டம், ஈரப்பதநிலை ஆகியன சமநிலையில் இருப்பதை நாம் உணர முடியும். இப்போது உரமானது அமிலமோ, காரமோ அற்றநிலையில் இருக்கும் குப்பைக் கிடங்கின் வெப்பத்தன்மை குறைந்தேனும் அழிந்தேனும் விடும். இப்போது உரத்தில் தாவரங்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தேவையான நிறைந்த போஷாக்கும் தாவரங்களின் வளர்ச்சிக்குத் தேவையான நுண் அங்கிகளும் இருக்கும்.

**தமிழாக்கம்: சுசீலா சாரங்கபாணி**

**2:7 நல்ல உரமாக்கலுக்கு காற்றுத் தேவைப்படும்?**

உரமாக்கலைச் செய்கின்ற நுண் அங்கிகளானவை காற்று மண்டலத்திலிருந்து ஒட்சிசனைப் பயன்படுத்திக் கொண்டு உயிர்வாழும் நுண் அங்கிகளாகும். இதனால் இவை காற்றை விரும்புகின்றன. நாங்கள் காற்றில் ஒட்சிசனைச் சுவாசிப்பது போல்வே தாமும் சுவாசிக்கின்றன. காற்று இல்லாவிடில் அவை இறந்துவிடும். காற்றைச் சுவாசிக்கும் நுண் அங்கிகளால் உண்டாக்கப்படுபவை காபன்டைஒக்சைட் நீர் ஆவியாதல், அதிகவெப்பம், உரம் என்பனவாகும். எனவே எங்களது தோட்டத்தில் உரமாகும் செயன்முறையானது மகிழ்ச்சியளிக்கும் ஒன்றாகும்.



ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் குப்பைக் கிடங்கில் காற்று வித்தியாசம் குறைந்தோ அற்றோ போய்விடும். காற்று மண்டலத்தில் ஒட்சிசனில் உயிர்வாழும் நுண்அங்கிகள் இறந்துவிடுகின்றன. ஆயின் கழிவு தொடர்ந்து உரமாக்கப்பட்டுக்கொண்டேயிருக்கும். இது மலக்குழியில் குறைந்த காற்றில் உரமாக்கப்படும் செயன்முறையை ஒத்திருக்கும்.

உங்களுக்குத் தெரியும் மலக்குழியினுள்ளும் ஒரு உயிருள்ள தாவரங்களிலும் (Biogas Plant) நடைபெறும் உரமாக்கலானது காற்று அற்ற நிலையிலேயே நடைபெறுகின்றது. இதனைச் செய்வது காற்றை வெறுக்கின்ற நுண் அங்கிக் கூட்டமே ஆகும். இதனால் காற்றில்லாத இடத்தில் இவை கூடுதலாக விருத்தியடையும்.

(வளரும்)

கலாநிதி சாந்தினி
கலாநிதி கே.எஸ்.வல்கம

TOSHIBA
Leading Innovation

e-STUDIO

## உலகின் தலைசிறந்த நிழற்படப் பிரதியெடுக்கும் இயந்திரம் யாழ்ப்பாணத்தில் ஆதிக்கத்தைப் பரப்புகிறது

டொஷீபா e-Studio என்பது உலகின் அதி முன்னேற்றகரமான, சூழலுக்குத் தீங்கிழைக்காத நிழற்பட பிரதியெடுக்கும் இயந்திரமாகும். சிறிய வியாபார நிலையங்கள் முதல் மாபெரும் நிறுவனங்கள் வரை எந்தவொரு தொழில் முயற்சியையும் இலாபகரமாக நடத்துவதற்கு அது அருந்துணையாகும். நீங்கள் e-Studio பிரதியெடுக்கும் இயந்திரமொன்றை வாங்கினால், ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷனின் நாடளாவிய பராமரிப்புச் சேவை, கவர்ச்சியான விசேட சலுகைகள் என்பவற்றையும் பெறுவீர்கள்.

- மிகக் குறைந்த விலை
- இலவச சேவைகள்/பயிற்சி
- இலவச விநியோகம்
- ஏனைய கொள்வனவுகளுக்கு விலைக்கழிவு
- நாடெங்குமுள்ள வர்த்தக முகவர்களிடம் வாங்கலாம்




- நிமிடத்திற்கு 16 பிரதிகள்/ அச்சுப் பிரதிகள்
- 100 தாள்கள் பைபாஸ் ட்ரே
- 250 தாள்கள் கசெட்
- A3 வரையான அளவு தாள்களைப் பயன்படுத்தலாம்
- நியம Windows GDI அச்சிடல் தொழில்நுட்பம்
- TWAIN ஸ்கேன் வசதி

இச் சலுகை மார்ச் 31 வரை மட்டுமே

JKOA
ஜோண் கீல்ஸ் ஒபிஸ் ஓட்டொமேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
320/1, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
உதவிச் சேவை: 2445760 தொலைபேசி: 2313000 [illegible] 2431745
மின்னஞ்சல்: helpdesk@jkoa.lk, இணையத்தளம்: www.jkoa.com

மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்: 0773-182838 (மில்ரோய்), 0777-725241 (அசோக்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பனங்கிழங்குகளின் பருவகாலம் தொடங்கிவிட்டது. முன்பெல்லாம் சந்தைக்குக் கொண்டுவரப்பட்டு விலைப்படாமல், அடிமாட்டு விலைக்கு விற்கப்பட்டுவந்த பனங்கிழங்குக்கு தென்னிலங்கைப் பயணிகளின் வருகை மவுசினை உண்டுபண்ணிவிட்டது. வழக்கமாக பனங்கிழங்கென்றால் நமக்கே வாயூறும். அப்படியிருக்கையில் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப்பார்க்க வருகின்றவர்கள் மட்டும் இதனை வாங்காமல் இருப்பார்களா? ஆளுக்கு 10, 20 பனங்கிழங்குகள் என்று அடிபட்டு வாங்கிக்கொண்டு செல்கிறார்கள். இதனால் பனங்கிழங்கின் விலையும் அதிகரித்துவிட்டது. ஆனால் உள்ளூர்ப் பனங்கிழங்குப் பிரியர்கள் அதிகரித்தவிலையில் கிடைக்கும் பனங்கிழங்கினை ஆசைதீர உண்ண முடியவில்லை. யாழ்.நகரில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் அடுக்கடுக்காகப் பனங்கிழங்குகளைக் குவித்துவிட்டு, குவியப்போகும் தென்னிலங்கைப் பயணிகளுக்காகக் காத்திருக்கிறார் இந்த வியாபாரி. (படமும், தகவலும்: நந்தன்)

குடாநாட்டில் இயல்பு வாழ்க்கை ஏற்படத் தொடங்கிய பின்னர் புதிய கலாசாரங்களும், பழக்கவழக்கங்களும், பொழுதுபோக்கு அம்சங்களும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பெருகத் தொடங்கிவிட்டன. இத்தனை நாளும் தரைப்பாதைத் தொடர்பின்றி ஒரு துண்டிக்கப்பட்ட பூமியாக யாழ்ப்பாணம் விளங்கியமையால் வேற்றிடங்களில் இருந்து இங்கு வியாபார நோக்கத்துக்காக வருவோரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தே காணப்பட்டது. ஆயினும் இப்போதுதான் பாதை திறந்தாயிற்றே. சோதனைகளும் இல்லாதிருப்பதால் வெவ்வேறு வகையான வர்த்தக நோக்கங்களைக் கொண்டவர்கள் நமது பிரதேசத்தை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கிவிட்டனர். இவர்களுள் பாம்பாட்டிகளும், குரங்காட்டிகளும் புதிதாக குடாநாட்டு மக்களுக்கு அறிமுகமாகியிருக்கிறார்கள். மக்கள் கூடும் இடங்களைக் குறிவைத்துத் தம்முடைய பயிற்றப்பட்ட குரங்கினைக் கொண்டு வேடிக்கைகாட்டும் குரங்காட்டி ஒருவரைப் படத்தில் காணலாம்.

(படம்:கரன்)



எமது தாய்நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான பயணத்தில் இணைந்து உறுதுணையளித்திட அனைத்து தேசபக்தி மிக்க இலங்கையர்களுக்குமான தருணம் இதோ!

LOLC
அபிவிருத்திப் பாதையின் முன்னோடி



உங்கள் வெளிநாட்டு பணத்தினை இலங்கையில் முதலீடு செய்யும் பெறுமதிமிக்க தருணத்தில் இணைந்த பெருமையினை நீங்களும் பெற்றிடுங்கள். நீங்கள் உழைத்த பணத்தை தாய்நாட்டில் முதலீடு செய்திடுங்கள். LOLC குழுவினை சேர்ந்த லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட் உங்களின் முதலீடுகளுக்கு சிறந்த. பாதுகாப்பினையும் வட்டியினையும் வழங்கிடும். LOLC பலமிக்க சர்வதேச நிதி ஸ்தாபனத்தினை பின்பலமாககொண்டது. LOLC ஆனது உலகின் மிகப்பெரிய லீசிங் நிறுவனம் மற்றும் ஜப்பானின் இரண்டாவது மிகப் பெரிய நிதி தீர்வுகளுக்கான நிறுவனமாக ஓரிக்ஸ் கூட்டுத்தாபனம் - ஜப்பானின் கீழ் 26 நாடுகளில் செயல்படும் உலகளாவிய ஓரிக்ஸ் வலையமைப்பின் அங்கத்தவர்.

லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட் fitch rating இல் A- தரச்சிறப்பை பெற்றுள்ளது.

- உங்களின் பணத்தை ஒருமாதத்தின் பின் வேண்டிய நேரம் மீளப்பெறலாம். பகுதியாகவும் மீளப்பெறலாம்.
- குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் பெறும் மீளப்பெறல்களுக்கு வட்டியில் கழிவு இல்லை
- வைப்புக்களின் பெறுமதி அதிகரிக்க புதிய வைப்புக்கள் மூலம் எந்த நேரமும் அதிகரிக்கலாம்
- வட்டி மாதாந்தம் வழங்கப்படும்.

உங்கள் தேசத்தின் அபிவிருத்திக்கு உதவும் அதேவேளை, உங்கள் பணத்தை பாதுகாப்பான மற்றும் அதிக வட்டியை தரும் இடத்தில் முதலீடு செய்யுங்கள்

அழையுங்கள் 0773 815602

Email : lofin@lankaorix.com

லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட்

LOLC வர்ததக குழுமத்தின் நிறுவனம்

100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய.

தொலைபேசி: 5880880, ஈமெயில் lofin@lankaorix.com, வெப்: www.lankaorix.com

லங்கா ஓரிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட் ... ஆம் திகதி சட்டமுறைகளின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட பொது ...பிட்ஸ் ரேடிங்ஸ் நிறுவனத்தினால் A- (lka) தரச்சிறப்பை பெற்றுள்ளது. 1988 ஆண்டு 78 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் சட்டப்பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

BRANDS ALLEY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிட்டை எழுதுநர் தேவை

தட்டாதெருச் சந்திக்கு அண்மித்த விற்பனை நிலையத்திற்கு சிட்டை எழுதுநர் (Bill Clerk) பெண் தேவை.
விருப்பம் உள்ளோர் கீழ்வரும் முகவரிக்கு நேரில் வரவும்.

**சிவலிங்கம்**
பலாலி வீதி (நல்லூர் AGA Office முன்பாக),
திருநெல்வேலி.


## முதலாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி
**இரத்தினசிங்கம் இரத்தினாம்பாள்**

மலர்வு 05 ★ 01 ★ 1933
உதிர்வு 28 ★ 02 ★ 2009

திதி: 18.02.2010

ஓர் ஆண்டு சென்றாலும்
அம்மா உங்கள் பிரிவை மறக்கமுடியாது
தினமும் மனக்கண் முன் நின்று
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள்.

'அன்பு இல்லம்',
ஓடை ஒழுங்கை, சவளாய்,
புலோலி வடக்கு, பருத்தித்துறை. (C/564919)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கந்தையா நல்லதம்பி**
(உரிமையாளர், லிபேட்டி சினிமா)
(17.02.2010)



மலர்வு 12★07★1928
உதிர்வு 20★02★2007

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய் எங்களை
வழிநடத்திய தெய்வமே!
ஆண்டு மூன்று முடிந்ததையா
உங்கள் நினைவுகள் நீங்காதையா
எங்கள் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து ஆண்டவன் அடியில்
உங்கள் ஆத்மா சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

லிபேட்டி,
அச்சுவேலி. (94900)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 ★ 03 ★ 1933
உதிர்வு 12 ★ 02 ★ 2009



**அமரர் கந்தையா பரமசாமி**
(Retd. Chief Clerk, Upper Balangoda Tea Estates)

அறிவின் ஒளியாய் அன்பின் திருவுருவமாய்
பண்பின் இலக்கணமாய் பாசத்தின் உறைவிடமாய்
உழைப்பின் சிகரமாய்-வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வமே அலைபோன்ற
உங்கள் அன்பில், வாழ வழி கற்றுத்தந்த நீங்கள்
அமைதியாய் விண்ணுலகம் சென்று விட்டீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நாம் யாவரும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!.....

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

107, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே: 0777809716 (94794)

## இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி

யாழ்ப்பாணம், பெப்.17

அகில இலங்கை திருமுறை மன்றம் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் பிற்பகல் 3 மணி முதல் 4.30 மணிவரை இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பை நடத்தி வருகின்றது.

வகுப்புகள் யாவும் வட இலங்கை சங்கீத சபையினதும் அகில இலங்கை திருமுறை மன்றத்தினதும் பாடவிதானத்திற்கமைய நடைபெறுகின்றன.

தேவார இசைமணி துறைசை ஆதீனத் திருமுறைத் தோன்றல் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் பயிற்சியை அளிக்கின்றார்.

வகுப்புகளில் ஆண், பெண் இருபாலாரும் பங்கு பற்றிப் பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

## நவாலி சென்.பீற்றேஸில் சின்னம் சூட்டும் விழா

நவாலி, பெப்.17

நவாலி சென். பீற்றேஸ் றோ.க.த.க.பாடசாலையின் சின்னஞ் சூட்டும் விழா கடந்த 15 ஆம் திகதி அதிபர் யோ.எட்வேட் பங்கிராஜ் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு காங்கேசன்துறை சாரண மாவட்டத்தின் உதவி மாவட்ட ஆணையாளர் செ.சிவகுமாரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சின்னம் சூட்டி வைத்தார். (ரி-100)

## நினைவஞ்சலி

நான்காம் ஆண்டு — ஒன்பதாம் ஆண்டு



அன்னை மடியில் 13 ★ 08 ★ 1945
ஆண்டவன் அடியில் 28 ★ 02 ★ 2006
திருமதி சிவகுருநாதன்-இலட்சுமி
திதி: 14.02.2010



அன்னை மடியில் 21 ★ 03 ★ 1978
ஆண்டவன் அடியில் 17 ★ 02 ★ 2001
செல்வன் சிவகுருநாதன்-சிவரூபன்
திதி: 10.03.2010

நீங்களோரிடம் நாங்களோரிடம்
உறவிற்கு தனிவழி நினைவுகள் மட்டுமே

ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்:

கணவர், பிள்ளைகள் — இராஜவீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. — அப்பா, அக்கா, அண்ணா, தங்கை

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**செல்வராசா மேஸ்வரன் (தீபன்)**

பிறப்பு: 13.09.1985
இறப்பு: 04.01.2010

வாழ்வு நிலையில்லை மகனே!
வாழ்ந்த உன் நினைவுகளுக்கு அழிவில்லை
காந்தம்போல் சகலரையும் ஈர்த்தாய்
நீங்கள் வருவீர்கள் என விழிகளில் நீரோடு
காத்திருக்கின்றோம் மகனே..........


இன்று (17.02.2010) புதன்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறும்
ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
தொடர்ந்து இடம்பெறும்
மதியபோசனத்திலும் குடும்பசகிதம்
வருகைதந்து கலந்துகொள்ளுமாறு
உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

தவசிகுளம்,
மிருசுவில். (94885)

குடும்பத்தினர்.

## 17.02.2010 அகவை தொண்ணூறில்

அருள்பெற்று ஆசிதர வேண்டுகின்றோம்



**திருவாளர் வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்**
(முன்னாள் ஆசிரியர்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்)

தந்தையாய்த் தலைவனாய்ச் சமூக,
சமயத் தொண்டனாய் எந்தையாய்
அவையத்து முந்தியிருப்பச் செய்த எம்
அப்பு அம்பலத்தாடுவானை
அருள்பெற்று ஆசிகள் தந்து ஆண்டுகள்
நூறு வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
(லெவனா, ஹரேஸ்),
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்.

'எபநேசர்',
செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்.

(94883)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டைனோசர்கள் வாழ்ந்தமைக்கான அடையாளம் என்ன?

டைனோசர்கள் (Dinosaurs) முதன் முதலில் சுமார் 180 மில்லியன் ஆண்டு களுக்கு முன்னர் பூமியில் தோன்றியதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். அதே போல் சமார் 60 மில்லியன் ஆண்டுக ளுக்கு முன் அழிந்து போய்விட்டன. இது மனிதன் மற்றும் மிருகங்கள்- நாய், முயல், குதிரை, குரங்கு, யானைகள் போன்றவை பூமியில் தோன்றுவதற்கு முன்னர்.சரி இவ்வாறான பெரிய மிருகங்கள் பூமியில் வாழ்ந்திருந்தன என் பதை நாம் எவ்வாறு அறிகின்றோம்.

டைனோசர்கள பற்றி நாம் அறிபவை எல்லாம், இனிமேல் அறியக்கூடியவை எல்லாம் கூட அம்மிருகங்களின் புராதன படிமங்களிலிருந்தே கிடைக்கின்றன. பூமியில் அவை விட்டுச் சென்றுள்ள படிமங்களே இவை. இன்று படிமங்கள் பல்வேறுபட்டவையாகக் காணப்படுவதுண்டு. மிகப் பொதுவான படிமங்கள் என்னவென்றால் அம்மிருகங் களின் எலும்புகள், பற்கள், தாடை எலும்புகள் போன்ற கடினமான பாகங்கள் கற்களாக மாறிவிட்ட நிலையில் கிடைப்பவையாம். இவைகளை ஆராய்ந்து அவைகளை வைத்துக் கொண்டு விஞ்ஞானிகள் அம்மிருகங்களின் மாதிரிகளை வடிவமைக்கிறார்கள். சில சமயங்களில் கல்லாக மாறிவிட்ட தசைநார்கள், தோல்கள் போன்றவையும் கிடைகின்றன. சிலசமயங்களில் கால் பதிவுகள், சுவடுகள், நடந்துசென்ற தடயங்கள் சேற்றுப் பாங்கான பகுதிகளில் பதிவுற்று பின்னர் காலப்போக்கில் இறுக்கமாகி கல்லாகிப்போன படிமங்களும் கிடைப்பதுண்டு. இவைகள் இன்னும் சிறப்பான தகவல்களைத் தருபவவையாக அமைகின்றன. இவைகளை வைத்துக்கொண்டு அவை இரண்டு காலுடையவைகளாக இருந்தனவா அல்லது நான்கு காலுடையவைகளாக இருந்தனவா என்பதை அறுயிட்டு கூறமுடியும்.

இவைகளில் கிடைத்துள்ள மிக முக்கிய படிமம் என்றவென்றால் டைனோர் முட்டையாகும்.

இந்தக் கண்டுபிடிப்புக்களிலிருந்து புரொன்ரொசாரஸ் (BRONTOSAURUS) என்ற டைனோசர் 20-25 மீற்றர் நீளம் கொண்டதாகவும் சுமார் 38 தொன் எடை கொண்டதாகவும் இருந்துள்ளது என்பதை அறிய முடிகின்றது. அது சதுப்பு நிலங்களில் வாழ்ந்துள்ளது என்பதும் தாவர உண்ணியாக இருந்துள்ளது என்பதும் எமக்குத் தெரியவந்துள்ளது. அதேபோல் அல்லோ சாரஸ் (ALLOSA RAUS) என்ற டைனோசர் கூர்மையான பற்களையும் பலம் வாய்ந்த நகங்களை யும் கொண்டதாக இருந்துள்ளது. இந்த டைனோசர் பொன்ரோசாரஸ் மிருகங்களையும் அதுபோன்று தாவர உண்ணிகளையும் இரையாகக் கொண்டு வாழ்ந்துள்ளது. பொன்ரொசாரஸ் டைனோசர்களின் எச்சங்களான எலும்பு படிமங்களில் அல்லோசாரஸ் பற்களின் படிமங்களையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருப்பதிலிருந்து இந்த உண்மை தெரியவந்துள்ளது.

-ரம்யன்





உலகத்தின் தேசிய வங்கியின் அங்குரார்ப்பணத்துடன் யாழ்ப்பாணம், சர்வதேசத்துடன் இரண்டறக் கலக்கின்றது. உலகெங்கிலுமுள்ள 86 இற்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் பிரதேசங்களிலுள்ள 8,500 இற்கும் மேற்பட்ட HSBC கிளை அலுவலகங்களையுடைய வலையமைப்பில் யாழ்ப்பாணத்தையும் இணைத்துக் கொள்வதன் ஊடாக உங்களுக்கு சர்வதேச அங்கீகாரத்தினையும் உலகளாவிய ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ளும் வசதியையும் நாம் வழங்குகின்றோம்.

தனிநபர் மற்றும் நிறுவன வாடிக்கையாளர்களுக்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பல்வகை நிதித்தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் ஊடாக யாழ்ப்பாணத்தின் அபிவிருத்தியில் பங்குதாரர்களாக இருப்பதனையிட்டு நாம் பெருமையடைகின்றோம்.

HSBC
உலகத்தின் தேசிய வங்கி

அழைக்கவும் 011 4 4722 77 அழுத்தவும் www.hsbc.lk


ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோர்பரேஷன் லிமிட்டெட்டின் வெளியீடு. பிட்ச் தரப்படுத்தலில் AAA (lka) சான்றிதழைப் பெற்றுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்தேர்வு வினாக்கள்: தொடர்ச்சி......

தொகையில் ஆட்சியான எதிருருவையும், பின்னிடைவான எதிருருவையும் ஒருங்கே உடையவர்களின் மீடிறன்,
1) 0.21% 2) 0.09% 3) 0.49% 4) 0.42% 5) 0.3%

* 33-35 வரையான வினாக்கள் பின்வரும் வரைபுகளை அடிப்படையாகக் கொண்டவை.





33. X அச்சை காலமாகவும், Y அச்சை மனிதக் குடித்தொகையாகவும் கருதினால் உலக மனிதக் குடித்தொகைப் பருமன் காலத்துடன் மாறுவதைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வரைபு எது?
1) 1 2) 2 3) 3 4) 4 5) 5

34. X அச்சை சாரீரப்பதன் எனவும், Y அச்சை ஆவியுயிர்ப்பு வீதம் எனவும் கருதினால் வளிமண்டலத்தின் சாரீரப்பதனுக்கும் தாவரத்தின் ஆவியுயிர்ப்பு வீதத்திற்கும் இடையிலான தொடர்பை பிரதிநிதித்துவப்படுத்தும் வரைபு எது?
1) 1 2) 2 3) 3 4) 4 5) 5

35. உயிர்ப்பல்வகைமை பேணப்படவேண்டியதன் மிக அவசியம்,
1) அதன் இழப்பினை மீண்டும் உருவாக்கிவிட முடியாது.
2) பூமித்தொகுதி அழிவடையாமல் இருப்பதற்கு.
3) மனிதனுக்கு உபயோகமான பரம்பரை அலகுகளின் தோற்றுவாய்.
4) சூழல் தொகுகளில் உறுதிப்பாட்டிற்கு அவசியமானது.
5) பதார்த்தங்கள் பாய்ச்சல் அடைவதற்கு அவசியம்.

36. உயிரியல் உருப்பெருக்கம் தொடர்பான கூற்றுக்களில் தவறானது,
1) சேதனக் குளோரின் பீடைநாசினிகள் உயிரியல் உருப்பெருக்கமடைகின்றன.
2) இது உணவுச்சங்கிலி வழியாக மாசுக்கள் செறிவடைந்து செல்வதைக் குறிப்பிடுகின்றது.
3) இலையுண்ணிகள் இதனால் அதிக பாதிப்பை அடைகின்றன.
4) கடல் பறவைகள் சிலவற்றின் அழிவு இதன் விளைவாக ஏற்பட்டுள்ளது.
5) உயர் போசணை மட்ட அங்கிகளில் இதன் செறிவு உயர்வானது.

37.




சூழல்தொகுதி ஒன்றின் உணவுவலை படத்தில் தரப்பட்டுள்ளது. இது தொடர்பான கூற்றுக்களில் தவறானது எது?
1) இங்கு அம்புக்குறிகள் சக்தியின் பாய்ச்சலைக் குறிக்கின்றது.
2) P உறபத்தியாக்கி -ஆகும்.
3) P அழுகல்வளரியாக இருக்கலாம்.
4) S எப்போதும் ஓர் இரண்டாம் போசணைமட்ட அங்கி.
5) நாட்பட்ட சக்தியின் மிகக்குறைந்த சதவீதம் W இல் காணப்படுகிறது.

38. அமில மழை தொடர்பான கூற்றுக்களில் தவறானது,
1) இது எல்லைகள் கடந்து செயற்படும் மாசாக்கலாகும்.
2) நீர்நிலைகளில் அலுமீனிய நச்சாக்கத்தை ஏற்படுத்துகின்றது.
3) Amphibia களின் முட்டைகளைப் பாதிக்கின்றது.
4) நீர்வாழ் புறவன்கூட்டு விலங்குகள் இதனால் பாதிப்படைகின்றது.
5) தரை உவர்தன்மை அடைகின்றது.

39. Cayano Bacteria தொடர்பான கூற்றுக்களில் தவறானது எது?
1) இலைக்கன்களில் காணப்படுகின்றன.
2) சிலவற்றின் $N_2$ இனை தமது அனுசேபத்தில் பயன்படுத்தும் திறன் காணப்படுகிறது.
3) இருகூற்றுப் பிளவு மூலம் பெருக்கமடைதல்.
4) சவுக்குமுளைகள் இருத்தல்.
5) பைக்கோபிலின்கள் காணப்படுதல்.

40. இரசாயனப் பிறபோசணையைக் காட்டும் அங்கி,
1) Mucar. 2) Microcystis.
3) Nitrosomonas. 4) Zooxanthella. 5) Anabeena.

41. இலக்ரோஸ் வளர்ப்பு ஊடகத்துடன் சேர்க்கப்பட்ட நீர்த்துளிகள் அடைகாக்க விடப்பட்டபோது வாயு விளைவுகள் தோன்றின. இதிலிருந்து எடுக்கக்கூடிய முடிவு,
1) நீரில் மலம் சார்ந்த மாசுக்கள் உண்டு.
2) நீரில் கோலிபோம் பக்றீரியாக்கள் உண்டு.
3) நீரில் பார உலோக மாசுக்கள் உண்டு.
4) நீரில் இலக்ரோஸ் நொதித்தலைச் செய்யும் பக்றீரியாக்கள் உண்டு.
5) நீரில் நோயாக்கி பக்றீரியாக்கள் காணப்படுகின்றன.

42. மலேரியா தொற்று ஏற்பட்ட ஒருவரின் குருதிப்பூச்சினை அவதானிப்பதன் மூலம் எவ்வாறான பருவநிலையைக் காணமுடிவதில்லை?
1) வித்துச் சிற்றுயிர்கள். 2) முத்திரை மோதிர நிலை.
3) அமீபாப்போலி நிலை. 4) புணரிகள்.
5) புணரிக்குழியங்கள்.

43. *Wuchchereria bancrofti* தொடர்பான கூற்றுக்களில் தவறானது,
1) இதன் நிறையுடலிப் பருவம் மனிதனில் பாதிப்பைத் தருகின்றது.
2) இதன் காவி தூயநீரில் முட்டையிடும் பழக்கம் உடையது.
3) மைக்கிரோபைலேரியா மனிதனில் தொற்றும் பருவமாகும்.
4) நள்ளிரவுக் குருதி மாதிரிப் பரிசோதனை தொற்று இருப்பதை அறிவதில் உதவுகின்றது.
5) இதன் இலிங்கமுறை இனப்பெருக்கம் மனிதனின் நிணநீர்க் குழாய்களில் இடம் பெறுகின்றது.

44. மீன்களின் பல்லினப் பண்ணை முறை தொடர்பான கூற்றுக்களில் தவறானது எது?
1) அலகுப்பரப்பில் இருந்து மிகக்கூடிய உற்பத்தி தரக்கூடியது.
2) உணவிற்கான போட்டி அதிகமானது.
3) நீரின் வளங்களின் மிகக்கூடிய உபயோகம் இங்கு காணப்படும்.
4) ஓரின மீன்வளர்ப்பை விட இலாபம் கூடியது.
5) ஊன் உண்ணிகளை இதில் வளர்க்க முடியாது.

45. பின்வரும் நெற்பீடைகளில் எதன் விருத்திப்பருவநிலை மண்ணில் காணப்படுகிறது?
1) நெல் மூட்டுப்பூச்சி. 2) கபிலத் தாவரத்தத்தி.
3) சேனைப்புழு. 4) நெற்தண்டுகோதி. 5) உறைதாங்கி.

46. இலங்கையில் நீர்வளர்ப்பு,
1) சுயவேலைவாய்ப்பு நடவடிக்கை.
2) இலாபம் ஈட்டிக்கொள்ளும் நடவடிக்கை.
3) பொழுதுபோக்கு நடவடிக்கை.
4) நிறைவான அபிவிருத்தி செய்யப்பட்ட நடவடிக்கை.
5) இடையிடையே வெள்ளப்பெருக்கிற்கு உட்படுதல் வேண்டும்.

47. இலங்கையில் மீன் உற்பத்திக்கு நன்னீர் வழங்கும் நூற்றுவீதமாவது,
1) 1% 2) 10% 3) 20% 4) 40% 5) 60%

48. பின்வரும் கூற்றுக்களில் பிழையானது,
1) விரிவான வளர்ப்பின் குறைநிரப்பி உணவூட்டல் காணப்படும்.
2) பகுதி விரிவான மீன்வளர்ப்பின் குறைநிரப்பி உணவூட்டல் வழங்கப்படும்.
3) செறிவான மீன்வளர்ப்பில் வைப்புச்செய்யும் மீன்களின் அடர்த்தி மிக உயர்வானது.
4) செறிவான மீன்வளர்ப்பில் குறைநிரப்பி உணவூட்டல் வழங்கப்படும்.
5) பகுதி விரிவான வளர்ப்பு முறையில் பெறப்படும் விளைவு விரிவான முறையிலும் உயர்வானது.

49. பின்வரும் சிறப்பியல்புகளில் எது *Oreochromis mossambicus* ஐ நன்னீர் வளர்ப்புக்கு மிகவும் உகந்த மீனினங்களில் ஒன்றாகத் திகழச்செய்கிறது?
1) உயர் இனப்பெருக்க வீதம்.
2) பரந்த உவர்தன்மையைச் சகித்தல்.
3) உயர் வளர்ச்சி வீதம். 4) குஞ்சுகளைப் பாதுகாத்தல்.
5) குறைந்த எண்ணிக்கையான முட்டைகளை இடுதல்.

50. செவ்வன் பரவலைக் காட்டும் பாரம்பரிய இயல்புகள் தொடர்பான கூற்றுக்களில் தவறானது எது?
1) பரம்பரை அலகு பாரம்பரிய பண்புகள் செவ்வன் பரம்பம்பலைக் காட்டுகின்றன.
2) இதன் நடுவன் பெறுமானத்தில் குடித்தொகையின் மிகக்கூடிய மீடிறன் காணப்படும்.
3) நடுவன் பெறுமானத்தின் இருமடங்கு வீச்சத்தில் குடித்தொகையில் 95% காணப்படும்.
4) நியம விலகலின் இருமடங்கு வீச்சத்திலும் இடையிலிருந்து கூடிய நிலையில் குடித்தொகையினரின் 5% காணப்படும்.
5) இடையின் பெறுமானத்தின் இரு பக்கமும் வளையி சமச்சீரானதாக இருக்கும்.

* 51-60 வரையான வினாக்கள் பின்வரும் பொழிப்பாக்கப்பட்ட பணிப்புரைகளை அடிப்படையாகக் கொண்டவை.

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| ABD சரியானவை | ACD சரியானவை | AB சரியானவை | CD சரியானவை | விடை/ விடைகளின் சேர்க்கை |

51. பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது? / சரியானவை எவை?
A - கடலில் விடப்படும் பார உலோக மாசுக்கள் சிறிதளவு செறிவானாலும் மனிதனைப் பாதிக்கக்கூடியது.
B - மீள்சுழற்சியால் சில புதுப்பிக்கமுடியாத வளங்களை மீளப் பெற்றுக் கொள்ளலாம்.
C - உணவுச்சங்கிலிகள் எல்லாம் உற்பத்தியாளரை அடி இணைப்பாக உடையவை.
D - உயிரியல் உருப்பெருக்கத்தின் அளவு இணைப்புகளுடன் அதிகரிக்கின்றது.
E - நீரில் உள்ள சேதனச் சேர்வைகளின் பிரிகையாக்கம் காற்றின்றிய சூழலில் நிகழ்வதில்லை.

52. பிறப்புரிமைப் புறோப்புக்கள் (Probes),
A - DNA இன் தனிப்பட்டிகைகள்.
B - மீளச்சேர்க்கை DNA இன் ஆக்கத்தில் ஈடுபடுபவை.
C - தெரிந்த நியூக்கிளியோதைட் தொடர் உடையவை.
D - கதிர்த்தொழிற்பாட்டு P இனால் அடையாளம் இடப்படுபவை.
E - புரதத்தொகுப்பில் பயன்படுத்தப்படுகின்றன.

53. பின்வருவனவற்றில் எது/எவை மனிதனின் குருதி அமுக்கத்தைச் சீராக்குவதுடன் தொடர்புடையது?/தொடர்புடையவை?
A - Renin. B - Aldosterone.
C - தைரொட்சின். D - ADH
E - கோட்டிசொல்.

54. Cycas இலும் Anthophyta களிலும் காணக்கூடிய இயல்பு எது?/ இயல்புகள் எவை?
A - மகரந்தச்சேர்க்கை. B - பல்லின வித்திகள்.
C - அசைகின்ற இனப்பெருக்கக் கலம்.
D - உணவுச் சேமிப்புடைய சூல்வித்து. E - நெய்யரிக்குழாய்கள்.

55. பின்வரும் பீடைகளில் எதில்/எவற்றில் குடம்பிப் பருவநிலை மட்டுமே பயிரில் சேதத்தைத் தருகின்றது?
A - தென்னையின் சிவப்பு நீள்மூஞ்சி வண்டு.
B - தென்னங்கருவண்டு.
C - நெல்தண்டுகோதி. D - நெல்உறைதாங்கி.
E - தென்னை இலைச்சுரங்கம் தோண்டி.

56. Agaricus இன் வாழ்க்கை வட்டம் பற்றிய கூற்றுக்களில் சரியானது/சரியானவை,
A - முதலுருக பூஞ்சண இழைகளின் சேர்க்கையின்போது முதலுருப் புணர்ச்சி இடம்பெறுகின்றது.
B - ஆட்சியான இருகருக்கூட்டு நிலையிருத்தல்.
C - வித்திகள் அகத்தே பிறந்தவை.
D - துணையான பூஞ்சண இழைபிடித்தொடுப்பு உடையது.
E - சிற்றடித் தாய்க்கலம் இருமடியத்திற்குரியது.

57. சைற்றோகைனினின் உடற்றொழிலியல் விளைவு/விளைவுகள் அல்லாதது எது?/ எவை?
A - இலைகள் வயதடைதலை நிரோதித்தல்.
B - பச்சைய உருமணிகளின் விருத்தியைத் தூண்டுதல்.
C - பழங்களின் விருத்தியைத் தூண்டுதல்.
D - கக்க அரும்பின் வளர்ச்சியை நிரோதித்தல்.
E - முளைய வளர்ச்சியைத் தூண்டுதல்.

58. மானிடச் சிறுநீரகம் தொடர்பான கூற்றுக்களில் சரியானது எது?/சரியானவை எவை?
A - இது ஒருசீர்திடநிலையைப் பேணுவதில் பங்குவகிக்கின்றது.
B - ADH இனால் இதன் தொழிற்பாடு சீர்ப்படுத்தப்படுகின்றது.
C - இது யூரியாவின் தொகுப்பு நிகழும் இடம்.
D - இது குருதியில் pH சீராக்கத்தில் ஈடுபடுகின்றது.
E - பித்த உப்புக்கள் இதன் வழியாக கழிக்கப்படுகின்றன.

59. பின்வருவனவற்றில் எது/எவை சரியான தொடர்பு?/தொடர்புகள்?
A - குறைமடியம் - டௌனின் சகசம்.
B - பல் எதிருருக்கள் - குருதி வகைகள்.
C - மேலாட்சி - Drosophila வில் கண்களின் நிறம்.
D - நிறைவில் ஆட்சி - Pisam இல் பூவின் நிறம்.
E - பரம்பரையலகு - குருதியுறையா நோய்விகாரம்.

60. இயற்கைச் சூழலின் தரம் குன்றுதலுடன் தொடர்புடைய நடவடிக்கை எது?/ நடவடிக்கைகள் எவை?
A - அசேதன வளமாக்கிகளின் பயன்பாடு.
B - ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவ நடவடிக்கைகள்.
C - இயற்கை வளங்களின் மிகையான பயன்பாடு.
D - கைத்தொழில் மயமாகும் நடவடிக்கைகள்.
E - மீள்சுழற்சி நடவடிக்கைகள்.

அடுத்த வாரம் அமைப்புக் கட்டுரை, கட்டுரை வினாக்கள் வெளிவரும்.

2010 உயர்தர மாணவர்களுக்காக பல மாவட்ட ஆசிரியர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படை முகாம் மீது நக்ஸல்கள் அதிரடி; மேற்குவங்கத்தில் 24 சிப்பாய்கள் பலி!

கொல்கத்தா, பெப். 17

மேற்கு வங்கத்தில் துணை இராணுவப் படையினரின் முகாம் மீது நக்ஸல்கள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 24 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்துக்கு பொறுப்பேற்றுள்ள மாவோயிஸ்ட்களின் தலைவர் கிஷன்ஜி, ''மாவோயிஸ்களுக்கு எதிராக மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் எடுத்துள்ள நடவடிக்கைக்குப் பதிலடிதான் இது'' என்று கூறியுள்ளார்.

இது குறித்த விவரம் வருமாறு -

மேற்கு வங்கத்தின் மேற்கு மிதுனபுரி மாவட்டம் சில்தா பகுதியில் துணை இராணுவப் படையினரின் முகாம் உள்ளது. இங்கு கிழக்கு எல்லை துப்பாக்கிப் படைப் பிரிவைச் சேர்ந்த 51 சிப்பாய்கள் தங்கியிருந்தனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை சுமார் 5.30 மணியளவில் ஜீப்கள் மற்றும் 25 மோட்டார் சைக்கிள்களில் பயங்கர ஆயுதங்களுடன் வந்த சுமார் 100 மாவோயிஸ்ட்கள் இந்த முகாமைச் சுற்றி வளைத்தனர்.

தொடர்ந்து சரமாரியாக வெடிகுண்டுகளை வீசியும், துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டும் தாக்குதல் நடத்தினர். பின்னர் முகாமுக்கு தீ வைத்தனர்.

முகாமில் இருந்த துணை இராணுவத்தினர் இந்தத் தாக்குதலை சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் சுதாகரித்துக் கொள்வதற்கு முன், சுமார் 24 படையினர் வெடி குண்டுகளுக்கும், துப்பாக்கிக் குண்டுகளுக்கும் பலியாகிவிட்டனர். இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

தாக்குதலுக்குப் பின்னர் அந்த முகாமுக்கு வரும் பாதை நெடுகிலும் மாவோயிஸ்டுகள் கண்ணி வெடிகளைப் புதைத்து வைத்துவிட்டு தப்பியோடிவிட்டனர்.

தாக்குதல் நடந்தபோது முகாமில் இருந்த இராணுவத்தினர் பலர் ஓய்வுவெடுத்துக் கொண்டிருந்தனர். மற்றவர்கள் சமையல் பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்த நேரத்தில் மாவோயிஸ்ட்கள் எதிர்பாராத விதத்தில் தாக்குதல் நடத்தியதால் உயிரிழப்பு அதிகமாகிவிட்டது என்று மேற்கு மிதுனபுரி மாவட்ட ஆட்சியர் என்.எஸ். நிகாம் கூறியுள்ளார்.

இதேவேளை, லால்கர் பகுதியில் உள்ள துணை இராணுவப் படையின் மற்றொரு முகாம் மீதும் இரவு 8.30 மணியளவில் மாவோயிஸ்டுகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சுமார் 40 மாவோயிஸ்டுகள் ஜீப் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வந்து குவிந்து முகாமைச் சுற்றி வளைத்து துப்பாக்கியால் சுடத் தொடங்கினர். இராணுவத்தினரும் தகுந்த பதிலடி கொடுத்தனர். இதனையடுத்து மாவோயிஸ்ட்கள் தப்பியோடி விட்டனர்.

இதில் யாராவது பலியாகினரா என்பது குறித்த விவரம் உடனடியாகத் தெரியவரவில்லை.

இந்த கொடூரத் தாக்குதலுக்கு மாவோயிஸ்டு தலைவர் கிஷன்ஜி பொறுப்பேற்றுள்ளார். மாவோயிஸ்ட்களுக்கு எதிராக மத்திய உள்துறை அமைச்சர் எடுத்துள்ள நடவடிக்கைக்கு தகுந்த பதிலடி கொடுத்துள்ளோம். எங்கள் இயக்கத்துக்கு எதிரான நடவடிக்கையை மத்திய அரசு நிறுத்திக் கொண்டால் நாங்கள் பேச்சு நடத்த முன் வருவோம். இல்லை என்றால் இதுபோன்ற தாக்குதல்கள் தொடரும் என்று கிஷன்ஜி கூறியுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு ரயில்வே அமைச்சர் மம்தா பானர்ஜி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். உளவுத் துறையும், மாநில அரசும் முற்றிலுமாக தோல்வியடைந்து விட்டன.

இது மாவோயிஸ்ட்கள் நடத்திய தாக்குதலா அல்லது மார்க்சிஸ்ட்கள் நடத்திய தாக்குதலா என்பது குறித்து மத்திய அரசு விசாரிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஈழத்தமிழருக்கு விரைவில் சமவுரிமை கிடைக்க இலங்கையை இந்தியா வலியுறுத்த வேண்டும்

## பாரதீய ஜனதாக் கட்சி தெரிவிப்பு



சென்னை, பெப். 17

இலங்கையில் தமிழர்களுக்கு விரைவில் சம உரிமை கிடைக்க இலங்கை அரசை மத்திய அரசு வற்புறுத்த வேண்டும். மத்திய அரசில் முக்கிய பங்கு வகிக்கும் தமிழக முதல்வர் கருணாநிதி தமிழர்களுக்கு சம உரிமை கிடைக்க காங்கிரஸ் கட்சியை வலியுறுத்த வேண்டும் - என்று பா.ஜ.கவின் மூத்த தலைவர் வெங்கையா நாயுடு கூறியுள்ளார்.

அத்துடன், தீவிரவாதத்தை முழுமையாக ஒடுக்கும் வரை பாகிஸ்தானுடன் மத்திய அரசு பேச்சு நடத்தக் கூடாது - என்றும் அவர் கூறினார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போதே அவர் இவற்றைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டம் மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் இன்று 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதிவரை 3 நாள்கள் நடக்கிறது. இதில், பா.ஜ.க.வின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிதின் கட்காரி முதல் முறையாகப் பேசுகிறார்.

இக்கூட்டத்தில் விலைவாசி உயர்வு, ஜம்முகாஷ்மீர் பிரச்சினை, அதிகரித்து வரும் தீவிரவாதத் தாக்குதல் சம்பவம், அண்மையில் புனேயில் நடைபெற்ற குண்டு வெடிப்பு மற்றும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்படும்.

விலைவாசி உயர்வு கடுமையாக அதிகரித்து வருகிறது. இதைக் கண்டித்து, டில்லியில் அகில இந்திய அளவில் மிகப்பெரிய போராட்டம் விரைவில் நடத்தப்படும்.

இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமை கிடைக்க வேண்டும். விரைவில் சம உரிமை கிடைக்க இலங்கை அரசை மத்திய அரசு வற்புறுத்த வேண்டும். மத்திய அரசில் முக்கிய பங்கு வகிக்கும் தமிழக முதல்வர் கருணாநிதி தமிழர்களுக்கு சம உரிமை கிடைக்க காங்கிரஸ் கட்சியை வலியுறுத்த வேண்டும்.

ஆந்திராவில் நடைபெற்று வரும் கலவரத்திற்கு மத்திய அரசே முழுக் காரணமாகும். ஆந்திராவை இரண்டாகப் பிரித்து தெலுங்கானா, ஆந்திரா என்று 2 மாநிலங்களை உருவாக்க வேண்டும் என்பதில் பா.ஜ.க. தனது ஆதரவைத் தெரிவிக்கிறது.

இப்பிரச்சினைக்கு தனித் தெலுங்கானா கொடுப்பதே நிரந்தரத் தீர்வு ஆகும். இந்தப் பிரச்சினைக்கு மத்திய அரசு விரைவில் தீர்வு காண வேண்டும் - என்றார்.

## இந்தியச் செய்திகள்

# தேனியில் வான் - லொறி மோதல்; ஒன்பது பெண்கள் பரிதாப மரணம்

தேனி, பெப். 17

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அருகே சரக்கு வானும், மினி லொறிம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மோதிக்கொண்டதில் 9 பெண்கள் உயிரிழந்தனர். இவர்கள் அனைவரும் துக்கம் விசாரிக்கச் சென்றவர்கள்.

தேவதானப்பட்டியைச் சேர்ந்தவர் ஈஸ்வரன் மகன் பிரபு (வயது - 23). வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதால், இவர் விஷம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டாராம். இவரது உடல் தேனி மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருந்தது. அங்கு துக்கம் விசாரிக்க உறவினர்கள் வந்திருந்தனர்.

அவர்களில் பெண்கள் மட்டும், இறந்தவரின் வீட்டில் இறுதிச் சடங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக பிற்பகல் ஒரு மணிக்கு சரக்கு ஏற்றிச் செல்லும் வானில் ஏறி தேவதானப்பட்டிக்கு புறப்பட்டனராம். சித்தார்பட்டியைச் சேர்ந்த சாரதி பிரபாகர் வானை ஓட்டினாராம்.

வைகைபுதூர் பகுதியில், முதலக்கம்பட்டியிலிருந்து கலவை மண் ஏற்றிக் கொண்டுவந்த மினி லொறி, இந்த வான் மீது மோதியதில் வான் கவிழ்ந்தது. அதில் பயணம் செய்த 9 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் படுகாயம் அடைந்த 16 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வான் சாரதி பிரபாகர், மினி லொறியின் சாரதி முத்தனம்பட்டியைச் சேர்ந்த செந்தில்குமார் ஆகியோர் வைகை அணை புறக்காவல் நிலையத்தில் சரணடைந்தனர்.

# தெலுங்கானா கோரி மாணவர்கள் போராட்டம் பொலிஸார் தடியடி; கண்ணீர்ப்புகை வீச்சு!

ஐதராபாத், பெப். 17

தெலுங்கானா மாநிலம் கேட்டு போராட்டம் நடத்திய உஸ்மானியா பல்கலைக் கழக மாணவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். கண்ணீர்புகைக் குண்டுகளை வீசினர்.

தெலுங்கானா மாநிலம் அமைப்பது குறித்து ஆய்வு செய்யும் ஸ்ரீகிருஷ்ணா கமிஷனின் பணி விவரங்கள், தங்களுக்குச் சாதகமாக இல்லை என்று தெலுங்கானாப் பகுதியினர் கருதுகிறார்கள். இதனால் அப் பகுதியில் போராட்டம் மீண்டும் தீவிரம் அடைந்துள்ளது.





தெலுங்கானா ஆதரவு போராட்டகள மாக மாறியுள்ள ஐதராபாத் உஸ்மானியா பல்கலைக்கழக வளாகத்தில், கடந்த ஞாயிறன்று இரவு மாணவர்கள் ஸ்ரீ கிருஷ்ணா குழுவுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஊர்வலம் செல்ல முயன்றனர். அதைத் தடுக்க அவர் கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். 6 மணி நேரம் நடைபெற்ற பொலிஸ் வேட் டையில் 40 பேர் காயம் அடைந்தனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக வளாகத்துக்கு வெளியே ஊர்வலம் செல்ல முயன்றனர். அவர்களை அதிரடிப்படையினர் உள்ளிட்ட பொலிஸார் தடுத்தனர்.

அப்போது வாக்குவாதம் ஏற்பட்டது. பொலிஸார் மீது மாணவர்கள் கல் வீசினர். இதனால், அவர்கள் மீது பொலிஸார் தடியடி நடத்தினர். கண்ணீர்புகைக் குண்டுகளை வீசினர். வானத்தை நோக்கி இறப்பர் தோட்டாக்களால் சுட்டனர். விடுதி அறைகளுக்குள்ளும் புகுந்து மாணவர்களை பொலிஸார் தடியடி நடத்தி விரட்டி யடித்தனர். பொலிஸாரின் தடியடியால், 4 பத்திரிகையாளர்கள் உட்பட 20 பேர் காயம் அடைந்தனர்.

இதையடுத்து, ஆந்திர உள்துறை அமைச்சர் இந்திரா சபீதா ரெட்டி வீடு முன்பு ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதுபற்றி விசாரணைக்கு உத்தரவிடுகிறார் என இந்திரா சபீதா ரெட்டி உறுதி அளித்தார். முதல்வர் ரோசய்யாவிடமும் பத்திரிகையாளர்கள் முறைப்பாட்டு மனு கொடுத்தனர்.

ஐதராபாத்தில் பல இடங்களில், தடையை மீறி ஊர்வலம் செல்ல முயன்ற 20 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். இந்தச் சூழ்நிலையில், பொலிஸாரின் நடவடிக்கையை எதிர்த்து, உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர் கள் சார்பில், ஆந்திர உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு, நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. உஸ்மானியா பல்கலைக்கழக வளாகத்தில் குவிக்கப்பட்டுள்ள கூடுதல் படைகளை வாபஸ் பெறுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, உஸ்மானியா பல்கலைக்கழக வளாகத்திலிருந்து, விரைவு அதிரடிப்படையினர் உட்பட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் நேற்றுமுன்தினம் மாலை வாபஸ் பெறப்பட்டனர்.

# கடைசி ஆசையாக கருணாநிதியை சந்தித்த பரிதாபத்திற்குரிய பெண்

சென்னை, பெப். 17

உடல் உறுப்புகள் செயலிழந்து இறக்கும் தறுவாயிலுள்ள பெண் ஒருவர் தனது இறுதி ஆசையாக முதல்வர் கருணாநிதியை நேற்றுமுன்தினம் சென்னை தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.

சென்னை வடபழனியைச் சேர்ந்தவர்



அனுராதா (வயது 45). தாய் - தந்தையை இழந்த இவரை 20 ஆவது வயதில் 'மஸ்குலர் டிஸ்ட்ரபி' என்ற நோய் தாக்கியது. இந்த நோயின் தாக்கத்தால் அவரது உடல் உறுப்புகள் ஒவ்வொன்றும் படிப்படியாக செயல் இழந்து வந்தன.

இந்த நோய்க்கு இன்னும் மருந்து கண்டு பிடிக்கப்படாததால், அனுராதாவிற்கு சிகிச்சை அளிக்க முடியவில்லை.

இந்த நிலையில், அனுராதாவின் இறுதி ஆசை ஒருமுறையாவது முதல்வர் கருணாநிதியை நேரில் சந்திக்க வேண்டும் என்பதாகும். தனது இறுதி ஆசையை நிறைவேற்றிக்கொள்ளும் வாய்ப்பு அனுராதாவிற்கும் நேற்றுமுன்தினம் கிட்டியது. முதல்வர் கருணாநிதியை சந்திப்பதற்காக சென்னை தலைமைச் செயலகத்திற்கு, அம்புலன்ஸ் வானில் வைத்தியர்கள் குழு கண்காணிப்பில் அனுராதா வந்தார்.

தலைமைச் செயலகத்திற்கு முதல்வர் கருணாநிதி வந்தவுடன் முதலாவதாக அனுராதாவை சந்தித்தார். அப்போது டாக்டர்களிடம் அனுராதாவை தாக்கியுள்ள நோய் குறித்து கேட்டறிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெல்ஜியத்தில் கோர ரயில் விபத்து; 20 பேர் பலி; 63 பேர்வரை காயம்!



பிரஸ்சல்ஸ், பெப். 17

பெல்ஜியத்தில் நேற்றுமுன்தினம் நடந்த கோர ரயில் விபத்தில் 20 பேர் பலியாகினர். 63 பேர்வரை காயமடைந்தனர்.

பெல்ஜியத்தின் தலைநகர் பிரஸ்சல்ஸ் அருகேயுள்ள ஹல்லே என்ற இடத்தில் 2 ரயில்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை உள்ளூர் நேரப்படி பகல் ஒரு மணிக்கு நேருக்கு நேராக மோதிக்கொண்டன. இதில் 20 பேர் பலியாயினர். 63 பேர்வரை காயமடைந்தனர்.

எதிரெதிர் திசையில் வந்த இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில், ரயில் பெட்டிகள் தண்டவாளத்திலிருந்து தூக்கியெறியப்பட்டு, மேலே சென்று மோதியதில் மின் கம்பிகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்த விபத்து காரணமாக பிரஸ்சல்ஸ் - பரீஸ் இடையே செல்லும் அதிவேக ரயில்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

சமிக்ஞை ஒன்றை கவனிக்காது ஒரு ரயில் கடந்து சென்றிருக்கலாம் என்று உள்ளூர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

### பிரிட்டன் வெளிநாட்டவருக்கு அறிவுரை

## எங்கும் முண்டியடிப்பதைத் தவிர்த்து வரிசையில் நிற்கப் பழக வேண்டும்

லண்டன், பெப். 17

பிரிட்டனில் நிரந்தரமாகக் குடியேற விரும்பும் வெளிநாட்டவர்கள் முதலில் வரிசையில் நிற்கக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். இதுதொடர்பான அம்சங்களைக் குடியுரிமை தேர்வில் சேர்த்துக்கொள்ள பிரிட்டிஷ் அரசு முடிவு செய்துள்ளது.

''பிரிட்டனில் நிரந்தரமாகத் தங்குவதற்குத் திட்டமிட்டுள்ளவர்கள் இந்நாட்டு பழக்க வழக்கங்களைத் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம். குறிப்பாக, எந்த ஒரு சேவையைப் பெறுவதாக இருந்தாலும் முதலில் வரிசையில் நிற்கக் கற்றுக்கொள்ள வேண்டும்'' என பிரிட்டிஷ் அரசு தெரிவித்துள்ளது.

''தேநீர் கடையாக இருந்தாலும், பஸ்ஸில் ஏறுவதாக இருந்தாலும் முண்டியடித்துக்கொண்டு ஓடக்கூடாது. முன்னுரிமை அடிப்படையில் வரிசையாகச் செல்ல கற்றுக்கொள்ளவேண்டும்'' என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

பிரிட்டனில் நிரந்தரக் குடியுரிமை கோரி விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்களுக்கு அந்நாட்டு அரசு குடியுரிமை தேர்வை நடத்தி வருகிறது. இதில் இந்தப் புதிய முறை முன்னாள் உள்துறை செயலாளர் டேவிட் பிளங்கொட என்பவரால் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

பிரிட்டன் வாழ்க்கை முறை, அரசியல், பொப் இசை என பல அம்சங்கள் இதில் இடம்பெறும். இந்தத் தேர்வில் எந்த ஒரு சேவையைப் பெறுவதற்கும் வரிசையில் நின்று செல்வது தொடர்பான கேள்விகளும் இனி சேர்க்கப்படும் என பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

''இந்தத் தெரிவு நாடு முழுவதும் 90 மையங்களில் 45 நிமிடங்கள் நடைபெறவுள்ளது. வெளிநாட்டவர்களில் பெரும்பாலானோர் ஒழுக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இங்கு வந்து குடியேறிய பின்னரும் அவர்கள் தங்கள் நாட்டு வழக்கப்படி எந்த ஒரு சேவையைப் பெறுவதற்கும் பொறுமை இல்லாமல் அடாவடித்தனமாக நடந்துகொள்கின்றனர்'' என ஒரு முன்னணி பத்திரிகை தெரிவித்துள்ளது.

''இதனால் தேவையற்ற பதற்றம் ஏற்படுகிறது. காத்திருப்பவர்களுக்கு மன உளைச்சல் ஏற்படுகிறது. இதைக் குறைப்பதற்காகவே இந்த நடவடிக்கை'' என்றும் ஒரு முன்னணி பத்திரிகை, செய்தி வெளியிட்டுள்ளது.

''எந்த ஒரு சேவையைப் பெறுவதற்கும் வரிசையில் நின்று செல்ல வேண்டும் என்பது சின்ன விடயமாகத் தோன்றலாம். ஆனால், அதுதான் ஒழுக்கத்தின் அடிப்படை. இதை ஒவ்வொருவரும் தாமாகவே உணரவேண்டும். இதன் மூலம் மற்றவர்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளிக்கப்பட வேண்டும்'' என பிரிட்டனின் குடியேற்றத்துறை அமைச்சர் பில் ஊலஸ் கூறியுள்ளார்.

## கண்ணீர் அஞ்சலி



**வண்ணை நாவலர் வித்தியாலயத்தில்**
**ஆங்கில ஆசிரியராக**
**சேவையாற்றி ஓய்வுபெற்ற**
**செல்வி**
**சாவித்திரி விநாசித்தம்பி**
**அவர்களின் மரணச் செய்தியறிந்து**
**துயரடைவதுடன் எமது கண்ணீர்**
**அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.**

*அன்னசத்திர லேன்,*
*யாழ்ப்பாணம்.* (94926)

**திருமதி பழனிவேற்பிள்ளை**
**ஆசிரியர் குடும்பம்.**

## ஆறாம் ஆண்டு நினைவு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 08 | | 23 |
| ★ |  | ★ |
| 02 | | 02 |
| ★ | | ★ |
| 1940 | | 2004 |

**அமரர் அரியகுட்டி நவரட்ணம்**
(முன்னாள் உத்தியோகத்தர், ரெலிக்கொம்)
**திதி: 17.02.2010**

அன்புடன் எம்மை வளர்த்து
அறிவினை எமக்கூட்டி
ஆற்றல்கள் ஆயிரம் ஊட்டி
காவல் தெய்வமாய் இருந்து - எம்மை
காத்து வளர்த்த எம் அன்பு - அப்பாவே
ஆண்டுகள் ஆறு என்ன
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
மறவோம் உங்களை நாம் என்றும்

(94935)

பதிவாளர் ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

மனைவி, மகள்,
மருமகன்.

## மரண அறிவித்தல்

### செல்வத்துரை செல்வேந்திரன்



**(அன்ரப்பா- லக்சுமி உணவக உரிமையாளர்)**

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட செல்வத்துரை செல்வேந்திரன் 14.02.2010 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வத்துரை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு- தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், லீலாவதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், செல்வராசா மற்றும் செல்வநாயகம் (சுன்னாகம் ப.நோ. கூ.ச.) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோகரன் (Engineer, USA), சுசீந்திரன் (சுன்னாகம் ப.நோ.கூ.ச.), உமாகரன், கவிதா (ஆசிரியை), குணலஷ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரதீஸ்வரனின் (இந்து சமய அபிவிருத்தி உதவியாளர்) அன்பு மாமனாரும், கர்ணிகாவின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம்-கமலாதேவி, பாக்கியவதி மற்றும் இராசலிங்கம்- மீனாட்சி, இலகுநாதன்- மங்கையர்க்கரசி, தர்மலிங்கம்- புஸ்பராணி, வைத்தீஸ்வரன், நித்தியானந்தம் - இந்திராதேவி, விவேகா னந்தன்-வரதராணி, பாலசோதி- மகேஸ்வரி, கந்தசாமி, திரவியமலர், சண்முகமலர் ஆகியோரின் மைத்துனரும், ரதிராணி, விக்னேஸ்வரன், ஜெயகாந்தன், சர்மிளா, கஸ்தூரி, மதுரா, கரிகாலன், ராமகீர்த்தன், ராம்பேகன், செல்வக்குமார், சிவனேஸ்வரன், மகேஸ்வரன், விக்கினேஸ்வரி, சிவனேஸ்வரி, மகேஸ்வரி, சர்வாணந்தன், சண்முகேஸ்வரன், கெங்கேஸ்வரன், தமிழ்ச்செல்வன், தமிழரசி, தமிழ்ச்செல்வி, தமிழ்வாணி, தமிழரசன், தமிழ்வாணன், வேந்தன், வாசன், சிவா, குமார், காருண்யா, லாவண்யா, டிவாகரன், நிவேதினி, வியாசன், மதுரன், தனுசா, விதுரன், அபிநயா ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2010) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில். (94934)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா துரைராசா

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் மக்கள் வங்கி)



அளவெட்டி, மாவத்தையைப் பிறப்பிடமாகவும் அராலி கிழக்கை, வசிப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமாகிய கந்தையா துரை ராசா நேற்று (16.02.2010) செவ்வாய்க் கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் கந்தையா - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அராலி கிழக்கு கணபதிப்பிள்ளை (அப்புத்துரை) - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சோதிமலரின் (லண்டன்) அன்புக் கணவரும், ஜெகதீபன் (லண்டன்), விஜிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தாரணி (லண்டன்), சூரியகுமார் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் அபிஷா, அபர்னா, ஹரி ஆகியோரின் அன்புப் பேரனும், தியாகராஜா, சுந்தரலிங்கம், சிவலிங்கம், புனிதவதி ஆகியோரின், அன்புச் சகோதரரும் விக்னேஸ்வரி, சிவகுமாரி, விமலா, காலஞ்சென்ற நவரத்தினம், காந்திமலர், திருநடன சிவம், ஆனந்தசிவம், பாஸ்கரசிவம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திர கோயிலடி,
உடுப்பிட்டி.
தொ.பே. 00442084265851
00447910900155

தகவல்:
ஆனந்தசிவம்
(மைத்துனர்)

### திருமதி பொன்னுத்துரை யோகாம்பிகை



அரியாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை யோகாம்பிகை நேற்று (16.02.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் - செல்லம்மா தம்பதி களின் அன்பு மகளும், இளைப்பாறிய ஆசிரியர் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா - நவநாயகம் தம்பதிகளின் அன்பு மருமகளும் சறோஜினிதேவி, லீலாதேவி, இசைஞானி ருக்மணிதேவி, கலாநிதி குமாரசாமி, காலஞ்சென்றவர்களான போதராணி கமலா தேவி மற்றும் போதரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் விபுலானந்தனின் ஒன்றுவிட்ட சகோதரியும் மாதங்கி, மைத்ரேயி, ஆகியோரின் பெரிய தாயாரும் பத்மநாதனின் அன்பு மைத்துனி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2010) புதன் கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(94937)

130, A.V றோட்,
அரியாலை. 0213737532

தகவல்:
குடும்பத்தினர்.

### யோசேப் லோறன்ஸ் இராசநாயகம்

(இளைப்பாறிய வருமானவரி உத்தியோகத்தர்)



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் லோறன்ஸ் இராசநாயகம் 15.02.2010 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப் - யுஸ்தீனம் தம்பதியினரின் அன்பு மகனும், அன்னம்மாவின் அன்புக் கணவரும், றோய் (லண்டன்), ரவி (பிரான்ஸ்), றோசான் (H.N.B.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மாலினி, சுஜந்தினி, மாதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்சி, வறோனிக்கா, சோபியா, அன்ரு, அன்றியா, ஹரினி ஆகியோரின் பாட்டனாரும், காலஞ்சென்ற மரியநாயகம், அரியநாயகம், றீற்றா, புஸ்பராணி, ஜெசிந்தாமலர் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18.02.2010) வியாழக் கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கள்ளியம்காடு பொது சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (சி/564946)

இல. 10, வண்டின் ஒழுங்கை,
மட்டக்களப்பு. தொ.பே. 0652222199

தகவல்:
சகோதரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்ஷ்மன் - டோனி ஜோடி அசத்தல் இந்தியா முதல் இன்னிங்ஸில் 643/6

தென்னாபிரிக்கா அணிக்கு எதிராக நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில், ஷேவாக்-சச்சின் ஜோடிக்கு நிகராக, நேற்று லக்ஷ்மன்-டோனி ஜோடி தூள்கிளப்ப, இந்திய அணி தனது முதல் இன்னிங்ஸில் 06 விக்கெட்டுக்கள் இழப்



புக்கு 643 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

முன்னதாக தனது இன்னிங்ஸிற்காக ஆடிய தென்னாபிரிக்க அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 296 ஓட்டங்களைச் சேர்த்தது.

தொடர்ந்து தனது இன்னிங்ஸை ஆடிய இந்திய அணி, நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவின் போது 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 342 ஓட்டங்களைக் குவித்திருந்து. லக்ஷ்மன் (9), மிஷ்ரா (1) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இந்திய அணி, ஓட்டக் கணக்கை உயர்த்தத் தொடங்கியது.

முந்தைய நாள் களத்தில் இருந்த மிஷ்ரா (00) சிறிது நேரத்தில் ஆட்டமிழந்தாலும், மறுமுனையில் நின்று - நிலைத்து ஆடிக்கொண்டிருந்த லக்ஷ்மனுடன்இணைந்த அணித்தலைவர் டோனி சிறப்பாக அவரோடு ஒத்துழைத்து ஆடினார்.

இவர்களது ஓட்டக் குவிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு தென்னாபிரிக்க அணி பலவிதமான கள வியூகங்களை வகுத்தும் முடியாமல் போனது.

இறுதியில் லக்ஷ்மன் 143 ஓட்டங்களையும் டோனி 132 ஓட்டங்களையும் குவித்த நிலையில், இந்திய அணி 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 643 ஓட்டங்களைக் குவித்த நிலையில் தனது இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

பின்னர் 341 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி, நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது விக்கெட் இழப்பின்றி 6 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்மித் (5), பீற்றர்சன் (1) ஆகியோர் களத்தில் உள்ளனர்.

இன்று ஆட்டத்தின் நான்காம் நாள் ஆகும்.

# முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து 553/7

ஹாமில்டன், பெப். 16

பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில், நியூஸிலாந்து அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 553 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

நியூஸிலாந்து-பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

முன்னதாக தனது முதல் இன்னிங்ஸிற்காக ஆடிய நியூஸிலாந்து அணி, அன்றைய ஆட்ட நேர முடிவின்போது நியூஸிலாந்து அணி, 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 258 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

குப்தில் 80 ஓட்டங்களுடனும் மக்கலம் 58 ஓட்டங்களுடனும் சிறப்பாக ஆடி, ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

தொடர்ந்து நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த நியூஸிலாந்து அணி, 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 553 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை இடைநிறுத்தியது.

முதல் நாள் களத்தில் இருந்த மக்கலம் 185 ஓட்டங்களையும் குப்தில் 189 ஓட்டங்களையும் குவித்து ஆட்டமிழந்தனர்.

பின்னர் வந்த ரெவ்பி (31), படேல் (12) ஆகியோர் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பின்னர் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

ஆரம்ப வீரரான இம்ருன் கெய்ஸ் 28 ஓட்டங்களைப் பெற்றவேளை விற்றோரியின் பந்துவீச்சில் ரெய்லரிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் பங்களாதேஷ் அணி, நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது ஒரு விக்கெட் இழப்புக்கு 87 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

களத்தில் ஆரம்ப வீரர் தமிப் இக்பால் அரைச்சதம் (56) கடந்த நிலையிலும், சித்திக் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது உள்ளனர்.இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆகும்.

# இறுதி மோதலில் 40 ஆயிரம் பேர் பலி என்பது ஐ.நா. முன்னாள் அதிகாரியின் தனிப்பட்ட கருத்து

## இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி விளக்கம்

கொழும்பு, பெப். 17

இலங்கையின் உள்நாட்டு மோதலின் இறுதிக் காலத்தில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர் என இலங்கைக்கான ஐ.நாவின் முன்னாள் பேச்சாளர் கோர்டன் வெய்ஸ் தெரிவித்திருந்தமை அவரது தனிப்பட்ட கருத்து எனக் குறிப்பிட்டுள்ள ஐ.நா., எனினும் ஏற்றுக் கொள்ள முடியாதளவிற்கு அதிக எண்ணிக்கையான உயிரிழப்புகள் அச்சமயம் ஏற்பட்டன எனவும் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்துத் தெரிஷிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தின் முன்னாள் பேச்சாளர் கோர்டன் வெய்ஸ் ஆஸ்திரேலியத் தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த பேட்டி தொடர்பாகப் பலர் எம்மிடம் விசாரித்தனர்.

ஊடகத்திற்கு அவர் தெரிவித்த இந்தக் கருத்துகள் தனிப்பட்டவை; ஐக்கிய நாடுகளின் நிலைப்பாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துபவை அல்ல.

ஒரு குறிப்பிட்ட சூழ்நிலை தொடர்பான ஐ.நாவின் ஒட்டுமொத்த கருத்து ஐக்கிய நாடுகள் செயலாளரின் அல்லது மூத்த அதிகாரிகளின் அறிக்கை மூலமாகவே வெளியாகும்.

பொதுமக்களின் உயிரிழப்புகள் தொடர்பாக ஐ.நாவின் முன்னாள் பேச்சாளர் தெரிவித்துள்ளவை தெடர்பாகப் பலர் கேள்வி எழுப்பினர்.

மோதலின் இறுதிக் காலத்தில் அரசு இலட்சக்கணக்கான மக்கள் வாழ்ந்த பகுதிகளுக்கு அருகில் கனரக ஆயுதப் பிரயோகத்தை மேற்கொண்டதாலும், விடுதலைப் புலிகள் பொதுமக்களை வெளியேற அனுமதிக்காததாலும் ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்குப் பெருமளவு உயிரிழப்புகள் ஏற்பட்டன என்பதை ஐ.நா. தொடர்ந்தும் வெளிப்படையாகத் தெரிவித்து வந்துள்ளது.

உள்ளக ரீதியாக மதிப்பிடப்பட்ட உயிரிழப்புகள் குறித்து நாங்கள் தெரிவித்து வரும் அதேவேளை, இவற்றை உறுதி செய்வதற்கு சூழ்நிலைகள் எம்மை அனுமதிக்கவில்லை.

இதனால் உயிரிழப்புகள் குறித்த உறுதிப்படுத்தப்பட்ட புள்ளி விபரங்கள் எம்மிடமில்லை.- என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

# ஊடகவியலாளர்களைக் கைது செய்வதாயின் முற்கூட்டியே ஜனாதிபதிக்கு அறிவிக்க வேண்டும்

## பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாம்

கொழும்பு, பெப். 17

ஊடகவியலாளர் எவரையாவது இனி மேல் கைதுசெய்வதாயின் அல்லது கைது செய்து தடுத்து வைப்பதாயின் அதற்கு முன் அது தொடர்பாக ஊடகத்துறை அமைச்சர் என்ற வகையில் தமக்கு அறிவிக்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பொலிஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

கைது மாத்திரமின்றி ஊடகவியலாளர்களுக்கு எதிராக எடுக்கப்படவுள்ள சட்ட நடவடிக்கைகள் அனைத்தினதும் முழு விவரங்களும் தனக்கு முற்கூட்டியே தெரியப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி பொலிஸ் மா அதிபருக்குப் பணிப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தால் நேற்று விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ராவய' சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளைக் கவனத்தில் எடுத்தே ஜனாதிபதி மேற்படி தீர்மானத்தை எடுத்தார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குற்றச்சாட்டு ஏதும் சுமத்தப்படாமலேயே

# 'லங்கா' பத்திரிகையின் ஆசிரியர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்

கொழும்பு, பெப். 17

ஜனாதிபதித் தேர்தலை அடுத்து கைது செய்யப்பட்டு மூன்று வாரங்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டிருந்த 'லங்கா' பத்திரிகையின் ஆசிரியர் சந்தன சிறி மல்வத்த, குற்றம் ஏதும் சுமத்தப்படாத நிலையில் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

அவரைக் கைதுசெய்த குற்றப்புலனாய்வுப் பொலிஸார் அவருக்கு எதிராகக் குற்றப்பத்திரம் எதையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காத நிலையில் நேற்று கொழும்பு, கங்கொடவில நீதிவான் அவரை விடுதலை செய்து உத்தரவிட்டார்.

ஜே.வி.பி. ஆதரவுப் போக்குடைய 'லங்கா' சிங்களப் பத்திரிகையின் ஆசிரியர் சிறிமல்வத்த கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தமையை ஆட்சேபித்து கடந்த திங்கட்கிழமை அவரது மனைவி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ-சி)

# புதிய நியமனங்கள், இடமாற்றங்களை தேர்தல் முடியும்வரை நிறுத்துங்கள்

## திணைக்களத் தலைவர்களுக்கு தேர்தல் ஆணையர் பணிப்புரை

பொதுத் தேர்தல் முடிவடையும் வரை அரச ஊழியர்களுக்கான பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், நேர்முகத் தேர்வுகள் மற்றும் புதிய நியமனங்கள் என்பவற்றை இடைநிறுத்துமாறு சகல அரச நிறுவனத் தலைவர்களுக்கும் தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அரச நிறுவனத் தலைவர்களுக்கு, தேர்தல்கள் ஆணையாளர் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட கடந்த 9 ஆம் திகதி முதல் தேர்தல் இடம்பெற்று இறுதி முடிவுகள் வெளியாகும் வரை மேற்படி சுற்றுநிருபத்தில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளை அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களும் பின்பற்றவேண்டும் என தேர்தல்கள் செயலகத்தின் ஆலோசகர் பந்துல குலதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர், அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கும் இந்த சுற்றுநிருபத்தின் மூலம் தேர்தல்கள் செயலகத்தால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், இன்னும் சில தினங்களில் இடம்பெறவிருந்த மக்கள் சபை செயலாளர்களுக்கான பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகத் தேர்வுகள் இரத்துச் செய்யப்படவேண்டும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கான உத்தரவு தேச நிர்மாண அமைச்சுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி சுற்றுநிருபத்திலுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றத் தவறுகின்ற அரச நிறுவனத் தலைவர்களுக்கு எதிராகத் தேர்தல்கள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது. (ஐ-சி)

# அடிப்படை ஜனநாயகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு தினத்தன்று வாக்காளர்கள் தமது விருப்பத்தைச் சுதந்திரமாக வெளிப்படுத்த முடிந்த போதிலும், வாக்களிப்பு தினத்திற்கு முந்திய காலப் பகுதியில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக 2010 ஜனாதிபதித் தேர்தல் ஒட்டுமொத்தமாக ஜனநாயகத் தேர்தலொன்றுக்கான முக்கிய அடிப்படைப் பண்பியல்பைக் கொண்டிருக்கவில்லை.

கடந்த காலத் தேர்தல்களின் போது இனம் காணப்பட்ட பல பிரச்சினைகளே இம்முறையும் காணப்பட்டன.

இலங்கையின் தேர்தல் ஆணையாளரினாலும் இனம் காணப்பட்டுள்ள இந்தப் பிரச்சினைகள் குறித்து உடனடிக் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கிறோம். இது விடயத்தில் வேண்டுகோள் விடுக்கப்படும் பட்சத்தில் உதவுவதற்கு பொதுநலவாயம் தயாராகவே உள்ளது.

தேர்தல் வாக்களிப்பு மற்றும் வாக்கு எண்ணுதலுக்கான நிர்வாக ஏற்பாடுகள் அனைத்தும் - சிறந்த முறையில் அமைந்திருந்தன. அனைத்து இலங்கையர்களும் தமது வாக்கைச் செலுத்துகின்றமையை உறுதி செய்வதற்காகத் தேர்தல் ஆணையாளரும், அவரது ஊழியர்களும் முழுமையான நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

இலங்கையில் தேர்தலுக்குப் பின்னர் உருவாகியுள்ள சூழ்நிலைகள் - குறிப்பாகப் பிரதான எதிர்க்கட்சி வேட்பாளர்களின் கைது - போன்ற சம்பவங்கள் பதற்றத்தை அதிகரித்துள்ளன.

சட்டத்தின் ஆட்சியும் உரிய நடைமுறையும் பின்பற்றப்படுகின்றமை முக்கியமானது.

இலங்கை உள்நாட்டு மோதலுக்குப் பின்பு இடம்பெற்ற தேர்தலுக்குப் பின்னர் தேசிய நல்லிணக்கமும் அமைதியும் எட்டப்பட்டுவது அவசியமானது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவிற்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்க வேண்டும்

## மல்வத்த பீடாதிபதி வலியுறுத்து

கொழும்பு, பெப். 17

இராணுவப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மன்னிப்பு வழங்க வேண்டும் - என்று கண்டி மல்வத்த பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவிற்கு மன்னிப்பு வழங்குவதன் மூலம் ஜனாதிபதியின் நன்மதிப்பு மேலும் உயர்வடையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெருந்தோட்ட அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவருமான டி.எம்.ஜயரட்ன, மல்வத்த பீடாதிபதியைச் சந்தித்து தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து விளக்கமளித்தபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது ஓர் உள்விவகாரப் பிரச்சினை எனவும், சர்வதேச ரீதியில் இந்தப் பிரச்சினை பிழையாக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக சரத் பொன்சேகா கைது விவகாரம் ஓர் பழிவாங்கல் அரசியல் நடவடிக்கையாக வெளிநாடுகளில் சித்திரிக்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரச்சினையின் தன்மை குறித்தோ குற்றச்சாட்டுக்கள் குறித்தோ தமக்குத் தெரியாது என்றும் மல்வத்த மகாநாயக்கர் தெரிவித்துள்ளார்.

எனினும், மனிதர்கள் என்ற ரீதியில் நாம் அனைவரும் பிழைகள் செய்வதுண்டு எனவும், அவற்றுக்கு மன்னிப்பு வழங்க வேண்டியது மிகவும் உன்னதமான குணங்களில் ஒன்று எனவும் அவர் கூறினார்.

முன்னாள் பிரதமர் அமரர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் சிவில் உரிமை பறிக்கப்பட்ட போது பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர் எனவும், அப்போது ஐக்கிய தேசியக் கட்சி தம் மீது குற்றம் சுமத்தியது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சி ஒன்றின் சார்பில் தாம் குரல் கொடுக்கவில்லை எனவும், சரத் பொன்சேகா என்ற தனிமனிதனின் நலனைக் கருத்திற் கொண்டு தாம் இந்தக் கருத்துக்களை வெளியிடுகிறார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசியப் பிரச்சினையின்போது தாம் ஜனாதிபதிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கினார் என்றும் மகா நாயக்கர் கூறினார்.

## பொன்சேகா..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளின் பின்னணி குறித்து, தமது புதுடில்லி விஜயத்தின் போது அவர் இந்திய அரசின் மூத்த தலைவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் தகுந்த விளக்கங்களை அளிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவில் பாதுகாப்புத்துறை தொடர்பான பெரும் கண்காட்சியான 'டிபெக்ஸ்போ - 2010' புதுடில்லியில் இடம்பெறுகின்றது. திடீர் விருந்தினராக அதற்குக் கோத்தபாய ராஜபக்ஷ வருகை தந்தார் என்று கூறப்படுகின்றது.

தற்போதைய தமது ஐந்துநாள் இந்திய விஜயத்தின்போது லும்பினியில் உள்ள புத்த காயாவுக்கும் அவர் செல்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-சி)

## இடம்பெயர்ந்தோர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் முழுமையாக அகற்றப்படவேண்டியுள்ளது என்றார் அமைச்சர் ரிஷாத்.

அப்பகுதிகளில் நிர்வாகக் கட்டமைப்புகளை முழுமையாக ஏற்படுத்திவிட்டோம். அவை செயற்படுகின்றன. பாடசாலைகள், வைத்தியசாலைகள் இயங்குகின்றன. - என்றும் அவர் குறிப்பிட்டார்.

மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் யு.எல்.எம். ஹலால்தீன் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக அனைவரும் மீள்குடியேற்றப்பட்டிருப்பர், அவர்கள் தத்தமது பிரதேசங்களில் இருந்தே தேர்தலில் வாக்களிக்க முடியும் - என்கிறார்.

### மெனிக்பாம் முகாமில் நிதிப்பற்றாக்குறை ஏற்படலாம்

பெப்ரவரியின் முதல் வாரம் வரை முகாம்களில் ஒரு லட்சத்து ஆறாயிரம் இடம்பெயர்ந்த மக்கள் இருந்தனர் என அரச அதிபர்களை மேற்கோள்காட்டி ஐ.நா. தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, பெப்ரவரி மாதத்திற்குப் பின்னர், மெனிக் பார்ம் முகாமில் செயற்படும் மனிதாபிமான அமைப்புகள் நிதிப்பற்றாக்குறையை எதிர்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.நாவின் மனிதாபிமான அலுவலகம் இதன் காரணமாக அம்முகாம்களில் உணவு,கல்வி மற்றும் சுகாதார சேவைகள் பாதிக்கப்படலாம் எனத் தெரிவித்துள்ளது.

மீளக்குடியேற்றம் குறித்து மக்கள் திருப்தி வெளியிட்டுள்ள போதிலும், அடிப்படை வசதிகளின்மை, போக்குவரத்து வசதியின்மை போன்ற குறைபாடுகள் காணப்படுகின்றன.

இதன் காரணமாக அந்த மக்கள் மத்தியில் குழப்ப நிலை காணப்படுகிறது என ஐ.நா. குறிப்பிட்டுள்ளது. (அ-சி)

## கிளிநொச்சி வலய பாடசாலைகளின் மாணவர்களுக்கு செயன்முறைப் பரீட்சை

கிளிநொச்சி, பெப். 17

கிளிநொச்சி கல்வி வயப் பாடசாலைகளில் கடந்த வருடம் ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சையில் அழகியல் பாடங்களான சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும் ஆகியவற்றுக்கு தோற்றிய மாணவர்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை நாளை வியாழக்கிழமை கிளிநொச்சி புனித திரேஸா பெண்கள் பாடசாலையில் பெற்றுக்கொள்ளலாம் என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குருகுலராஜா கேட்டுள்ளார். (1)

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதால் அவர்களுக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் பிரசந்த ஜெயக்கொடி தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரியவின் பணிப்புரையின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

எனினும் தேர்தல் முடிவடைந்த பின்னர் மக்களால் தெரிவு செய்யப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கடந்த காலங்களில் எந்தவொரு அரசாங்கமும் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை நீக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டமை தொடர்பில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பில் தேர்தல் ஆணையாளருக்கும் தெரியப்படுத்த உள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை,

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கான பாதுகாப்பு தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (அ-1)



ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய வேண்டும் எனக்கோரி மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடு செய்திருந்த மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நேற்று கொழும்பில் இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். அதன்போது எடுக்கப்பட்ட படம் இது.

## நீதிமன்ற..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரிகளும் வாகனமும் வழங்கப்பட வேண்டுமென மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்நிலையில், வழக்கு இன்னமும் முடிவுறாமல் நிலுவையில் இருக்கின்ற வேளையில் திடீரென எனது பாதுகாப்பு அதிகாரிகள் கடமையிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டதுடன், வாகனமும் வாபஸ் பெறப்பட்டிருப்பது அப்பட்டமான - சட்டவிரோதமான செயல். இது தேர்தலை முன்னிட்டு நடத்தப்பட்டுள்ள அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகும்.

மேன்முறையீட்டு நீதிமன்றம் எனது பாதுகாப்புத் தொடர்பில் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இதன்படி எனது பாதுகாப்புத் தொடர்பான வழக்கு முடிவுறும் வரை பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்ட பாதுகாப்பை எனக்கு வழங்க வேண்டும்.

இதுதொடர்பில் சட்ட நடவடிக்கையை எனது சட்டத்தரணிகள் எடுக்கின்றார்கள். இந்நிலையில் எனது உயிருக்கு ஏற்படக்கூடிய அனைத்து ஆபத்துகளுக்கும் அரசதரப்பே பொறுப்பு என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதால் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்ததன் பேரில் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்ட பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளது. அந்த பாதுகாப்பை மீண்டும் வழங்குமாறு ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தனா பொலீஸ் மா அதிபர் மஹிந்த பாலசூரியவைக் கேட்டுள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவுப்படி வாகனத்துடன் எனக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டது தவறு என்று பொலீஸ் மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்திதல் ஜெயலத் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் உத்தரவு இன்றி எனது பாதுகாப்பை விலக்கியமை நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என்று ஜெயலத் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-1)

## விடுதலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆண்டு, மே மாதம் நடைபெற்ற இறுதிக் கட்டப் போரில் விடுதலைப் புலிகள் வீழ்த்தப்பட்ட போதிலும், தமிழீழம் குறித்த அவர்களது கனவு கலையவில்லை.

வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் தற்போது கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்காகவே இராணுவத்தினர் பெருமளவில் நிறுத்தப்பட்டுள்ளனரே தவிர, போரிடுவதற்காக அல்ல. நமது நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு இராணுவத்துக்கு உள்ளது.

ஏதாவது ஒரு குழுவினர் மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராடத் துணிந்தால், அதையும் எதிர்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும் - என்றார். (அ-சி)

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுள்ளன என்றும் -

ஆகையினால், இத்தேர்தலில் அறிவிக்கப்பட்ட முடிவை ரத்துச்செய்து, தம்மை இத்தேர்தலில் வெற்றி பெற்றவராக அறிவிக்கவேண்டும் என்றும் -

மனுவில் சரத் பொன்சேகா கோரியிருக்கின்றார்.

தேர்தல்கள் ஆணையாளரை அச்சுறுத்தி, பலவந்தமான முறையில் தேர்தல் முடிவுகள் தொடர்பாக அவரிடம் ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளன என்றும் பொன்சேகா தரப்பிலான மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவில் எதிர்மனுதாரர்களாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இத்தேர்தலில் போட்டியிட்ட ஏனைய இருபது வேட்பாளர்கள், தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்ஸன் சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ, சட்டத்தரணி ரஸீக் ஸாரூக், சட்டத்தரணி காலிங்க இந்த திஸ்ஸ ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ-சி)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
வட்மராட்சி வாழ் உதயன் வாசகர்களே, விளம்பரதாரர்களே விற்பனை முகவர்களே!
உங்கள் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்ற நெல்லியடியில் உள்ள உதயன் உப பணிமனையை நாடுங்கள். உங்கள் பொன்னான நேரத்தை மிச்சப்படுத்துங்கள்.
செய்திகள் சார்ந்த தகவல்கள், விளம்பரங்கள், விற்பனை மற்றும் தேவைகளை குறுகிய நேரத்தில் நெல்லியடி உப பணிமனையில் உடனுக்குடன் நிறைவேற்றுங்கள்.
நாங்கள் எப்பொழுதும் உங்களுக்கு அருகில்
பிரதான வீதி
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
நெல்லியடிக்கு வாருங்கள்.

Computer Engineer -USA
ICTA வழங்கும் Scholorship
Per Module ~~Rs.15000~~ Rs.3800
கற்கும் அனைவருக்கும் Free Courses
ICDL-Computer Driving Lincence), HARDWARE, A+,N+ (ComTIA)
MCS Supported By UNDP/JRRP
விபரங்களுக்கு நேரில் இச்சலுகை 19.02.2010 வரை மட்டுமே
324, பலாலி வீதி,பரமேஸ்வராசந்தி அருகில் யாழ்ப்பாணம், Bus Root - 764 T.P-772395895

பல் வைத்திய நிலையம் AND பல் கட்டுதல்
நவீன வசதிகளுடன் பல் வைத்திய நிபுணரினால் ஒவ்வொரு நாளும் சிகிச்சை நடைபெறும்.
சனி, ஞாயிறு முழுநாளும், கிழமை நாள்களில் 3 -6 pm
கஜமுகன் மெடிகெயர்+டென்ரல் கிளினிக், ம.ம.வி.வீதி, நெல்லியடி. 0212264875

DELL BRANDED TOWER PCs 23,500.00
DELL BRANDED USED PCs, 2.0GHz, 512MB, 30GB, WITH 15" SQUARE LCD MONITORS WITH WARRANTY ONLY 23,500.00
இச்சலுகை எதிர்வரும் வெள்ளிக்கிழமை மட்டுமே
NETWORK ACCESSORIEs, MOBILE PHONEs, PHONE RECEIVERs
ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்
e city No. 338A, Kasthuriar Road, Jaffna. T.P: 0212228147

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.02.2010இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org